# பிரிட்டன் வரலாறு

[கி.பி. 1485 முதல் 1603 வரை]

## (பிற்சேர்க்கை)

## நவீன காலத்தின் தொடக்கம்

ஆசிரியர்

இரா. அண்ணாமலை, எம்.ஏ., பி.டி.,

துணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# பிரிட்டன் வரலாறு

## [கி.பி. 1485 முதல் 1603 வரை]

## (பிற்சேர்க்கை)

## நவீன காலத்தின் தொடக்கம்

ஆசிரியர்

இரா. அண்ணாமலை, எம்.ஏ., பி.டி.,

துணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

Supplement—April, 1977
Number of Copies—2,000

© Government of Tamilnadu

# HISTORY OF BRITAIN (1485 - 1603 A.D.)
## (SUPPLEMENT)

R. ANNAMALAI

**Price Rs. 2-00**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional Paper made available by the Government of India.

*Printed by*
**Kandeepam Printers,**
3128-C, Anna Nagar,
Madras-600 040.

# பொருளடக்கம்


பக்கம்

1. மறுமலர்ச்சியும் கடல்வழிகளின் சிறப்பும் ... 1

2. ஏழாம் ஹென்றியும் டியூடர் ஆட்சி நிர்வாக முறையும் (1485–1509) ... 3

3. மறுமலர்ச்சி இயக்கம் ... 11

4. புது நாடுகள் கண்டுபிடிக்கப்படல் ... 15

5. எட்டாம் ஹென்றி மன்னர் (1509–1547) ... 18

6. ஐரோப்பாவில் சமயச் சீர்திருத்தம் ... 28

7. இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்தம் : எட்டாம் ஹென்றியும் போப்பாண்டவரும் ... 36

8. ஆறும் எட்வர்டு (1547–1553) ... 52

9. முதலாம் மேரி (1553–1558) ... 59

10. எலிசபெத் அரசியாரின் ஆட்சி (1558–1603) ... 63

11. ஸ்காட்டிய சமயச் சீர்திருத்தம் ... 68

12. எலிசபெத் அரசியாரின் கொள்கை ... 73

# நவீன காலத்தின் தொடக்கம்
## (1485-1603)

# 1. மறுமலர்ச்சியும் கடல்வழிகளின் சிறப்பும்

மேற்கத்திய நாகரிகத்திற்குப் பொதுவாகவும், பிரிட்டிஷ் மக்களின் நாகரிக வளர்ச்சிக்குச் சிறப்பாகவும் பதினாறும் நூற்றாண்டு சீரிய இடத்தைப் பெறுகின்றது. ஏனெனில், இடைக் காலத்தையும் நவீன யுகத்தையும் இணைக்கும் பாலமாக அமைகின்றது பதினாறும் நூற்றாண்டு. அக் காலகட்டத்தில்தான் பல்வேறு மாறுதல்கள் விரைந்து தென்படலாயின. கிறிஸ்துவ சமயத்தின் ஒருமை குன்றிப் பிளவு ஏற்பட்டதும், சக்தி வாய்ந்த தேசிய அரசுகள் தோன்றி அவை ஒன்றோடொன்று பகைத்துக் கொள்ளத் தொடங்கியதும் இக்காலத்தின்தான். புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு வரலாற்றின் போக்கும் விரிவடைந்து அதன் விளைவாக ஐரோப்பியரின் பூசல்களும் ஐரோப்பிய நாகரிகமும் புதிய நாடுகளில் பரவத் தொடங்கியதும் இக்காலத்தில்தான்.

இம் மாறுதல்கள் பிரிட்டிஷ் மக்களுக்குப் பெரும் முக்கியத் துவம் வாய்ந்தவையாம். பிரிட்டிஷ் வரலாற்றின் சிறப்புமிக்க காலத்தை அவர்கள் இப்போதுதான் தொடங்கலாயினர். அதற்கான ஆயத்தங்கள் பதினாறும் நூற்றாண்டிற்கு முந்தைய நூற்றாண்டுகளிலேயே வெளிப்படையாகத் தெரியாத முறையில் நடைபெற்று வந்தன. தீவாக இருந்தமையால் பிரிட்டன் ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடாமல் தனித்து நின்று ஒதுங்கியிருந்தது. பதினாறும் நூற்றாண்டுவாக்கில் தனித்து ஒதுங்கியிருந்த நிலையும் ஒழிந்து மறைந்தது. இனி, பிரிட்டிஷ் மக்களின் நடவடிக்கைகளும், குணச் சிறப்புகளும், அவர்களின் நிறுவனங்களும் அனைத்துலக நாடுகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் வாய்ப்பைப் பெறலாயின. கீழ்க்காணும் மூன்று கருத்துகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராயுங்கால் அந் நூற்றாண்டின் முக்கியத் துவத்தை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். முதலாவது 1485ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் தீவுகள் இலத்தீன் கிறிஸ்துவ சமயத்தின்

பிடிப்பில் சிக்குண்டு போப்பாண்டவரைச் சமயத் தலைவராக ஏற்றிருந்த நிலை இருந்தது; ஆனால், 1603ஆம் ஆண்டில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து ஆகிய பிரிட்டிஷ் தீவுகளின் பகுதிகள் பிராடஸ்டன்ட் சமய நாடுகளாய் நிலைபெறலாயின. அயர்லாந்தில்கூட சமயப் பிணக்குகளினால் சச்சரவுகள் மூண்டு குழப்பமான சூழ்நிலை நிலவலாயிற்று. சமய ஒருமை குன்றி, கிறிஸ்துவ சமயம் பிளவுபட்டதும் இந் நூற்றாண்டில்தான். இரண்டாவது, 1485ஆம் ஆண்டுவாக்கில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய நான்கும் தனி நாடுகளாயிருந்தன. ஆனால், 1603ஆம் ஆண்டில் அந் நான்கு நாடுகளும் ஒரு குடையின்கீழ் இணைந்தன. வேல்ஸ் இங்கிலாந்துடன் இரண்டறக் கலந்தும், அயர்லாந்து அடிமையாக்கப்பட்டும், மூன்று நூற்றாண்டுகள் தொடர்ந்த போராட்டங்களுக்குப் பின்னர் ஸ்காட்லாந்தும் இங்கிலாந்துடன் இணைந்து நட்புறவு கொண்டதும் இக்காலத்தில்தான். மூன்றாவது, உலகத்தின் பிரிட்டிஷ் தீவுகள் ஐரோப்பாவினின்றும் ஒதுங்கியிருந்த நிலை 1485ஆம் ஆண்டில் இருந்தது. ஆனால், 1603ஆம் ஆண்டில் இந் நிலையும் மாறி, இங்கிலாந்து கடல்களைக் கடந்து சென்று குடியேற்றங்களை நிலைநாட்டி, புதிய போக்குவரத்தினை உருவாக்கிக் கடல் ஆதிக்கம் பெற்ற நாடாகச் சிறப்புப்பெற்றது.

இத்தகைய இடுக்கண் நிறைந்த காலகட்டத்தில்தான் இங்கிலாந்து டியூடர் அரச பரம்பரையினரால் ஆளப்படலாயிற்று. அவ்வரசர்கள் தனித் திறமையும் தகுதியும் மிக்கவர்கள். டியூடர் அரசர்கள் மூன்று தலைமுறைக் காலம் ஆட்சி நடத்தினர். ஐந்து அரசர்கள் ஆட்சி புரிந்தனர். அந்த ஐவரில் இருவர் பேரரசர்களாகத் திகழ்ந்து ஆங்கில அரசர்களிலேயே சிறப்புமிக்கவர்கள் எனப் போற்றப்பட்டவர்கள் எனில் மிகையாகாது.

# 2. ஏழாம் ஹென்றியும் டியூடர் ஆட்சி நிர்வாக முறையும் (1485-1509)

## ஏழாம் ஹென்றி

ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் பல சம்பவங்கள் முடிவுற்றுப் புதிய நிகழ்ச்சிகள் பல தொடங்கலாயின. அவருடைய ஆட்சி விறுவிறுப்பற்றதாகக் காணப்படினும், நாட்டில் ஏற்கெனவே குமுறிவந்த உள்நாட்டுப் போர் முடிவுற்று, நாட்டில் நல்லமைதியும் நிலையான ஆட்சியும் தோன்றலாயின. பதினாறும் நூற்றாண்டில் நிலவிய சங்கடமான சூழ்நிலைகளைச் சமாளித்து இங்கிலாந்தை வெற்றிப் பாதையில் நடத்திச் செல்லும் திறம் படைத்த சீரிய ஆட்சிமுறையை உருவாக்கிய பெருமை ஏழாம் ஹென்றியையே சாரும். அவர் ஆட்சியின்போது இங்கிலாந்தில் ஏற்பட்ட வரலாற்றை மாற்றியமைக்கும் இரு மாபெரும் சம்பவங்கள் நிகழ்ந்தன. மறுமலர்ச்சியும் புதிய நாடுகளைக் கண்டு பிடித்த வரலாறுமே அவ்விரு சம்பவங்களாம்.

ஹென்றி ரிச்மாண்டு என்று வழங்கப் பெற்ற ஹென்றி டியூடர், கி.பி. 1485ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் வெஸ்ட்மின்ஸ்டர் திருச்சபையில் ஏழாம் ஹென்றி என்னும் பட்டப் பெயரோடு முடிசூட்டப் பெற்றார். ஆங்கில அரசுகட்டிலேறும் உண்மையான உரிமை அவருக்கில்லையாயினும் பாஸ்வொர்த் போர்க்களத்தில் அவர் பெற்ற வெற்றியின் பயனாக ஆங்கில அரசினை அடைந்தார். ஐந்தாம் எட்வர்டின் வாரிசும் அடுத்த அரசியல் உரிமையாளருமாகக் கருதப்பெற்றவர் அவருடைய மூத்த மகளான யார்க் இளவரசி எலிசபெத் அம்மையாரேயாம். அவரையடுத்துக் கிளாரன்ஸ் பிரபுவின் மகன் எட்வர்டு (வார்விக் பிரபு) அரசுக்குரியவர். 1485ஆம் ஆண்டில் இந்த எட்வர்டு பதினைந்து ஆண்டுகளே நிரம்பியவராயிருந்தார். தம் ஆதிக்கத்திற்கு எட்வர்டால் இடையூறு நேரிடலாம் என்று அஞ்சிய ஏழாம் ஹென்றி அவரை இலண்டன் கோட்டையில் சிறைப்படுத்தினர். புதிய மன்னர் லங்காஸ்டிரிய வழியில் வந்தவர். அவருடைய

தாய் மார்கரெட் போபார்ட் என்பார், மூன்றும் எட்வர்டின் மகன் காண்ட் ஜான் என்பாரின் பேத்தியின் மகள். அவருடைய தந்தையரான எட்மண்ட் டியூடர் (ரிச்மண்ட் பிரபு) என்பார் ஐந்தாம் ஹென்றியின் மனைவியான காதரின், இரண்டாம் கணவர் சர் ஓவன் டியூடர் என்பாருக்கும் அவ்வரசிக்கும பிறந்தவர். மேற் கூறிய அரசகுல வழிமுறைகளைத் தவிர, ஏழாம் ஹென்றி அரசராக முடிசூட்டிக்கொண்டதை இங்கிலாந்து பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது.

## ஏழாம் ஹென்றியின் குணநலன்கள்

ஏழாம் ஹென்றி சுயநலமி; அறிவாற்றல்களைக் குறுகிய துறைகளில் செலுத்தித் தம் அரசாட்சியை நிலைப்படுத்திக் கொள்வதில் அவர் கண்ணுங்கருத்துமாயிருந்தார். பேராசை பிடித்தவரான அவர், தமக்குத் தேவையான நிலையை ஆக்கிக் கொண்டு, பெருஞ் செல்வத்தைத் திரட்டி, ஆதிக்க வரம்பினை அகற்றிவிட்டு, ஆட்சி செய்ய அமைதியான சூழ்நிலை அவசியம் என்பதை உணர்ந்த அத்தகைய சூழ்நிலையை நாட்டில் நிலைநாட்ட அரும்பாடுபட்டார். அவருடைய ஆட்சிக் கொள்கையின் அடித் தளமே அதுதான் என்று கூறின் அது மிகையன்று. தம் பகைவர் களான யார்க்கியரை அடக்கி ஒடுக்கவும், செல்வத்தைப் பெருக்கிக்கொள்ளவும் அவர் முயற்சி செய்தபோதும், பிற துறை களில் சிறிதும் தவறுமல் நீதி வழங்க வேண்டுமென வற்புறுத் தினர். உள்நாட்டு வாணிகத்திற்கும், வெளிநாடுகளுடன் வாணிகத் தொடர்புகொள்ளும் முயற்சிகளுக்கும் ஏழாம் ஹென்றி ஊக்கம் அளித்ததோடு, புதிய நாடுகளைக் காணும் முயற்சிகளையும் அவர் ஊக்குவித்தார். மக்கள் அவரது ஆட்சியை இதனல் விரும் பினர். நூற்றைம்பது ஆண்டுகளாக உள்நாட்டுக் குழப்பங் களாலும் வெளிநாட்டுப் போர்களாலும் வருந்தியிருந்த மக்கள் ஏழாம் ஹென்றியின் வல்லாட்சியை வரவேற்றனர்.

## திருமண உறவு

தமக்கிருந்த ஆட்சியுரிமையை நிலைநாட்டிக்கொள்ளும் வகை யான் ஏழாம் ஹென்றி யார்க்கியர் வழிவந்த நான்காம் எட்வர்டின் மகளான எலிசபெத்தை மணந்துகொண்டார். இதனல் யார்க் கியர் பகையை நீக்க முடிந்தது. அவர் லங்காஸ்டிரிய வழிவந்தவ ராகையால் இத் திருமணத்தால் யார்க்கிய-லங்காஸ்டிரிய அரச குலங்கள இணைந்து ஒருமைப்பட வழிபிறந்தது.

**கலகங்கள் அடக்கப்படல்**

கி.பி. 1486ஆம் ஆண்டில் மூன்றும் ரிச்சர்டின் ஆதரவாளர்கள் கிளப்பிய சில கலகங்களையும் அவர் எளிதில் அடக்கினர். எனினும், எதிர்ப்புகள் குறையவில்லை. மேலும், இரு கலகங்கள் பின்னர் தோன்றின. இவ்விரு கலகங்களும் நான்காம் எட்வர்டின் சகோதரி மார்கரெட்டின் ஆதரவாளர்களால் தூண்டி விடப்பட்டவையேயாம். முதலாவது, கி.பி. 1487ஆம் ஆண்டில் லாம்பர்ட் சிம்னல் என்னும் பெயர் கொண்ட இழிகுலத்தான் ஒருவன் தன்னையே பார்சிக் பிரபு எட்வர்ட் எனக் கூறிக் கொண்டு ஆங்கில நாட்டு அரசுரிமையைக் கொண்டாடலானன். லிங்கன் பிரபு அவனை ஆதரித்தார். இலண்டன் கோட்டையில் சிறை வைக்கப்பெற்றிருந்த எட்வர்ட் எப்படியோ தப்பிவிட்டார் என்றும், அவரே தாம் இந்த லாம்பர்ட் சிம்னல் என்றும் சில மக்கள் நம்பினர். அயர்லாந்திலிருந்து அவனுக்கு ஆதரவு கிட்டியது. இக் கலகத்தை ஏழாம் ஹென்றி எளிதாக அடக்க ஒரு தந்திரத்தைக் கையாண்டார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த எட்வர்டை விடுதலை செய்து இலண்டன் மாநகர மக்களின் ஐயத்தைத் தீர்த்த பின்னர், மீண்டும் அவரைச் சிறைப்படுத்தினர். சிம்னலும் லிங்கனும் படையுடன் அயர்லாந்திலிருந்து இங்கிலாந்து வந்தபோது அவர்களின் படையை ஏழாம் ஹென்றி நாட்டிங்ஹாம்ஷயருக்கருகில் ஸ்டோக் பார்டால்ட் என்னுமிடத்தில் தோற்கடித்து விரட்டினர். லிங்கன் கொல்லப்பட்டார். சிம்னல் அரண்மனையில் சமையற்கட்டில் பணியாளாக அமர்த்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார். கலகத்திற்குக் காரணமாயிருந்த யார்க்கியரிடம் அபராதத் தொகைகளை வசூலித்துத் தமது கருவூலத்தை நிரப்பிக்கொண்டார் ஏழாம் ஹென்றி. யார்க்கிய குல எலிசபெத்தை மணந்திருந்தாலும், அவளுக்குப் பேரரசிக்குரிய பெருமைகளை அளிக்காமையால் நாட்டு மக்களில் பலர் மனவருத்த முற்றிருந்தனர். அந் நிலையை மாற்ற கி.பி. 1487ஆம் ஆண்டில் அரசிக்கும் முடிசூட்டு விழாவொன்றினை நடத்தி மக்களின் மனவருத்தத்தை மாற்றினர்.

இரண்டாம் கலகம் கி.பி. 1492ஆம் ஆண்டில் தோன்றியது. இக் கலகத்திற்குக் காரணமாயிருந்தவன் பெர்க்கின் வார்பெக் என்பான். அவன் தன்னை நான்காம் எட்வர்டின் இளைய மகன் ரிச்சர்டு (யார்க்) எனக் கூறிக்கொண்டான். மக்களில் பலர் அவன் கூற்றை மெய்யெனக் கொண்டனர். நான்காம் எட்வர்டின் சகோதரியான மார்கரெட், பெர்க்கின் வார்பெக்கை முற்றிலும் நம்பினள். பிளாண்டர்ஸில் இருந்த அக் கலகக்காரனை ஆதரித்து இங்கிலாந்தில் சலசலப்பு ஏற்பட்டபோது, ஆதரவாளர்களை

ஏழாம் ஹென்றி கடுமையாகத் தண்டித்தார். பெர்க்கின் வார்பெக் தம் கலகத்திற்கு ஆதரவு தேட அயர்லாந்து போன போது, அங்கு இங்கிலாந்தின் கவர்னராயிருந்த சர் எட்வர்டு பாயினிங்ஸ் என்பார் அவனுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. அவன் ஸ்காட்லாந்து சென்று அங்கு மன்னராயிருந்த நான்காம் ஜேம்ஸின் உதவியை நாடினன். பெர்க்கின் வார்பெக்கின் கூற்றினை நம்பிய ஸ்காட்லாந்து மன்னர் அவனுக்கு ஒரு பிரபுவின் மகளை மணம் முடித்து வைத்தார். இதனால் இங்கிலாந்திற்கும் ஸ்காட்லாந்திற்குமிடையே சச்சரவுகள் தோன்றியபோதிலும், பெரும் போராக மாறவில்லை. ஸ்காட்லாந்துடன் நடைபெற்ற சச்சரவுகளைப் பயன்படுத்திக்கொண்டு ஏழாம் ஹென்றி பல புது வரிகளின்மூலம் ஏராளமான பொருளைப் பறித்துக்கொண்டார். ஆனால், கி.பி. 1497ஆம் ஆண்டில் ஏழாம் ஹென்றிக்கும் ஸ்காட்டியருக்கும் சமாதானம் ஏற்பட்டது. அதன் விளைவாக பெர்க்கின் வார்பெக்கினால் ஸ்காட்லாந்தில் இருக்க இயலவில்லை. சிறு படையுடன் அவன் கார்ன்வால் வந்திறங்கியபோது ஏழாம் ஹென்றியின் படைகள் அவனை எதிர்க்க வந்தன. படையைக் கைவிட்டுவிட்டு பெர்க்கின் வார்பெக் உயிர் தப்பி ஓடினன். 1499ஆம் ஆண்டில் பிடிபட்டு துரோகியெனக் கருதப்பட்டு அவன் தூக்கிலிடப்பட்டான். வார்விக் பிரபு எட்வர்டுக்கும் அதே கதி ஏற்பட்டது. எட்வர்டைக் கொலை செய்ததன்மூலம் எத்தகைய கொடுமைக்கும் அஞ்சாத கொடுங்கோலர் என்று ஏழாம் ஹென்றியைக் கருதினல் அது குற்றமாகாது. கலகங்கள் ஏற்பட்டதைக் கருத்திற் கொண்ட ஏழாம் ஹென்றி தம் ஆட்சியை வலுப்படுத்திக்கொள்ளப் பெரிதும் விரும்பினர்.

**துரோகிடா சட்டம்**

கி.பி. 1495ஆம் ஆண்டில் அயர்லாந்தின் அரசப் பிரதிநிதியாகச் செயலாற்றி, பாயினிங்ஸ் துரோகிடா சட்டத்தைப் பிறப்பித்தார். அதனைப் பாயினிங்ஸ் சட்டம் என்றும் கூறுவர். அச் சட்டப்படி முன்பு இங்கிலாந்தில் மன்னர், பாராளுமன்றம் முதலியோர் பிறப்பித்திருந்த சட்டங்கள் யாவும் அயர்லாந்திலும் நடைமுறை செய்யப்பட்டன. மேலும் அயர்லாந்து பாராளுமன்றத்தில் கொண்டு வரவேண்டிய மசோதாக்களுக்கு இங்கிலாந்து பாராளுமன்றத்தின் முன் அனுமதியைப் பெறவேண்டுமென்றும் பாயினிங்ஸ் சட்டம் வலியுறுத்தியது. அயர்லாந்தில் ஆங்கில ஆதிக்கம் நீடித்த நாள்வரை இக் கொள்கையையே கடைப்பிடித்தனர்.

### ஸ்பெயினுடன் நல்லுறவு

வெளிநாட்டிலும் தம் செல்வாக்கும் ஆதிக்கமும் விரிவடையச் செய்ய முனைந்த ஏழாம் ஹென்றி அப்போது ஐரோப்பாவில் சிறந்த நாடெனக் கருதப்பெற்ற ஸ்பெயினுடன் நல்லுறவு கொள்ளச் சிந்தித்தார். தம் மூத்த மகன் வேல்ஸ் இளவரசர் ஆர்தருக்கு ஸ்பானிய இளவரசி அரகான் காதரின் என்பாளை மணம் புரிவித்தார். ஸ்பெயின் மன்னர் பெர்டினண்டிற்கும் இஸபெல்லா அரசியாருக்கும் பிறந்த செல்வ மகள் காதரின். ஆனால், மணம் முடிந்த சில நாள்களில் வேல்ஸ் இளவரசர் காலமானார். எனினும் ஸ்பெயினுடன் தமக்கிருந்த நல்லுறவை விட்டுக் கொடுக்க மனமில்லாத ஏழாம் ஹென்றி, தம் இரண்டாம் மகன் ஹென்றிக்கு அவளை மணம் முடிக்கத் திட்டமிட்டார். அப்போது ஹென்றிக்கு 11 வயதே நிரம்பியிருந்தது. காதரினே பதினெட்டு வயதை முடித்திருந்தாள். இவ்வேறுபாட்டினால் ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் பல நிகழ்ச்சிகள் தோன்றி இங்கிலாந்தின் வரலாற்றையே மாற்றிய சிறப்பினை இனிக் காண்போமாக.

### ஏழாம் ஹென்றியின் குறிக்கோள்கள்

மன்னருடைய அரசியல் அதிகாரத்தை வளர்த்துக் கொள்வதும், கருவூலத்தை நிரப்பிக்கொள்வதுமாகிய இரு குறிக்கோள்களைக் கொண்டிருந்த ஏழாம் ஹென்றி இவ்விரு குறிக்கோள்களையும் 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பது போன்று செயல் ஒன்றினால் செய்துமுடிக்கத் திட்டமிட்டார். மூன்றாம் எட்வர்டு மன்னரின் ஆட்சிக் காலத்திற்கு முன்னரே செயலாற்றி வந்த 'அரசர் சபை' பிற்காலத்தில் செயலிழந்திருந்தது. ஏழாம் ஹென்றி மீண்டும் அந்தச் சபையை நடைமுறைக்குக் கொணர்ந்தார். அவர் காலத்திலிருந்து அந்த 'அரசர் சபை' அரண்மனையிலிருந்த அறையொன்றில் கூடிற்று. அவ்வறையின் கூரையின் உட்புறத்தில் நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்தமையால் அந்தச் சபைக்கு 'நட்சத்திர மன்றம்' என்ற பெயர் வந்தது. அச் சபையின் கூட்டங்கள் பல்வேறு இடங்களில் நடைபெற்றபோதும் அப் பெயராலேயே அது வழங்கப்பட்டது.

அரசியல் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்வதற்கும் கருவூலத்தை நிரப்பிக்கொள்வதற்கும் ஏழாம் ஹென்றி அந்த நட்சத்திர மன்றத்தைப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டார். படைமானிய திட்டத்தின்படி பல பெருநிழக்கிழார்கள் செல்வச் செருக்கால் சிறப்புற்றிருந்தனர். அவர்தம் அதிகாரத்தைக்

குறைத்து, செல்வத்தைப் பறிக்க அரசர், அந்த நிலக்கிழார்களின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கொணர்ந்து நட்சத்திர மன்றத்தில் விசாரணை செய்தார். சிறு குற்றங்களுக்கும் பெருந் தொகைகளை அபராதமாகப் பெற்று அரசர் கருவூலத்தை நிரப்பிக்கொண்டார். அரசருக்குச் பெரும் பொருள் சேர்ந்த தோடு, பல்வேறு பிரபுக்கள் வறுமையால் வாட்டவும் தலைப் பட்டனர். புதிதாகச் செல்வம் படைத்தோர் செல்வாக்குடன் வாழத் தொடங்கிய காலம் அது. வெளிநாட்டு வாணிபம் மிக் குற்றதால் வணிகர்களில் பலர் பெருஞ் செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர். அரசர் அவர்களிடமிருந்து கட்டாயக் கடன்களைப் பெற்றுக்கொண்டார். தம் முன்னோர்கள் கையாண்ட முறைகளை ஹென்றி மன்னர் தம் குறிக்கோள்களைச் செயல்படுத்தும் வகை யான் புதுப்பித்துக்கொண்டார். நட்சத்திர மன்றம் பல்வேறு அதிகாரங்களைப் பெற்று அரசரின் வல்லாட்சிக்கு வழி வகுத்தது. நட்சத்திர மன்றம் நாளுக்குநாள் அதிகாரம் பெற்று வளர்ந்தமை யால் அதனைக் குறை கூறவோ எதிர்க்கவோ தக்கார் ஒருவரு மிலர். நட்சத்திர மன்றத்தின் அதிகாரிகளான எம்ஸன், டட்லி என்பவர்கள் பேரதிகாரம் பெற்று அரசரின் செல்வாக்கைப் பெருக்குவதில் கண்ணும் கருத்துமாயிருந்தனர். எம்ஸன் நற் குடியிற் பிறந்தவர். டட்லியோ இழி குலத்தான். எனினும், இவ் விருவரும் அரசரின் கருவூலத்தை நிரப்பப் புதுப்புது வழிகளைக் கண்டறிந்து ஈவிரக்கமின்றிப் பிரபுக்களிடமிருந்து செல்வத்தைப் பறித்தனர். நிலக்கிழார்களின் ஆதிக்கத்தை அடக்க அவ்விரு வரும் அரசரின் அருந்துணைவராயினர். ஏழாம் ஹென்றி அவர் களைக் கருவூலப் பிரபுக்களாக நியமித்தார். காலப்போக்கில் டட்லி காமன்ஸ் சபையின் அவைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### ஸ்காட்லாந்துடன் நல்லுறவு

ஏழாம் ஹென்றி மன்னர் தம் வெளிநாட்டுக் கொள்கையின் மூலம் பிறநாட்டு அரச குடும்பங்களுடன் நல்லுறவுகொள்ள முற்பட்டதை ஏற்கெனவே கண்டோம். தம் மகனுக்கு அரகான் காதரினை மணமுடித்து ஸ்பெயினுடன் அவர் நல்லுறவு கொண்ட வரலாற்றை ஏற்கெனவே அறிந்துள்ளோம். ஸ்காட்லாந்துடன் நல்லுறவுகொள்ள முனைந்த அரசர், ஸ்காட்டிய மன்னர் ஆறும் ஜேம்ஸ் என்பாருக்குத் தம் மூத்த மகள் மார்கரெட்டை மணம் புரிவித்தார் (கி.பி. 1502ஆம் ஆண்டு). அத் திருமணத்தின் விளைவாகத்தான் பிற்காலத்தில் ஸ்டுவர்ட் வமிசத்தைச் சார்ந்த ஆறும் ஜேம்ஸ் ஆங்கிலேய-ஸ்காட்டிய மன்னராகக் கி.பி. 1603-ல் அரசுகட்டிலேறினர்.

## புது நாடுகளைக் கண்டுபிடித்தல்

ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில்தான் ஸ்பானியரின் முயற்சியால் கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்னும் மாலுமி ஸ்பெயினிலிருந்து புறப்பட்டு அட்லான்டிக் கடலைக் கடந்து மேற்கிந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்து உலகப் புகழ் பெற்றார்.

ஏழாம் ஹென்றியும் சில மாலுமிகளை அனுப்பிப் புது நாடுகளைக் கண்டுபிடிக்க முற்பட்டார். ஆங்கில மாலுமிகளில் ஒருவரான ஜான் காபட் என்பார் கி.பி. 1497-ல் பிரிஸ்டல் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு வட அமெரிக்கக் கண்டத்தின் வடக்கிலுள்ள லாப்ரடார் கரையை அடைந்து பல புது நாடுகளைக் கண்டுபிடித்தார். அவருடைய மகன் செபஸ்டியன் காபட் தென் அமெரிக்காவின் கீழ்க்கரையை ஆராய்ந்தார். இம் மாலுமிகளின் கடற் பயணங்களினால் ஐரோப்பாவில் புதியதொரு பூகோள ஞானம் பிறந்து, புதுக் குடியேற்றங்களை அமைக்க வழி பிறந்தது.

## பாராளுமன்றத்தின் அதிகாரம் குறைதல்

ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்காலம் பாராளுமன்ற அதிகாரம் குறைந்த காலமாகும். பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்க ஏழாம் ஹென்றி பிரபுக்களின்மீது சொல்லொணா வரி விதிப்புகளையும் கட்டாயக் கடன்களையும் வாங்கிப் பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்தார். அதனால் பிரபுக்கள் சபையின் அதிகாரம் குன்றியது. அக்காலத்தில் காமன்ஸ் சபையின் உறுப்பினர்களாகக் கிராமப்புறப் பெரியோர், வழக்குரைஞர்கள், வணிகர்கள் முதலானோர் அரசரின் வல்லாட்சி ஒன்றினால்தான் அமைதி நிலைபெறும் என்ற கருத்தால் பாராளுமன்றத்தைப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டார்கள். இதன் பயனாக அரசர் வல்லாட்சிக்கு வழிவகுத்தார். எனினும், பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டிய அவசியம்மட்டும் இருந்து வந்தது. அரசர் புதுப்பித்த புதுப் புது சட்டங்களையும், வரிகளையும் பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றே அவர் செயல்படுத்த வேண்டியவரானார். தம் ஆட்சியின் தொடக்ககாலத்தில் பாராளுமன்றத்தை அவர் பலமுறை கூட்டினார். எனினும், பிற்காலத்தில் ஏறக்குறைய பத்தாண்டு காலத்தில் மூன்று சிறு கூட்டத் தொடர்களையே ஏழாம் ஹென்றி கூட்டி, பாராளுமன்றத்தின் சிறப்பை ஓரளவு புறக்கணித்துவிட்டார்.

## வாணிக முன்னேற்றம்

ஏழாம் ஹென்றியின் ஆட்சியின்போது அவர் வெளிநாடுகளுடன் செய்துகொண்ட மணவுறவுகளை ஏற்கெனவே அறிந்துள்

ளோம். கி.பி. 1496ஆம் ஆண்டில் அவர் பேரரசர் மாக்ஸ்மில்லிய னுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டார். அதனை மாக்னஸ் இன்டர்கர்ஸஸ் என்பர். அதனால் இங்கிலாந்திற்கும் நெதர்லாந்துக்குமிடையே வாணிகத் தொடர்புகள் வளர வாய்ப்பேற்பட்டது. பத்தாண்டுகளுக்குப் பின்னர் அவர் ஃபிலிப் மன்னருடன் செய்துகொண்ட பிறிதொரு வர்த்தக ஒப்பந்தமான மாலஸ் இன்டர்கர்ஸஸ் என்பதன்மூலம் ஆங்கில வணிகர்கள் மேலும் பல சலுகைகளைப் பெற்றனர். இவ்விரண்டும் ஆங்கில வர்த்தகத்தைப் பெருக்குவதில் ஏழாம் ஹென்றி மன்னருக்கு இருந்த ஆர்வத்தையும் மதிநுட்பத்தையும் சுட்டிக் காட்டுவன. ஆங்கில நாட்டின் கப்பற் கட்டும் தொழில் சிறப்புற்று விளங்க அவரே மூலகாரணம் எனில் அது மிகையாகாது. நாவாய்ச் சட்டம் ஒன்றினைப் பிறப்பித்து, ஆங்கிலப் பண்டங்கள் ஆங்கிலக் கப்பல்களிலேயே கொண்டு செல்லப்படவேண்டும் என்று வலியுறுத்தினர். கருமியாயிருந்தபோதிலும், பெருங் கப்பல் களைக் கட்டுவதற்கு அவர் மானியங்களைக் கொடுத்து, கடல் கடந்து செல்லும் தூரப் பயணங்களுக்கு வகை செய்யும் பெரும் நாவாய்க் கலங்களைக் கட்டுவிக்க ஊக்கமளித்தார். பிற்காலத்தில் அவருடைய சந்ததியினர் கடலாதிக்கம் செலுத்துவதற்கு ஏழாம் ஹென்றியின் ஆட்சி முன்னோடியாக அமைந்தது எனில் அது மிகப் பொருத்தமுடைய கூற்றாகும்.

### ஏழாம் ஹென்றியின் இறுதிக்காலம்

இருபத்திநான்கு ஆண்டுக் காலம் வல்லாட்சி புரிந்த ஏழாம் ஹென்றி கி.பி. 1509ஆம் ஆண்டு ஏப்ரலில் காலமானர். ஏழாம் ஹென்றி தம் இறுதிக் காலத்தில் தம் ஆட்சிக் காலத்தில் செய்த பல்வேறு அநீதிகளை நினைத்து வெகுவாக நைந்து வருந்தினர். மக்களின் வாட்டத்தைத் தீர்ப்பது தம் மகன் ஹென்றியின் கடமை யென மரண சாசனத்தில் குறிப்பிட்டார் ஏழாம் ஹென்றி. கால மான ஹென்றியின் சடலம் வெஸ்ட்மின்ஸ்டர் திருச்சபையில் அடக்கம் செய்யப்பட்டது.

# 3. மறுமலர்ச்சி இயக்கம்

## மறுமலர்ச்சி என்றால் என்ன ?

நவீன காலத்தை இடைக்காலத்திலிருந்து பிரித்துக் காட்டும் மைல் கற்களாக மறுமலர்ச்சி இயக்கத்தையும், புதிய நாடுகள் கண்டுபிடித்தலையும் கூறுவர். இவ்விரண்டும் நவீன காலத் தொடக்கத்தில் ஐரோப்பிய நாகரிகத்தின் சீரிய அம்சங்கள் எனக் கொள்ளலாம். மறுமலர்ச்சி இயக்கம் இங்கிலாந்தில் ஏற்கெனவே தொடங்கியிருந்தபோதிலும் அது மக்கள் வாழ்க்கையையும் சிந்தனையையும் ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில்தான் பாதிக்கத் தொடங்கின. இவ்வியக்கத்தை, இலக்கிய மறுமலர்ச்சி என்றும் கூறுவர். அக் கருத்துப்படி ஆராய்ந்தால், கிரேக்க நாட்டுத் தொன்மை இலக்கியங்களை மீண்டும் காப்பதில் எழுந்ததோர் ஆழ்ந்த ஆர்வத்தையே இலக்கிய மறுமலர்ச்சி என்ற சொல் குறிக்கிறது என்பாருமுண்டு. இந்த நோக்கில் இலக்கிய மறுமலர்ச்சியை ஆராய வேண்டிய அவசியமில்லை. மனித வாழ்க்கையிலும், சிந்தனை முறையிலும் ஏற்பட்ட மாற்றங்களினால் வரலாற்றுத் திருப்பம் ஏற்பட்டது என்பதனால்தான் மறுமலர்ச்சி இயக்கம் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. கிரேக்க-இலத்தீன் இலக்கியங்களை இடைக்காலத்தில்கூட மக்கள் அறிந்திருந்தார்கள். எனினும், அக்காலத்தில் ஏற்கெனவே மனத்திற் பதிக்கப்பட்டிருந்த கருத்துகளின் அடிப்படையில்தான் அவை அறியப்பட்டிருந்தனவே ஒழிய நவீன காலக் கருத்துகளின் அடிப்படையில் அறியப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நவீன காலத்தின் தொடக்கத்தின்போது இடைக் காலக் கருத்துகள் நலியத் தொடங்கியபோதிலும், கிரேக்க-இலத்தீன் மொழி இலக்கியங்களைப் புதிய கோணத்தில் கற்பதில் ஆர்வம் பிறந்தது. பண்டைக்கால உலகில் மக்கள் சீரியதும் உயர்ந்ததுமான நாகரிகத்தைக்கொண்டிருந்தனர் என்பதை அவ் விலக்கியங்களை நவீன காலத் தொடக்கத்தின்போது கற்ற மக்கள் உணரத்தலைப்பட்டனர். அந் நாகரிகம் இடைக்கால ஐரோப்பிய நாகரிகத்தைவிட உயர்ந்ததும் சிறந்ததுமாகுமென்பதோடு, அவ் விலக்கியங்கள் இடைக்காலக் கருத்துகளின் அடிப்படையை ஏற்றுக்கொள்ளவில்லையென்பதும் புலனாயிற்று. இடைக்கால

இலக்கியங்கள் சமயத்தைக் கண்மூடித்தனமாய் ஏற்றுக்கொண்டதுடன், சமயக் கருத்துகளில் குற்றங்குறைகளைக் காண்பதுகூட தவறு என்றும் கருதின. ஆனல், தொன்மைக்கால இலக்கியங்கள் திறனாய்வினையும் உரையாடலையும் அடிப்படையாகக்கொண்டிருந்ததை மக்கள் அறிந்தார்கள். இடைக்கால இலக்கியங்கள் மனிதத் தன்மையைக் கொடூரமானதென்றும், பகுத்தறிவிற்குப் புறம்பானதென்றும் கருதியதோடு மானிட உடல் பாவத்தின் இருப்பிடமென்றும் கருத்துக்கொண்டிருந்தனர். ஆனல், பண்டைக் கால கிரேக்க-இலத்தீன் மொழி இலக்கியங்கள் மனித சக்தியைப் பெருமைப்படுத்தியதோடு, பகுத்தறிவினை ஒப்புக்கொண்டு, உடல் அழகினை வளர்த்துப் பெருக்குவதில் இணையற்ற ஈடுபாட்டினையும் கொண்டிருந்தன. மனிதனின் தன்னல விருப்பு வெறுப்புகளைச் சாடிக் குறை கூறுவதை நோக்கமாகக் கொள்ளாமல், பண்டை உலகம் விருப்பு வெறுப்புகளைக்கொண்ட மானிடத்தன்மை இயற்கையானது, பாவமற்றது என்னும் கருத்தினைப் பெற்றிருந்தது. இக் கருத்தினைக் கண்டறிந்த மக்கள் சமயக் கருத்துகளைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்வது தவறு எனக் கொண்டமையால் இடைக்காலக் கருத்துகள் சீர்குலையலாயின. திறனாய்வு செய்வதில் புதிய சுதந்திரத்தையும், சிந்தனை செய்வதில் புதியதோர் உறுதியையும் மக்கள் கைக்கொண்டனர். இதன் பயனாக ஒரு சிலரிடத்தில் இடைக்காலக் கட்டுப்பாடான கருத்திற்குப் புறம்பாக ஒழுக்க வீழ்ச்சியும் சமுதாயத்தில் காணப்பட்டது. அரசியல் துறையில் மறுமலர்ச்சி யுகத்தைத் தறுதலைக்காலம் எனக் கூறினும் மிகையாகாது. சுருங்கக்கூறின், திறனாய்வு சுதந்திரமும், பாரம்பரைக் கருத்துகளைப் பகுத்தறிவு என்னும் உரைகல்லில் சோதித்துப் பார்த்ததும் மறுமலர்ச்சி இயக்கத்தின் சாரம் எனலாம்.

### ஆங்கில மறுமலர்ச்சி இயக்கம்

புத்துலகக் கருத்துகளினால் செல்வாக்குற்ற பல அறிஞர்கள் பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் வாழ்ந்து வந்தார்கள். எடுத்துக்காட்டாக, கிளௌஸ்டர் பிரபு ஹம்ப்ரியையும், வொர்ஸெஸ்டர் பிரபு டிப்டாப்ஃட் என்பாரையும் குறிப்பிடலாம். ஆனல், ஏழாம் ஹென்றி மன்னரின் ஆட்சிக்காலத்தில் தான் மறுமலர்ச்சி இயக்கம் இங்கிலாந்தில் வேரூன்றத் தொடங்கியது. தொடக்கத்தில் இவ்வியக்கம் பல்கலைக்கழகங்களில்—சிறப்பாக ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில்—நிலைநாட்டப்பட்டது. குரோசின் (Grocyn), லினேக்கர் (Linacre) என்னும் அறிஞர்கள் இருவர் இத்தாலியிலிருந்து திரும்பிவந்து, ஆக்ஸ்

ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் கிரேக்க இலக்கியத்தையும், விஞ்ஞான அடிப்படையில் மருத்துவ இயலையும் நவீன முறையில் கற்பிக்கத் தொடங்கினர். மேற்கூறிய இருவரையும்விடப் பேரறிஞர் என்று போற்றப்பட்ட ஜான் கோலட் என்பார் கி.பி. 1497ஆம் ஆண்டில் இத்தாலியிலிருந்து ஆக்ஸ்ஃபோர்டிற்கு வந்து சேர்ந்தார். அவர் செயின்ட் பாலின் விவிலிய நூலைக் குறித்து உரையாற்றி வந்தார். விவிலியத்தைப் பாரம்பரியக் கருத்துகளுக்கு அப்பாற்பட்டு செயின்ட் பாலின் சிந்தனை சென்றிருந்த விதத்தையும், அவர் எழுதிய கடிதங்களைப் பெற்றவர்கள் அவற்றை எவ்வாறு கருதினர்கள் என்றெல்லாம் கோலட் நவீன முறையில் உரையாற்றி வந்தார். இவ் வளைவரையும்விட சீரிய அறிஞரெனக் கருதப்பெற்ற கற்றறிஞர் எராஸ்மஸ் என்னும் பெரியார் அக்காலத்தில் மிகச் சிறந்த அறிஞர் என்று போற்றப் பட்டவர். அவரும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் சீர் திருத்தக் கருத்துகளைப் பேசியவர்தான். அச்சகக் கலையை ஐரோப்பியருக்குக் கற்றுக் கொடுத்தவரும் அவரேதான். கோலட்டும், எராஸ்மஸ்ஸும் சர் தாமஸ் மூர் என்ற பெரியாருடன் கலந்து உறவாடினர். சர் தாமஸ் மூர் சீர்திருத்தக் கருத்துகளை, சிறப்பாகத் திறனய்வு செய்யும் சீரிய முறையை அரசியல் துறைக்குப் பயன்படுத்தியவர். அவர் எழுதிய 'உடோப்பியா' (Utopia) என்ற நூல் கி.பி. 1516ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. அந் நூல் இலட்சிய சமுதாயக் கனவைப் படம் பிடித்துக் காட்டியது. அந் நூலில் கூறப்பட்ட இலட்சிய சமுதாயத்தில் சொத்துகள் ஓரிடத்தில் குவியாமல் பொதுவுடைமையாக்கப்பட்டிருந்தன; அச் சமுதாயத்தில் அனைவரும் கல்வி கற்றவர்கள்; வறியவர்களற்ற சமுதாயத்தில் வல்லாட்சிக்கு வித்திட்ட கொடுந் தலைவர்கள் இருக்கவில்லை. அச் சமுதாயத்தில் மனதுக்கேற்ற முறையில் இறை வழிபாடு செய்யும் வழிபாட்டுச் சுதந்திரமும் கொடுக்கப்பட்டிருந்தது. இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகளின் தலைவர்கள் கண்ட மறுமலர்ச்சி இயக்கத்திற்கும் இத்தாலியத் தலைவர்கள் கண்ட மறுமலர்ச்சி இயக்கத்திற்கும் ஒரு சீரிய வேறுபாடு இருந்தது. இத்தாலியத் தலைவர்கள் சமய இலக்கியத்தை (இறைமை நூலாராய்ச்சி) இறந்துபட்டு வரும் காலத்தின் குருட்டு நம்பிக்கை எனக் கருதி அதைப் புறக்கணித்திருந்தனர். அத்துடன் மாக்கியவல்லி போன்ற அரசியற் சிந்தனையாளர்கள் இலட்சிய நாட்டினைப் பற்றிய கனவினைக்கூட கண்டாரில்லை. அவர் எழுதிய 'பிரின்ஸ்' என்ற நூல் 1509ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. போரிடும் முறைகளையும், சூது வாதுகள் செய்து அரசர்கள் தம்

அதிகாரத்தைக் கட்டிக் காத்துக்கொள்ளும் வழிமுறைகளையும் தெளிவாகக் கூறியிருந்தார் மாக்கியவல்லி அவர்தம் நூலில். ஆனால் இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகளில் திருச்சபையில் நிகழ்ந்த ஊழல்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் குறிப்பாகச் சாடி அறிவுக்கு அவை எங்ஙனம் அப்பாற்பட்டிருந்தன என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்தி அரசு அதிகாரத்தின் கொடுமைகளையும் முட்டாள்தனங்களையும் சாடியிருந்தனர். எனவே, இத்தாலியைவிட இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளே சமயச் சீர்திருத்தத்திற்கு வழிகாட்டின என்பது பொருந்தும்.

## மறுமலர்ச்சிப் பண்பாடு

பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் குறிப்பாகவும், சமுதாயநோக்கு முழுமையிலும் பொதுவாகவும் மறுமலர்ச்சி இயக்கக் கோட்பாடுகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. செயின்ட் பால் திருச்சபையின் தலைவரான கோலட், செயின்ட் பால் பள்ளியை நிறுவி கல்வி முறையில் சீர்திருத்தப் புதுமைக் கருத்துகளை அங்குப் புகுத்தியிருந்தார். ஏற்கெனவே நிலைநாட்டப் பெற்றிருந்த கல்வி நிறுவனங்களும் விரைவாகச் செயின்ட் பால் பள்ளியின் கருத்துகளுக்குச் செவிமடுத்து, அதன் செல்வாக்கினால் பாதிக்கப்பட்டன. சமயக் கோட்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு, ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற இடங்களில் கல்லூரிகள் நிலைநாட்டப்பட்டன. உயர்குடி மக்கள் இந் நவீனக் கருத்துகளைப் பின்பற்றுவதே நாகரிகம் எனக்கொண்டனர். இளம் அரசர் எட்டாம் ஹென்றியின் அரண்மனையில் பல்கலைக்கழகமொன்றில் இருப்பது போன்று பலவகைப்பட்ட அறிஞர்களும் சிந்தனையாளர்களும் சூழ்ந்து காணப்பட்டனர். சொல்லப்போனால் ஜேன்கிரே, எலிசபெத் ராணியார் போன்ற மகளிரும் புத்துலகக் கருத்துகளினால் ஆட்கொள்ளப்பட்டுப் புதுநோக்குடன் விளங்கலாயினர். மறுமலர்ச்சி இயக்கத்தில் சமுதாயத்தின் வாழ்க்கை எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டிருந்தது என்பதைக் கூறுவது கடினமாயினும் அந் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் அதன் விளைவாக அருமையான கவிதைகள் பிறந்தன என்பதை நாம் புறக்கணிக்கக்கூடாது. பல புது நாடுகளைக் கண்டுபிடித்துக் குவலயம் பற்றிய ஞானம் பெருகி வளர்ந்ததைப் போன்றே, சீர்திருத்தக் கருத்துகளை அல்லது புத்துலகக் கருத்துகளைப் பெருக்கி வளர்ப்பதில் மறுமலர்ச்சி இயக்க காலம் சிறப்புகளைப் பெற்றது. அப்படிப்பட்ட காலத்தில் பிறக்கும் பேறு பெற்றவர்கள் பெறற்கரிய பேறு பெற்றவர்களே எனில் மிகையாகாது.

# 4. புது நாடுகள் கண்டுபிடிக்கப்படல்

ஏழாம் ஹென்றி மன்னர் சொல்லொணுத் தொல்லைகளில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த அதே சமயத்தில் உலகின் பல புதுநாடுகளைக் கண்டறிந்ததன் விளைவாகப் பூமியின் பல்வேறு புது பகுதிகளைப் பற்றிய அறிவு பெருகியதோடு, புதுமையான சம்பவங்களும் நிகழத் தொடங்கின.

புது நாடுகளைக் கண்டுபிடித்த முன்னணி நாடுகளில் முதலாவதாகக் கருதப்படுவது போர்த்துகல் நாடாகும். பல்லாண்டுகளாகவே போர்த்துக்கீசியர் ஆப்பிரிக்கக் கடற்கரைப்பகுதிகளைக் கண்டறிந்து வந்திருந்தனர். கி.பி. 1487ஆம் ஆண்டில் பார்த்தலோமியோ டயஸ் என்பார் ஆப்பிரிக்காவின் தென்பாலில் இருந்த நன்னம்பிக்கை முனைவரை சென்று வந்தார். இதன் பயனுகக் கடல் வழியாக இந்தியாவிற்கு வர வழி பிறந்தது. உலகம் உருண்டை; எனவே மேற்குத் திசையாகச் சென்றாலும் இந்தியாவிற்குக் கடல் வழி காண இயலும் என்ற முயற்சியால் கி.பி. 1492ஆம் ஆண்டில் கொலம்பஸ் அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடிக்கக் காரணமானர். அவர் நான்குமுறை மேலைத் திக்கில் பயணம் சென்று மேற்கிந்தியத் தீவுகளில் ஸ்பெயினின் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். கி.பி. 1497ஆம் ஆண்டில் வாஸ்கோடகாமா என்பார் இந்தியாவிற்குக் கடல்வழியைக் கண்டுபிடித்து, கீழ் நாடுகளின் கரைகாணுச் செல்வங்களை லிஸ்பனில் கவர்ந்துசென்று குவித்தார்.

மேற்கூறிய கண்டுபிடிப்புகளினுல் ஐரோப்பியரின் கற்பனைத் திறன் சிறகடித்துப் பறந்தது. எச்சரிக்கையே வடிவமான ஏழாம் ஹென்றி அரசர்கூட இத்தகைய முயற்சிகளில் ஆர்வம் காட்டி, ஜான் காபாட், ஸெபாஸ்டியன் காபாட் என்ற வெனிஸ் நகர மாலுமிகளை பிரிஸ்டல் துறைமுகத்திலிருந்து வட அமெரிக்கக் கடற்கரையைக் கண்டுபிடிக்க வழி காட்டினர். அவர்கள் கிரீன் லாந்து கடற்கரையிலிருந்து வர்ஜீனியா வரையிலிருந்த வட அமெரிக்கக் கடற்கரைகளைக் கண்டறிந்து பின்னர் ஆங்கிலக் குடியேற்றங்கள் ஏற்பட வழிவகை செய்தார்கள். எனினும், தொடக்கத்தில் இக் கண்டுபிடிப்பினுல் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

## புது நாடுகளைக் கண்டுபிடித்தலில் ஸ்பெயின், போர்த்துகல் நாடுகளின் பங்கு

புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு ஸ்பெயின், போர்த்துகல் நாடுகளின் வசமாயிற்று. ஸ்பெயின் மேற்குத் திசைக்கும், போர்த்துகல் கிழக்குத் திசைக்கும் செல்ல வேண்டுமென கி.பி. 1493ஆம் ஆண்டில் போப்பாண்டவரின் ஆணையை மேற்கொண்டு சென்றுவரத் தொடங்கின. போப்பாண்டவர் வரைந்த கற்பனைக்கோடு அட்லான்டிக் பெருங்கடலின் வழியாக அஸோர்ஸ் தீவுகளிலிருந்து தென்பால்வரை சென்றது. அக் கற்பனைக் கோட்டிற்கு மேற்கிலிருந்த நாடுகளை ஸ்பானியரும், கிழக்கிலிருந்த நாடுகளைப் போத்துகீசியரும் கண்டுபிடிக்கக் கட்டளையிட்டார் போப்பாண்டவர். அடுத்தாண்டில் போர்த்து கீசியரும் ஸ்பானியரும் பிறிதோர் உடன்பாட்டைச் செய்து கொண்டனர். அதனை அடுத்துவந்த முப்பதாண்டுகளில் புது நாடுகளைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்தால் இவ்விரு நாடுகளும் பல்வேறு புத்துலகப் பகுதிகளைக் கண்டுபிடித்தன.

போர்த்துகீசியர் கீழ் நாடுகளில் தம் கடலாதிக்கத்தை நிலை நாட்டினர். அல்புகர்க் என்பார் செய்த முயற்சியால் போர்த்துகல் கீழ்நாடுகளுடன் வாணிகம் செய்யத் தொடங்கி, செல்வ வளம் கொழிக்கும் நாடாகத் திகழலாயிற்று. போர்த்துகீசியர் மேற்குத் திசையில் பிரேஸில் நாட்டைக் கண்டுபிடித்தனர் (1500). ஸ்பானி யர்கள் மேற்குத்திசையில் பல்வேறு நாடுகளைக் கண்டுபிடித்தனர். அமெரிக்கோ வெஸ்புச்சி (1502) தென் அமெரிக்காவின் பெருமை யைக் கண்டுபிடித்தார். பால்போ என்பார் பனமா வழியாகப் பசிபிக் பெருங்கடலைக் கண்டறிந்தார் (1519). கார்டெஸ் என்பார் மெக்சிகோவைக் கண்டுபிடித்து அந் நாட்டின் கனிம வளங்களைக் காட்டித்தந்தார் (1519). மெகல்லன் என்ற மாலுமி 1519-22ஆம் ஆண்டுகளுக்கிடையில் கடல்வழியாக உலகைச் சுற்றி வலம் வந்தார். மேற்கூறிய கண்டுபிடிப்புகளினால் செல்வச்செருக்குற்றுத் திகழ்ந்த ஸ்பெயின் நாடு வல்லரசு நாடாக உருமாறி ஐரோப்பிய விவகாரங்களில் தனக்கென்று நிலையானதோர் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

மேற்கூறிய சம்பவங்கள் பிரிட்டிஷ் வரலாற்றை நேரிடை யாக பாதிக்கவில்லையெனினும், புது உலகுக்கு வழி காணும் பேரார்வத்தை உண்டாக்கி, வருங்காலத்தில் புது நாடுகளைக் கண்டறிந்து ஆதிக்கத்தைப் பெருக்கி நிலைநாட்ட வழி காட்டியது. இக் கண்டுபிடிப்புகளினால் மக்களின் வாழ்க்கை நோக்கில் பெருத்த

மாற்றங்கள் நிகழ்ந்தன. மானிட இயல்புகளின் குணப்பண்பு களையும் பரிணமைத்தையும் அவை மாற்றிவிட்டன. வருங்காலத்தில் நிகழ இருந்த சீரிய நாடகங்களுக்கு இக் கண்டுபிடிப்புகள் கோடி காட்டின எனில் அது தவறாகாது. மேன்மேலும் புதுநாடுகளையும், புதுவகையான பொருள்களையும் காணவேண்டும் என்ற ஆர்வத் தால் உந்தப்பெற்ற ஐரோப்பியர் புதுப் புது துறைகளில் தம் கருத்தை நிலைநாட்டிப் புத்துலகப் பிறப்பிற்கு வழிசெய்தார்கள். பின்னர், இதன் விளைவாக அரசியல் துறையில் போட்டா போட்டிகளும், வணிகத்துறையில் போட்டிகளும் ஏற்பட வழி பிறந்தது. அதன் விளைவாக அமைதியான வாழ்க்கைமுறை சீர்குலையலாயிற்று.

# 5. எட்டாம் ஹென்றி மன்னர் (1509-1547)

## குணநலன்கள்

எட்டாம் ஹென்றி தம் பதினெட்டாம் வயதில் இங்கிலாந்தின் அரசராகக் கி.பி. 1509ஆம் ஆண்டில் முடிசூட்டிக்கொண்டார். அவர் ஏழாம் ஹென்றியின் இளைய மைந்தர். தீரமும் திறமையும் கொண்ட இளைஞரான அவர் மறுமலர்ச்சி இயக்கக் கருத்தின் காவலனாகக் காணப்பட்டார். அழகிய தோற்றத்தையும், கட்டுக்கோப்பான நல்லுடலையும் கொண்டிருந்த எட்டாம் ஹென்றி ஆண்மையை வெளிக்காட்டும் அனைத்து விளையாட்டுகளிலும் பங்கு கொண்டிருந்தார். பண்பாடு மிக்கவரான அவர் கற்றறிந்தவர்; கவிஞர், இசைமேதை. தம்மைச் சுற்றிலும் கற்றறிந்த கலைவல்லுநர்கள் சூழ்ந்திருப்பதை அவர் பெரிதும் விரும்பியவர். கேளிக்கை விரும்பியாயினும் செய்ய வேண்டிய பணிகளையும் செம்மையாகச் செய்யும் ஆற்றல் மிக்கவர் எட்டாம் ஹென்றி. மனிதர்களையும் திறமை மிக்கவர்களையும் தெரிந்தெடுக்கும் ஆற்றல் படைத்திருந்த அவர், அவர்களைக் கண்டு ஒருபோதும் அஞ்சாதவர். கற்றறிந்தவர்களுக்கிடையேயும் ஹென்றி தலைமை தாங்கத் தவறவில்லை. மக்களிடத்தில் அவருக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. அவரது ஆட்சியின் கெட்ட காலத்தில்கூட அவருக்கு மக்களிடத்திலிருந்த மதிப்பு ஒருபோதும் குறையவில்லை. அத்தகைய நற்பண்புகளைக் கொண்டவராயினும், பிறர் உணர்ச்சிகளைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாது தாம் எண்ணியதைச் சாதிக்கும் முரட்டுக் குணம் படைத்த எட்டாம் ஹென்றியின் கொடுமை நாள்கள் செல்லச் செல்ல வெளிப்படையாயிற்று.

கி.பி. 1509ஆம் ஆண்டு ஏப்ரலில் எட்டாம் ஹென்றி பட்டத்திற்கு வந்ததை இங்கிலாந்து மக்கள் வரவேற்றனர். பட்டத்திற்கு வந்தவுடன் பொதுமக்களுக்குப் பிடித்தமானதொரு செயலைத் தம் முதற் காரியமாகச் செய்தார் ஹென்றி. தம் தந்தையாரின் அமைச்சர்களாயிருந்த எம்சன் என்பவரையும், டட்லி என்பவரையும் முடிசூட்டிக்கொண்ட அதே நாளில் கைது

செய்தார். அவர்களை மக்கள் வெறுத்தனர். அரசத் துரோகக் குற்றத்திற்காக அவ்விருவரும் விசாரிக்கப்பட்டு, கழுவேற்றப் பட்டனர். ஜூன் மாதத்தில் அரசர் அரகான் இளவரசியான காதரினை மணந்துகொண்டார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அரசி ஓர் ஆண் மகவினைப் பெற்றெடுத்தபோதிலும் அக்குழந்தை ஒரு மாத காலம்கூட வாழ்ந்திருக்கவில்லை.

எட்டாம் ஹென்றி மன்னரின் முதல் இருபதாண்டுகள் (1509—1529) உல்சி என்பார் அவருடைய முதலமைச்சராக இருந்தார். அவ் விருபதாண்டுகள் பெரும்பாலும் வெளிநாட்டு விவகாரத்திலேயே செலவிடவேண்டியவரானார். கி.பி. 1494ஆம் ஆண்டிலிருந்தே இத்தாலி ஐரோப்பாவின் போர்க்களமாக இருந்து வந்தது. ஃபிரெஞ்சிய-ஸ்பானியப் படைகள் இத்தாலியத் தீபகற்பத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்குடன் அங்குப் போரிட்டு வந்தன. தீவிரமாக முயற்சி செய்தபோதிலும் உல்சியால் இங்கிலாந்திற்குச் சாதகமாக அப் போர்களை ஆக்க முடியவில்லை.

### ஹென்றியும் ஃபிரான்ஸும்

எட்டாம் ஹென்றி முடிசூட்டிக்கொண்ட ஈராண்டுகளுக்குப் பின், போப்பாண்டவர் இரண்டாம் ஜூலியஸ் என்பார் இத்தாலியில் ஃபிரெஞ்சியரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கி.பி. 1511ஆம் ஆண்டில் புனிதக் கூட்டு (Holy League) ஒன்றினை நிலைநாட்டினார். எட்டாம் ஹென்றியும் அதில் சேர்ந்தார். இங்கிலாந்து இழந்திருந்த காஸ்கனி என்ற மாநிலத்தைத் திரும்பப் பெறுவதே ஹென்றி இக் கூட்டில் சேருவதற்கான காரணமாகும். ஐரோப்பாவையும் உள்ளிட்ட பேரரசை நிலை நாட்டும் பகற்கனவின் பலனே இம் முயற்சி என்பதனை நினைவிற் கொள்ளவேண்டும். எனினும் அரசரின் இம் முயற்சி தவறானது என்பதைச் சுட்டிக் காட்ட ஒருவருக்கும் துணிவு பிறக்கவில்லை. ஃபிரான்ஸில் அவர் மேற்கொண்ட முதல் படையெடுப்புப் படு தோல்வியில் முடிவுற்றது. இரண்டாம் படையெடுப்பினை அரசரே முன்னின்று நடாத்தவேண்டியவரானார். அவர் கலே நகரில் இறங்கி ஒருசில நகரங்களைக் கைப்பற்றியதென்னவோ உண்மைதான். ஸ்பர்ஸ் போர் (1513) என்று கூறப்படும் இப் போரில் அரசர் ஃபிரெஞ்சுப் படைகளை முறியடித்தார். பகைவர்கள் போர்க்களத்தை விட்டு புறமுதுகு காட்டி ஓடினர்.

### பிளாட்டன் போர், 1513

இத் தருணத்தில் இங்கிலாந்தின்மீது ஸ்காட்லாந்து மன்னரான நான்காம் ஜேம்ஸ் படையெடுத்தார். அரசர் நாட்டிலிருந்து

ஃபிரான்ஸ் சென்றிருப்பதை அறிந்த அவர் அவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு இங்கிலாந்தின்மீது படையெடுத்தார். ஸ்காட்லாந்து மன்னர் ஃபிரான்ஸுடன் நட்புறவு கொள்ளும் பழைய ஸ்காட்டியக் கொள்கையைப் பின்பற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர் இங்கிலாந்தின் டியூடர் இளவரசி மார்கரெட்டை மணந்திருந்தபோதிலும் இங்கிலாந்துடன் நட்புறவு கொள்ளத் தவறியது வேடிக்கைதான். நான்காம் ஜேம்ஸ் தாம் பின்பற்றிய கொள்கைக்காக உயிர்துறக்க வேண்டியவரானார். ட்வீட் ஆற்றங்கரைக்கருகில் பிளாட்டன் என்னும் இடத்தில் (1513) இங்கிலாந்தின் தளபதியான சர்ரே பிரபு ஸ்காட்டியரைப் படுதோல்வி அடையச் செய்தார். நான்காம் ஜேம்ஸும் அவரின் முக்கிய பிரபுக்கள் அனைவரும் பிளாட்டன் போர்க்களத்தில் செத்துமடிந்தனர். சர்ரே பிரபு பெற்ற வெற்றியால், அவர் நார்பக் பிரபு என்று அழைக்கப்படலானார்.

### தாமஸ் உல்சி

ஃபிரெஞ்சுப் போருக்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு ஹென்றி மன்னர், தாமஸ் உல்சி என்பாருக்குப் பணித்திருந்தார். தாமஸ் உல்சி மேய்ச்சல் தரைக்காரர் ஒருவரின் மகன்; முன்னுக்கு வரவேண்டியவர் என்று கருதப்பட்டவர். இப்ஸ்விச் இலக்கணப் பள்ளியில் கல்விகற்று அவர் ஆக்ஸ்ஃபோர்டு மகதலீன் கல்லூரியில் படித்துத் தம் பதினைந்தாம் வயதில் பட்டம் பெற்றார். பின்னர் அவர் திருச்சபைச் சேவகத்தில் ஈடுபட்டு பிஷப் ஃபாக்ஸ் (Bishop Fox) என்பாரின் செல்வாக்கினால் லிங்கனின் டீனாகவும் (Dean) அரசரின் சமய குருவாகவும் பதவி உயர்வு பெற்றார். அவருடைய திறமைகளை ஆய்ந்தறிந்த எட்டாம் ஹென்றி 1514ஆம் ஆண்டில் அவருக்கு லிங்கனின் பிஷப் பதவியைக் கொடுத்ததில் வியப்பில்லையன்றோ? பின்னர் அவர் யார்க்கின் ஆர்ச் பிஷப்பாகவும் உயர்த்தப்பட்டார். அடுத்த ஆண்டில் (1515) அவர் சான்சலர் என்னும் மிகஉயர்ந்த பதவியிலும் நியமிக்கப்பட்டார். புதிய போப்பாண்டவரான பத்தாம் லியோ என்பார் அவருக்குக் கார்டினல் என்ற பொறுப்பினைக் கொடுத்துப் போப்பாண்டவரின் பிரதிநிதியாக நியமித்தார். அடுத்தடுத்துப் பதவி உயர்வு பெற்றபோதிலும் உல்சியின் பேராசைக்கு முடிவு காண முடியவில்லை. ஏனெனில், அவர் போப்பாண்டவராகவே ஆகவேண்டும் என்று மனப்பால் குடித்தார். எட்டாம் ஹென்றியினிடம் அவருக்கு மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டதை அடுத்து, அவருடைய செருக்கும் இறுமாப்பும் கட்டுக்கடங்காது அத்துமீறின என்றால் அது மிகையாது. 'அவர் அழகின் இருப்பிடம்;

கற்றறிந்தவர்; சிறந்த பேச்சாளர்; திறமை மிக்கவர். வெனிஸ் நகரத்தில் இருக்கும் அனைத்து அதிகாரிகளும் சேர்ந்து செய்யும் பணிகளை உல்சி ஒருவராகவே செய்து முடித்துவிடுகிருர். அவருடைய புகழ் உச்சக்கட்டத்தில் இருக்கிறது. போப்பாண்டவரைவிட அவருடைய புகழ் ஏழுமடங்கு அதிகமாக உள்ளது. அரசரையும், அரசாட்சி முழுவதையும் ஆளும் திறமை அவரையே சாரும்' என்று வெனிஸியத் தூதுவர் அவரைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

### உல்சியின் வெளிநாட்டுக் கொள்கை

ஐரோப்பாவில் தமக்கொரு நிலையான இடத்தைப் பெற உல்சி திட்டமிட்டிருந்தார். போப்பாண்டவராக என்றைக் காவது பதவி ஏற்கவேண்டும் என்ற கருத்தினைக் கொண் டிருந்த அவர், ஐரோப்பிய விவகாரங்களில் இங்கிலாந்தின் குரலை ஒலிக்கச் செய்ய விரும்பினார். அப்போது அவர் போப் பாண்டவரின் பிரதிநிதியாகக் கார்டினலாக மட்டும்தான் இருந் தார் என்பதை மறக்கக் கூடாது. ஆனால், அவ் விருப்பம் படுதோல்வியுற்றது. அவர் பெருமுயற்சி கொண்டதென்னவோ உண்மைதான். ஐரோப்பாவின் சமநிலைக் கொள்கையை நிலைநாட்ட விரும்பும் எவரும் ஃபிரான்ஸ் அரசரையும், பேரரசரை யும் இணையவிடக் கூடாது என்பது மட்டுமன்று; அவ்விருவரையும் பகைவர்களாக்கி இடையருப் போருக்கு ஆளாக்க வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றியே ஆகவேண்டும். இது நடக்கக் கூடிய செயலாகப் படவில்லை. மாருக, ஏழாம் ஹென்றி சேர்த்து வைத்த கருவூலத்தைக் காலியாக்கும் முயற்சியாகவும், எட்டாம் ஹென்றியின் செல்வாக்கினைக் குறைக்கும் முயற்சியாகவுமே உல்சியின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்திருந்தது.

### ஃபிரான்ஸும் பேரரசும்

உல்சி முதன் முதலாக ஃபிரான்ஸுடன் நட்புறவு கொள்ளும் கருத்தினைக் கொண்டிருந்தார். அது சரியான கொள்கையன்று. ஏனெனில், அது பேரரசைப் பகைத்துக்கொள்ளும் கொள்கை யாகும். பேரரசர் ஹாலந்தின் அரசராகவும் இருந்தார். அந்நாட்டுடன் இங்கிலாந்து வாணிகத்தொடர்பு கொண்டிருந்தது. வாணிகத்தைப் போற்றிக் காக்க வேண்டுமாயின் பேரரசருடன் பகைமை கொள்வது சரியான கொள்கையாகாது. ஆனால், உல்சி ஃபிரான்ஸ் மன்னர் பன்னிரண்டாம் லூயிக்கும்—அவருக்கு அப் போது வயது 52—அரசரின் சகோதரியான மேரிக்கும்— அவளுக்கு அப்போது வயது 18—திருமணம் முடிக்கவேண்டும்

என்று கருத்துக் கொண்டார். திருமணம் முடிக்கப் பெற்றது. ஐயோ பாவம்! திருமணமான சிறிது காலத்திற்குள் (1515) லூயி காலமானார். அடுத்த ஆண்டில் எட்டாம் ஹென்றியின் மாமனாரான அரகான் பெர்டினண்டும் காலமானார்; அதனை அடுத்து 1519ஆம் ஆண்டு வாக்கில் பேரரசர் மாக்ஸ்மிலியனும் மாண்டார். அவர்கள் மறைந்த பின்னர் ஃபிரான்ஸின் அரசராக முதலாம் ஃபிரான்ஸிஸ் என்பாரும், பேரரசராக ஐந்தாம் சார்லஸும் அரசரானார்கள். அவர்களும் எட்டாம் ஹென்றியைப் போலவே இளைஞர்கள். எனவே துடிப்பு மிக்கவர்கள். அவர்கள், எட்டாம் ஹென்றியும் தாமஸ் உல்சியும் ஐரோப்பிய விவகாரத்தில் தலையிடுவதை விரும்பவில்லை.

## பேரரசர் ஐந்தாம் சார்லஸ் (1519-56)

ஹாப்ஸ்பர்க் வம்சத்தின் எழுச்சி ஐரோப்பிய வரலாற்றில் சீரிய இடத்தைப் பெறுவதொன்றாகும். பேரரசராகப் பதவியேற்ற ஐந்தாம் சார்லஸ் தம் உறவின் காரணமாகப் பெரும் நிலப் பரப்பிற்கு அதிபதியானார். அந் நிலப் பரப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்தபோதிலும், ஐரோப்பாவின் பெரும் பகுதி அவருடைய ஆதிக்கத்தின்கீழ் வந்தது என்பதை நினைவுகொள்ளவேண்டும். தம்முடைய தாய்வழிப் பாட்டனாரான பெர்டினண்டும் அவரது மனைவி இசபெல்லாவும் காலமானபோது ஸ்பெயின், புத்துலக நாடுகள், இத்தாலியில் ஸ்பானியருக்குச் சொந்தமான இடங்கள் ஆகியவற்றின் வாரிசுதாரரானார் ஐந்தாம் சார்லஸ். தந்தைவழிப் பாட்டனாரான மாக்ஸ்மிலியன் காலமான போது அவருக்கு ஆஸ்திரியாவும், மாக்ஸ்மிலியனின் மனைவி மேரி காலமானபோது பர்கண்டியும் ஹாலந்தும் ஹாப்ஸ்பர்க் அரசர்களுக்குச் சொந்தமாயின. அவருடைய ஆட்சிப் பகுதிகள் ஃபிரான்ஸ் நாட்டின் இருமருங்குகளிலும் இருந்தன.

இதனிடையில் அரசியல் சதுரங்க விளையாட்டும் தொடங்கி விட்டது. எட்டாம் ஹென்றியும் முதலாம் ஃபிரான்ஸிஸும் சந்திக்கும் ஏற்பாட்டினை உல்சி செய்தார். இச் சந்திப்பு கைஸ்நஸ் (Guisnes) என்னுமிடத்தில் நிகழ்ந்தது. தடபுடல் ஏற்பாட்டினைக் கண்டவர்கள் அதனைப் பொன்துணி வயல் (Field of cloth of gold) (1520) என்று கூறினர். ஆனால், ஹென்றி தம் மருகரான சார்லஸை இருமுறை சந்தித்திருந்தார். முதல்முறை ஃபிரான்ஸிஸைப் பார்ப்பதற்கு முன்னரும், மறுமுறை அவரைச் சந்தித்த பின்னரும் அவர் பேரரசர் சார்லஸைச் சந்தித்திருந்தார். அது

மட்டுமன்று; உல்சியின் கருத்தினை மதிக்காமல் பிரான்ஸ் நாட்டிற்கு எதிராகச் சார்லஸுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டார். இங்கிலாந்து ஃபிரான்ஸின்மீது படையெடுத்த போது, ஃபிரான்ஸிஸ் அதுகண்டு ஆச்சரியமடையவில்லை. அவர் பேரரசருடன் ஏற்கெனவே போரிட்டு வந்தார்.

## பேவியாப் போர், 1525

ஹென்றி ஃபிரான்சுக்கெதிராகப் படையொன்றை அனுப்பிய போதிலும், அப் படை வெற்றியொன்றையும் பெறவில்லை. சொல்லொணுப் பொருட்செலவுக்காளாக நேரிட்டதால் இப் போரை இங்கிலாந்து மக்கள் வெறுத்தனர். ஆதரவு கிட்டவில்லை. உல்சிக்குப் பாராளுமன்றத்திலும் தோல்வியே ஏற்பட்டது. போரைத் தொடரவேண்டி அதிக வரி விதிக்கக் கோரிய அவரது கோரிக்கையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவருடைய முன்னிலையில் விவாதிக்க மறுத்ததோடன்றி, அவர் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறிய பின்னரே விவாதித்து, அவர் கோரிக்கையைவிடக் குறைந்தவளவு மானியத்தையே வழங்கினர். இரண்டாண்டுகளுக்குப் பின்னர்ப் பேரரசர் ஐந்தாம் சார்லஸ் ஃபிரான்ஸ் மன்னர் முதலாம் ஃபிரான்ஸிஸை இத்தாலியில் உள்ள பேவியா என்னுமிடத்தில் 1525ஆம்ஆண்டில் தோற்கடித்தார்; ஃபிரான்ஸிஸ் கைதானுர். ஹென்றியும் உல்சியும் இத் தருணத்தைப் பயன் படுத்திக்கொண்டு, மீண்டுமொருமுறை ஃபிரான்ஸின்மீது படையெடுக்கத் தீர்மானித்தனர். அவர்கள் பாராளுமன்றத்தைக் கூட்ட விரும்பாமல், சொத்து வரி ஒன்றினைக் கடனுகப் பெற முயன்றனர். இங்கிலாந்தின் சட்டங்களையும், உரிமைகளையும் பறிப்பதாக மக்கள் அனைவரும் கார்டினல் உல்சியைக் குறைகூறிப் பழித்தனர். வரிக்கொள்கை நாட்டில் கலகத்தை மூள்விக்கும் நிலை வந்தபோது அக் கொள்கையைக் கைவிடத் தீர்மானித்தனர். ஃபிரான்ஸுடன் மீண்டும் உடன்படிக்கை செய்துகொள்ளவும் முடிவு செய்தனர். இருபது இலட்சம் பவுன் கொடுத்துவிட்டு ஹென்றியுடன் நட்புறவு கொள்ள ஃபிரான்ஸிஸ் ஒப்புக் கொண்டார்.

## ரோமாபுரி சூறையாடப்படல், 1527

சிறைமீண்ட முதலாம் ஃபிரான்ஸிஸ் இங்கிலாந்துடன் தம் நட்புறவைப் புதுப்பித்துக்கொண்டார். அதன் விளைவாகப் பேரரசருடன் உடன்பாட்டினைக் கைவிடவேண்டியவரானுர் உல்சி. உடன்பாட்டினைக் கைவிடப் பலவேறு காரணங்களிருந்தன. எதிர் பார்த்தபடி தம்மைப் பேரரசர் போப்பாண்டவராக நியமிக்க

வில்லையே என்று உல்சி ஏமாந்து போனார். பேரரசர், ஏழாம் கிளமெண்ட் என்பவரைப் போப்பாண்டவராக நியமிக்க ஒப்புக் கொண்டிருந்தார். இதைவிட மற்றொரு முக்கியக் காரணமும் இருந்தது. பேரரசர் ஐந்தாம் சார்லஸ் இத்தாலியில் மாபெரும் வெற்றி பெற்றமையால், சமநிலைக்கொள்கை (Balance of Power) நிலைகுலைந்து போயிற்று. போப்பாண்டவர் ஏழாம் கிளமெண்ட் பேரரசருக்கெதிராகப் புதியதோர் உடன்படிக்கையைச் செய்து கொண்டபோது, பேரரசரின் ஜெர்மானியப் படைகள் ரோமாபுரி யைச் சூறையாடின (1527). கிறிஸ்தவரல்லாத காட்டுமிராண்டிகள் செய்த கொடுமையைவிடக் கிறிஸ்தவப் படைகளிடம் சிக்கிச் சீரழிந்தது ரோமாபுரிப் புனித நகரம்.

போப்பாண்டவர் பேரரசரின் கைதியானார். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில்தான் தம் மனைவி காதரினை மணவிலக்கம் கோரி ஹென்றி பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி இருந்தார். காதரின் பேரரசரின் அத்தையாவார்கள். மணவிலக்கத்தைப் போப்பாண்டவரிடமிருந்து பெறும் பொறுப்பு உல்சியினிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை அவர் செய்து முடிக்கத் தவறிய போது, அது உல்சியின் வீழ்ச்சிக்கு வழிகோலியது. அது மட்டு மன்று; எட்டாம் ஹென்றி கத்தோலிக்கச் சமயத்தை முறித்துக் கொள்ளவும் அந் நிகழ்ச்சியே காரணமாக அமைந்தது. அதன் பயனாக இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்தம் ஏற்பட்டது. உல்சியின் வெளிநாட்டுக் கொள்கையால் இங்கிலாந்து மக்கள் சொல்லொணா வேதனையுற்றனர். எனினும், அரசரின் மணவிலக்கக் கோரிக்கை இங்கிலாந்திற்கும் போப்பாண்டவரின் அதிகாரத்திற்கும் இடையே மூண்டிருந்த பழைய வெறுப்பைத் தளிர்விட்டு வளரச்செய்தது.

### எட்டாம் ஹென்றியும் கப்பற்படையும்

எட்டாம் ஹென்றி மன்னரின் ஆட்சிக்காலத்தை இரு பிரிவு களாகப் பிரிக்கலாம். 1509–29 வரையிலான முதற்பிரிவின் போது உல்சியின் ஆதிக்கம் உச்சக் கட்டத்தை எட்டியிருந்தது. இரண்டாம் பிரிவின்போது ஹென்றி, போப்பாண்டவருடன் தமக்கிருந்த உறவை முறித்துக்கொண்டார்.

இவ்விரு பிரிவுகளின்போதும் அரசரின் கப்பற்படையை விரிவுபடுத்தும் விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டது எனில் அது மிகையாகாது. இத் தருணத்தில்தான் பால்போ என்பார் பசிபிக் பெருங்கடலையும், மகெல்லன் என்பார் தம்

வீரர்களுடன் கப்பல் வழியாக உலகைச் சுற்றியும், கார்டஸ் என்பார் மெக்சிகோவை வெற்றிகண்டும், பிஸாரோ என்பார் பெரு நாட்டில் வெள்ளிச் சுரங்கங்களைச் சுரண்டிக்கொண்டும் இருந்தார்கள். ஆனால், எட்டாம் ஹென்றியோ இங்கிலாந்தின் கடலாதிக்கத்தைப் பெருக்கும் பணிக்கான அடிக்கல்லை நாட்டி வந்தார்.

## வாணிகத் துறைக்கான கப்பல்கள்

இடைக்காலத்தில் ஆங்கிலக் கப்பல்கள் போர்க்கப்பல்கள் என்றும், வாணிகத்துறைக் கப்பல்கள் என்றும் பிரிக்கப்படவில்லை. எல்லாக் கப்பல்களும் வாணிகத்திற்கே பயன்பட்டன. போரற்ற காலங்களில் இக் கப்பல்களைக் கடற்கொள்ளைக்காரர்களிடமிருந்து காக்கப் படைக்கலமேந்திய போர்வீரர்களும், போர்க்காலங்களில் பகைவரைத் தாக்க நன்கு ஆயத்தமாக்கப்பட்ட ஆயுதந்தரித்த படைவீரர்களும் காத்து வந்தனர். இதனால் போர்க்கப்பலென்றும் வாணிகக் கப்பலென்றும் பாகுபாடே இல்லாமல் இருந்தது. ஃபிரெஞ்சுப் போர்களில் ஆங்கில அரசர் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கக் கப்பல்கள் தேவையென்று கேட்ட போதெல்லாம் அவருடைய அதிகாரிகள் கப்பல்களின் இரு மருங்கிலும் மரக்கோட்டைகளைக் கட்டிக்கொடுத்தார்கள். இவ்விரு மருங்கிலுமிருந்த மரக்கோட்டைகளிலிருந்து பகைவர்களை அம்புகளினால் தாக்கினார்கள். முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்ட சிறு துப்பாக்கிகளும் இம் மரக்கோட்டைகளிலிருந்துதான் பயன்படுத்தப்பட்டன. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில்தான் போருக்கென்றே உதவும் சில கப்பல்கள் கட்டப்பட்டன. பின்னர் எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் துப்பாக்கிப் படைகளைப் பொறுத்தமட்டில் பெரும் வளர்ச்சி தோன்றலாயிற்று. பெருந் துப்பாக்கிகளை நெதர்லாந்து நாட்டிலிருந்து விலைக்கு வாங்கி ஹென்றி கப்பல்களில் பொருத்தத் தொடங்கினர். ஆனால், அதில் ஒரு தொல்லையிருந்தது. இத்தகைய பெருந் துப்பாக்கிகளைக் கப்பல்களின் இருமருங்கிலும் பொருத்தப்பட்டிருந்த மரக்கோட்டைகளால் சுமக்கமுடியவில்லை. ஆங்கிலக் கப்பல்களில் பெருந் துப்பாக்கிகளைச் சுமக்கும் வகையில் கப்பல்களைக் கட்டிய பெருமை ஜான் பேக்கர் என்ற கப்பல்கட்டும் வல்லுநரைச் சாரும். எட்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத் தொடக்கத்தின்போதுதான் கப்பல்களின் பக்கவாட்டத்திலேயே தொளைகளைக் குத்தி அவற்றின்மூலம் துப்பாக்கிகளைச் சுட முடியும் என்ற கருத்தானது வெளியாயிற்று. இவ்வாறுதான் துப்பாக்கி தாங்கும் போர்க் கப்பல்கள் உருவாக்கப்பட்டன.

**அரசரின் கப்பற்படை (Royal Navy)**

எட்டாம் ஹென்றிக்குக் கப்பல் கட்டுவதில் மிகுந்த ஆர்வமிருந்தது. அவருடைய தந்தையாரிடமிருந்து இரண்டு பெரிய கப்பல்களையும் ஐந்து சிறிய கப்பல்களையும் அவர் பெற்றிருந்தார். அவருடைய ஆட்சிக்காலம் முடிவுறுவதற்குள் கப்பல்களின் எண்ணிக்கை ஐம்பத்துமூன்ருக உயர்ந்தது. 1500 டன் எடையுள்ள பெரும் ஹாரி (Great Harry) என்னும் கப்பல்தான் அவர் கட்டிய கப்பல்களில் பெரியதெனக் கருதப்பட்டது. மேற்கூறிய கப்பல்கள் அனைத்திலும் புதிய துப்பாக்கிகள் இணைக்கப்பெற்று அவை போர்க்கப்பல்களாக்கப்பெற்றன. அத்தகைய கப்பல்கள் தாம் பின்னர் முதலாம் எலிசபெத் அரசியின் காலத்தில் ஸ்பானிய ஆர்மடாவைத் தோற்கடித்தன என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் மூண்ட ஃபிரெஞ்சியப் போர்களில் கடற்போர்கள் முக்கியமானவையாகக் கருதப் படவில்லை. முதல் போரில் சர் எட்வர்டு ஹோவார்டு என்பார் பிரெஸ்ட் (Brest) நகருக்கு அருகில் நடைபெற்ற கடற்போரில் வெற்றி பெற்ருர் (1512). இரண்டாம் போரின்போது ஃபிரெஞ்சியர் கடல்பக்கமே தலைகாட்டவில்லை. இருபதாண்டுகளுக்குப் பின்னர், அவருடைய ஆட்சியின் இறுதிக் கட்டத்தின்போது மூன்ரும்போர் மூண்டது. வழக்கப்படி ஸ்காட்டியர் ஃபிரெஞ்சியர் பக்கம் சேர்ந்துகொண்டு போரிட்டனர். ஸ்காட்டிய மன்னரான ஐந்தாம் ஜேம்ஸ் அனுப்பிய படைகளை சர் தாமஸ் வார்டன் (Sir Thomas Wharton) 1542ஆம் ஆண்டில் சால்வேமாஸ் என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஃபிரெஞ்சியக் கப்பல்கள் போர்ட்ஸ்மத் நகரைத் தாக்கி அங்குக் கரையிறங்க முயன்றன. ஆனல், அடுத்த நாள் போரிடாமலேயே அவை திரும்பிச் சென்றன. ஹென்றி மன்னரின் புதிய கப்பற்படை நிலைநாட்டப்பட்டதால் 1545-ல் இங்கிலாந்தின்மீது ஏற்பட இருந்த படையெடுப்புத் தவிர்க்கப்பட்டது.

புதிதாக உருவாக்கப்பெற்ற இக் கப்பற்படை எலிசபெத் அரசியார் காலம்வரை சீரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என்ருல் அது தவருகாது. மத்தியதரைக் கடற்பக்கம் பழக்கத்திலிருந்த முறைகளைவிட ஆங்கிலக் கப்பற்படையில் புகுத்தப்பட்ட புது முறை உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் இருந்தது. மத்தியதரைக் கடலை அடுத்திருந்த ஸ்பெயின், வெனிஸ் போன்ற அரசுகள் பயன்படுத்திய கப்பல்களை அடிமைகள் ஓட்டிச் சென்றனர். போர்க் காலங்களில் அக் கப்பல்கள் பகைவர்களின்

கப்பல்களை மோதியோ அல்லது பகைவர்களின்மீது படை வீரர்களை ஏவியோ போராடும் முறையைக் கடைப்பிடித்து வந்தன. ஆனால், ஹென்றியின் கப்பல்கள் சுடும் ஆயுதங்களைத் தரித்திருந்தமையால் மத்தியதரைக் கடல் போர்முறையால் அவரைத் தோற்கடிக்க முடியவில்லை. டிரேக் போன்றவர்கள் இம் முறையைக் கையாண்டுதான் பிற்காலத்தில் வெற்றி பெற்றனர். எட்டாம் ஹென்றி கப்பற்படைப் போர்முறைகளில் புரட்சி ஒன்றினைப் புகுத்தினார் என்றால் மிகையாகாது. அரசாங்கக் கப்பற்படையை நிலைநாட்டிய பெருமை அவரையே சாரும். அவருடைய தந்தையாரான ஏழாம் ஹென்றி வணிகத் துறை கப்பற்படையை நிறுவியவர் என்பதும் நினைவு கூரத்தக்கதாம்.

# 6. ஐரோப்பாவில் சமயச் சீர்திருத்தம்

## (அ) எராஸ்மஸும் மூரும்
## (Erasmus and More)

கி.பி. 1492ஆம் ஆண்டிற்கும் 1521ஆம் ஆண்டிற்கும் இடைப் பட்ட முப்பதாண்டுகள் திருச்சபை வரலாற்றில் சிறப்புமிக்க ஆண்டுகளாகும். இக் காலத்தில் ஆறும் அலெக்சாந்தர், இரண்டாம் ஜூலியஸ், பத்தாம் லியோ என்னும் மூன்று போப்பாண்டவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் பதவிக் காலம் பல வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆறும் அலெக்சாந்தர்தாம் புது உலக நாடுகளை இரண்டாகப் பங்கிட்டு ஸ்பெயினுக்கும், போர்த்துகலுக்கும் வழங்கியவர். மேலும் சமயச் சீர்திருத்தம் கோரிய சவனரோலா (Savonarola) என்பவரைக் கழுவேற்றியவர். இரண்டாம் ஜூலியஸ் ஐரோப்பிய அரசியல் விவகாரத்தில் தலையிட்டுப் பெரும் பங்காற்றியவர்; அதன் பயனை அவரால் திருச்சபைக்கும் போராட முடிந்தது. பத்தாம் லியோ கலைத்துறையில் மைக்கேலாஞ்சலோ, ராஃபல் போன்ற நுண் கலைப் பேரறிஞர்களைப் புரந்த புரவலர். ஆனால், பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்று, செயின்ட் பீட்டர் ஆலயத்தைத் திருத்திக் கட்ட நிதி திரட்டியவரும் அவரே; அதனால் சமயச் சீர்திருத்தம் கோரிய மார்ட்டின் லூதரின் புரட்சிக்கு வித்திட்ட வரும் அவரே. கலை, இலக்கியம் போன்ற துறைகளுக்கு அவர்கள் காட்டிய பேராதரவை, செயின்ட் பீட்டர் ஆலயத்தைத் திருத்திக் கட்ட முயற்சி செய்ததை மக்கள் போற்றினாலும் திருச்சபையில் ஏற்பட்ட ஒழுக்க வீழ்ச்சியும், சமயத்தைத் திருத்தம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையும் எழுச்சியுற்றுத் திருச்சபை வரலாற்றில் ஏற்பட்ட சீரிய திருப்பத்திற்கும் இக் கால கட்டம் இன்றியமையாததாகும். ஒழுக்க வீழ்ச்சியின் பயனைத் தான் பல்வேறு சிறந்த சீர்திருத்தவாதிகள் சமயத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள்.

**சவனரோலா**

ஆக்ஸ்ஃபோர்டில் கோலட் என்பார் கிறிஸ்துநாதரின் வாழ்வைப் போன்றே மக்கள் வாழவேண்டும் என்று போதித்த

காலத்தில் ஃபிளாரன்ஸ் நகரைச் சார்ந்த சவனரோலா என்னும் பெரியார் அதே போன்ற கருத்தை இத்தாலியில் போதித்து வந்தார். சவனரோலா ஒரு திரிதுறவியார். ஒழுக்க வீழ்ச்சிக் கெதிராகப் பேசிய அவர், போப்பாண்டவர் ஆரும் அலெக்சாந்தரின் தரங்கெட்ட வாழ்வைக் கடுமையாகச் சாடினர். ஆனல், சவனரோலாவின் பேரும் புகழும் மங்கத் தொடங்கின. அத் தருணத்தைப் பயன்படுத்திப் போப்பாண்டவர் அவரைச் சமய நிந்தனைக்காரர் எனக் குற்றஞ்சாட்டி 1498ஆம் ஆண்டில் கழுவேற்றினர்.

ஏனைய சமயச் சீர்திருத்தக்காரர்களில் எராஸ்மஸ் என்னும் பெரியார் குறிப்பிடத்தக்கவர். அவர் இராட்டர்டாம் நகரைச் சார்ந்தவர். அவருக்கு முப்பதாண்டுகள் ஆனபோது அவர் இங்கிலாந்துக்கு வந்துற்றார் (1498) — அதாவது ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில். அவருக்குக் கோலட்டுடனும், சர் தாமஸ் மூர் என்பாருடனும் தொடர்பேற்பட்டது. இம் மூவரும் காலமாகும் வரை தொடர்ந்து நண்பர்களாயிருந்து ஐரோப்பியச் சிந்தனைக்கு மறக்கமுடியாத நன்மைகளைச் செய்தார்கள். எட்டாம் ஹென்றி முடிசூட்டிக்கொண்ட சமயம் எராஸ்மஸ் இங்கிலாந்திலேயே சிறிதுகாலம் தங்கலானர். மேலும் ஆக்ஸ்ஃபோர்டில் இறைமையியலுக்கும், கிரேக்க மொழிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினர். அவருடைய நண்பர் கோலட் செயின்ட் பால் நிலையத்தின் டீனகப் பணியாற்றி எட்டாம் ஹென்றியின் கொள்கைகளுக்கெதிராகப் பிரசாரம் செய்தவர். அவரும் ஆக்ஸ்ஃபோர்டில் கிரேக்க மொழி விரிவுரையாளராகப் பணிபுரிந்ததோடன்றி செயின்ட் பால் பள்ளியையும் நிறுவினர். புதுக் கல்வியை முன்னேற்றுவிக்க அவர் பெரிதும் பாடுபட்டார்.

மேற்கூறிய பேராசிரியர்கள் கிறிஸ்தவ சமயத்தின் புரையோடிய செயல்முறைகளைக் குறைகூறிமட்டும் வரவில்லை. சீர்திருத்தக்காரர்கள் என்ற முறையில் அவர்கள் அக்காலத்தின் தலைவர்களாகவும் திகழ்ந்தார்கள். எராஸ்மஸ் போப்பாண்டவரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர். ஆத்மஞானத்தைப் புறக்கணித்து விட்டு, போப்பாண்டவர் இரண்டாம் ஜூலியஸ், பாம்பேயைப் போன்றோ சீசரைப் போன்றோ இராணுவ ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கியதையும் அவர் குறைகூறி விமரிசித்தார். 1510ஆம் ஆண்டில் 'குற்றப் புகழ்ந்துரை' (Praise of Folly) என்னும் நூலில் அவர் அரசர்களையும், இளவரசர்களையும், போப்பாண்டவரையும், திருச்சபைக் குருமார்களையும் எள்ளி நகையாடி எழுதியிருக்கிறர்.

1516ஆம் ஆண்டில் எராஸ்மஸ் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டினைப் பதிப்பித்தார். அதில் தேவையான அளவு கிரேக்கமொழி மூலத்திலிருந்தும், தம்முடைய சொந்த விளக்க வுரைகளை இலத்தீன் மொழியிலும் கொடுத்தார். விவிலியத்தின் உண்மையான போதனைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதே இந் நூலின் குறிக்கோளாகும். மக்கள் விவிலியத்தைப் படித்துப் புரிந்துகொள்வார்கள் என்று எராஸ்மஸ் நம்பினர். எராஸ்மஸும் ஆக்ஸ்ஃபோர்டு சீர்திருத்தக்காரர்களும் புதிய ஏற்பாட்டில் கூறி யிருந்த கருத்துகளின்படி நடந்தால் மீண்டும் திருச்சபை சீரிய நோக்கத்துடன் வாழும் என்று நம்பினர்கள். புதிய கல்வியைப் பயன்படுத்திக் கிறிஸ்தவ மறுமலர்ச்சியை ஊக்குவித்தார்கள். ஆனல், அவர்கள்—மார்ட்டின் லூதரைப் போலல்லாது—ரோமாபுரித் திருச்சபைக்கு எதிராகச் செல்லவில்லை என்பதை நினைவிற்கொள்ளவேண்டும்.

### சர் தாமஸ் மூர்

புதிய ஏற்பாட்டினை எராஸ்மஸ் எழுதிய அதே சமயத்தில் சர் தாமஸ் மூர் என்னும் மற்றொரு சீர்திருத்தக்காரர் 'உடோப் பியா' (Utopia) என்னும் நூலை எழுதினர். சர் தாமஸ் மூர் இலண்டன் நகரவாசி; 1478ஆம் ஆண்டில் சீப்சைடு என்னு மிடத்தில் பிறந்தார். சிறு வயதில் அவர் ஆர்ச்பிஷப் மார்ட்டன் என்பாரிடத்தில் பணி புரிந்தார். அவருடைய செல்வாக்கின் பயனக அவர் ஆக்ஸ்ஃபோர்டு கான்டர்பரி மன்றத்திற்கு அனுப்பப்பெற்ருர். அது பின்னர் உல்சியால் தொடங்கப் பெற்ற கிறிஸ்து திருச்சபைக் கல்லூரியில் இணைந்தது. ஆக்ஸ் ஃபோர்டில்தான் இளம் மாணவரான மூர் புதிய கல்வியின் செல்வாக்கிற்கு ஆளானர். அங்குதான் அவர் பின்னர் கோலட் டையும் எராஸ்மஸையும் சந்தித்தார். தமக்குப் பின் தம்மைப் போன்றே தம் மகன் வழக்குரைஞராக, சட்ட வல்லுநராக வேண்டுமென்று மூரின் தந்தையார் விரும்பியதால், ஆக்ஸ் ஃபோர்டை விட்டுச்சென்று இலண்டன் நகரில் சட்ட மாணவ ராக ஆனர். சட்ட வல்லுநர் என்ற முறையில் அவர் பெரும் புகழ் பெற்ருர்; பாராளுமன்றத்திலும் புகுந்தார். அங்கும் அவர் சீரிய புகழ்பெற்று விளங்கினர். தம் பொதுப்பணிகளினூடேயும் மூர் தொடர்ந்து கோலட்டுடனும், எராஸ்மஸுடனும் நட்புறவு கொண்டிருந்தார். கோலட்டின் செல்வாக்கின் பயனகவே அவர் தம்முடைய சீரிய நூலை எழுதிமுடித்தார் என்ருல் மிகையாகாது.

உடோப்பியா என்ற நூலை சர் தாமஸ் மூர் இலத்தீன் மொழியில் எழுதினர். உலக நூல்களுள் அதுவும் ஒரு சிறந்த

நூலாகக் கருதப்படுகிறது. இம் மூன்று நண்பர்களும் வளமான வருங்காலத்திற்கான கனவுகளைத் தம் கருத்துகளின்மூலம் கண்டவர்கள். அத்தகைய வருங்காலக் கருத்துகளைக் கொண்டிருந்தது உடோப்பியா. அதேசமயம் அக்காலச் சமூகக் கொடுமைகளையும் அந் நூல் சாடத் தவறவில்லை. மேற்கூறிய மூவரையும் ஆக்ஸ்ஃபோர்டு சீர்திருத்தவாதிகள் என்பர். இவர்கள் அனைவரும் உண்மையான கிறிஸ்தவர்கள்; நல்ல கத்தோலிக்கர்கள். மறுமலர்ச்சியின் புதுக் கருத்துகளும், அக்காலப் புத்துணர்ச்சியும் கிறிஸ்தவ சமயக் கொள்கைகளுடன் இணைந்தால் அது புதியதொரு மானிடத்துவத்திற்கு (Humanism) வழிகோலும் என்று அவர்கள் நம்பினார்கள். ரோமாபுரியிலும், இத்தாலியிலும் நிலவிய அரைவேக்காட்டுத்தனங்களைக் கண்ட அவர்கள் மனம் மருண்டார்கள். திருச்சபை வெளியார் தாக்குதல்களால் சீரழியக் கூடாதென்றும் உள்ளுக்குள்ளேயே அது சீர்திருத்தப்பட வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள்.

சீர்திருத்தப்பட்ட திருச்சபை எப்படியிருக்கும் என்று கனவுகளை மட்டுமல்லாமல், திருத்தியமைக்கப் பெற்றதொரு உலகினைப்பற்றியும் தம் நூலில் கற்பனை செய்திருந்தார் சர் தாமஸ் மூர். புதிய உலகுக்குச் சென்றுவந்த கப்பற்பயணி ஒருவன் வாயிலாகப் புது உலகக் கருத்துகளைக் கூறினார் மூர். நன்கு கட்டப்பெற்ற காற்றோட்ட வசதியான வீடுகள், அதனைச் சுற்றி அழகான தோட்டங்கள், மருத்துவ மனைகள், தண்ணீர் வசதிகள், ஊர்ப் பொதுமன்றங்கள் ஆகியவற்றை அக்காலத்திலேயே கற்பனை செய்து எழுதியிருந்தார் மூர், தம் உடோப்பியாவில். போரைச்சாடிய அந் நூல் ஐரோப்பாவில் சண்டை சச்சரவுகளற்ற சமுதாயத்தைக் கற்பனையில் உருவாக்கியிருந்தது.

ஏழை எளிய மக்களையும், அவர்கள் படும் துயரங்களையும் சுட்டிக்காட்டி, பணம் படைத்தோரின் திமிரைக் குறைகூறி, அவர்கள் திருடர்கள் போன்றவர்கள் என்று வருணித்திருந்தது அந் நூல். உரோம உற்பத்தியைப் பெருக்க ஆட்டுப் பண்ணைகளை அக்காலத்தில் பெருக்கிவந்தார்கள். அதற்காக நிலங்களை வளைத்துப் போட்டுக்கொண்டார்கள். அம்முறையை உடோப்பியா வன்மையாகக் கண்டித்தது. எட்டாம் ஹென்றியை அந் நூல் கவர்ந்திழுத்தது. அவர் மூருக்குப் பல சலுகைகளைக் கொடுத்தார். எனினும், எட்டாம் ஹென்றியின் குணநலனில் இருந்த குறைகளை அவர் கண்டிக்கத் தவறவில்லை.

## (ஆ) மார்ட்டின் லூதரும் ஜெர்மானிய சமயச் சீர்திருத்தமும்

உலகியலில் ஆர்வம் காட்டிய போப்பாண்டவர்கள், சுயநலமிகளான இளவரசர்கள், அறியாமையில் ஆழ்ந்திருந்த மக்கள் ஆகியவர் சமுதாயத்தில் காணப்பட்ட குற்றங்களாகும். மேற்கூறிய குறைபாடுகளை மக்கள் குறைகூறத் தொடங்கினார்கள். அதன் விளைவாகச் சமயச்சீர்திருத்தம் அமைதிவழி மாற்றத்திற்குப் பதிலாகச் சுழன்றடிக்கும் சூறாவளிப் புயலாக, புரட்சியாக உருவெடுத்தது. இப் புரட்சிக்கு மூலகாரணமானவர் மார்ட்டின் லூதர் என்ற பெரியார் (1483—1546) ஆவார். அவருடைய சமயச் சீர்திருத்தப் புரட்சி உலகை உலுக்கிக் குலுக்கியது.

### மார்ட்டின் லூதர், 1483—1546

ஜெர்மனியைச் சார்ந்த சாக்ஸனியில் உள்ள ஐயில்பன் (Eisleben) என்ற ஊரில் வேளாண்மைக் குடும்பத்தில் 1483ஆம் ஆண்டில் மார்ட்டின் லூதர் பிறந்தார். பள்ளிப் பருவத்தில் மதிநுட்பம் காட்டிய லூதரை, அவருடைய தந்தையார் எர்பர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்த்துப் படிக்கவைத்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் உலக வாழ்வைத் துறந்து லூதர் எர்பர்ட்டிலேயே ஒரு திரிதுறவியானார். எர்பர்டின் சமய ஒழுக்கம் அவரைத் துறவியாராக்க உதவி செய்தது. பின்னர் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தில் பத்தாண்டுகள் இறைமையியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார் லூதர். விட்டன்பர்க் பல்கலைக்கழக ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில்தான் அவருக்கு ரோமாபுரிக்குச் சென்றுவரும் வாய்ப்பேற்பட்டது (1511). போப்பாண்டவரும் அவருடைய கார்டினல்களும் வாழ்ந்த உலகியல் வாழ்க்கையைக் கண்டு நெஞ்சு நடுக்குற்ற லூதர், இத்தாலியரின் ஒழுக்க வீழ்ச்சியை நேருக்கு நேர் கண்டறிந்தார்.

1517ஆம் ஆண்டு பிறந்தது. சமயப் புரட்சி ஏற்பட்டது அந்த ஆண்டில்தான். தம்மை அறியாமலேயே லூதர் அப் புரட்சிக்கு வித்திட்டார். போப்பாண்டவர் பத்தாம் லியோ என்பாருக்குச் செயின்ட் பீட்டர் தேவாலயத்தைச் செப்பனிடப் பொருள் தேவைப்பட்டது. நல்ல பணிதான். ஜெர்மனியிலும் அப் பணிக்கெனப் பொருள் திரட்டும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. டாமினிக்கன் வழிபாட்டு முறையைச் சார்ந்த டெட்சல் என்ற திரிதுறவியார் அதற்காக அனுப்பப்பட்டார். பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்பதன்மூலம் பொருள் திரட்ட வேண்டு

மென அவர் பணிக்கப்பட்டார். டெட்சல் ஜெர்மானிய நகரில் இப்பணிக்காக நுழைந்தபோது மக்களின் அனைத்துப் பிரிவினரும் அவரை ஆரவாரமாக வரவேற்றனர்கள். அவரை அந் நகரின் பிரதான திருச்சபைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்கள். டெட்சல் சமயச் சொற்பொழிவாற்றிய பின்னர்ப் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்கத் தொடங்கினர்.

**பாவமன்னிப்பு**

பாவமன்னிப்புத் தொன்றுதொட்டு வந்த ஒரு பழக்கமாகும். அதில் மாபெரும் உண்மை அடங்கியிருப்பதாகக் கத்தோலிக்கர்கள் நம்பியபடியே லூதரும் நம்பினர். ஆனால், அம் முறையை டெட்சல் பணம் பறிக்கப் பயன்படுத்திப் பெரும் இழுக்குக்கு ஆட்படுத்தினர். குற்றம் செய்தவர் தாம் செய்த தவற்றை மனதார உணர்ந்து அதற்காக வருந்தும் முறைக்கு மாறாக, பொருள் கொடுப்பதன் மூலம் பாவமன்னிப்பைப் பெறமுடியும் என்று டெட்சல் வலியுறுத்தியது பணம் பறிக்கத்தான் என்பதை மார்ட்டின் லூதர் தெளிவாக அறிந்தார். 'பாவமன்னிப்பு'க்குப் பிணையாகச் செலுத்தப்படும் நாணயம் பெட்டிக்குள் விழுந்தவுடனேயே, யாருடைய பாவத்திற்கு அது செலுத்தப்படுகிறதோ, அவருடைய ஆத்மா நேராகப் 'பரமண்டலம்' சென்றடையும் என்பது டெட்சலின் பிரசாரமாகும். இம் முறைபிசகான செயலுக்கு எதிராக மார்ட்டின் லூதரும் ஏனைய சிந்தனையாளர்களும் கொதித்து எழுந்தனர். இதற்கு எதிராக ஏற்கெனவே எராஸ்மஸ் எழுதியிருந்தார். ஆனால், இத் தவறான, முறைகேடான பழக்கத்தின் மண்டையில் அடித்த பெருமை மார்ட்டின் லூதரையே சாரும். மார்ட்டின் லூதர் செய்த புரட்சி போப்பாண்டவர் முறையையே உலுக்கிக் குலுக்கியது. டெட்சலின் வியாபாரத்தைக் கண்டு அவர் வெறுப்புற்றார். எனவே, லூதர் பாவமன்னிப்பினைத் தவறாகப் பயன்படுத்தும் முறைக்கெதிராக 95 குற்றச்சாட்டுகளைச் சுட்டிக்காட்டி அதனை விட்டம்பர்க் திருச்சபையின் கதவில் ஒட்டினர். அதன் பயனாக மாபெரும் கிளர்ச்சியே மூண்டது. சமயத்தைத் திருத்துவது அவசியம். அதனைச் செய்ய மார்ட்டின் லூதரே தகுதியானவர் என்று மக்கள் நம்பினர்.

மார்ட்டின் லூதரின் எதிர்ப்பினைக் கேள்வியுற்ற போப்பாண்டவர் லூதரின் கருத்துகளைப் பொருட்படுத்தவில்லை; மாறாக எள்ளி நகையாடினர். பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்தே செயின்ட் ஃபிரான்சிஸ், செயின்ட் டாமினிக், விக்லிஃப், அவரைப் போற்றிய லோலார்டுகள், பொஹிமியைச் சார்ந்த ஹஸ்,

சவனரோலா, எராஸ்மஸ், ஆக்ஸ்ஃபோர்டு சீர்திருத்தக்காரர்கள் போன்றவர்கள் இம் முறைக்கெதிராக எழுதியும் பேசியும் வந்து தோல்வியுற்றிருந்தார்கள். போப்பாண்டவர் பத்தாம் லியோ மார்ட்டின் லூதரின் எதிர்ப்பும் வழக்கப்படி பிசுபிசுத்துவிடும் என்றுதான் நம்பினர்.

மார்ட்டின் லூதருக்கே தாம் எழுப்பிய புரட்சிக் குரல் வெற்றி பெறுமா என்பது புலனாகாமலேயே இருந்தது என்றால் அது மிகையாகாது. ஆனால், 1520ஆம் ஆண்டுவாக்கில் பாவ மன்னிப்பு முறையை மட்டுமன்றி, போப்பாண்டவரின் தலைமை அதிகாரத்தையும், சமயத்தில் காணப்பட்ட தவறுகளையும் தாக்கி வந்தார் லூதர். 'திருடர்கள் கழுவேற்றப்படுவதில் நியாய மிருப்பதுபோல, இலஞ்ச ஊழலுக்கு இலக்காகியுள்ள கார்டினல் களையும், போப்பாண்டவர்களையும் கழுவேற்றுவதும் நியாயமே' என்று லூதர் பிரசாரம் செய்தார். அச்சடிக்கும் யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருந்ததால் அவருடைய பிரசாரம் ஜெர்மனி முழுதும் காட்டுத்தீயாகப் பரவிற்று.

போப்பாண்டவருக்கு அதிகார போதை தலைக்கேறி இருந்தமையால் லூதரின் கருத்துகளையோ அவரது உண்மை யான உள்ளத்தையோ புரிந்துகொள்ளும் வாய்ப்பேற்படவில்லை. காலம் லூதருக்குச் சாதகமாயிருந்ததைப் போப்பாண்டவர் உணர்ந்துகொள்ள மறுத்துவிட்டார்.

1520ஆம் ஆண்டில் லூதரைச் சமயவிலக்கம் செய்யும் ஆணை யொன்றினை வெளியிட்டார் போப்பாண்டவர். ஜெர்மானிய மக்களின் ஆதரவு தமக்கிருப்பதை அறிந்த லூதர், போப் பாண்டவரின் ஆணையைப் பொருட்படுத்தவில்லை; புறக்கணித்தார். விட்டன்பர்க் சந்தையில் போப்பாண்டவரின் ஆணையைத் தீயிட்டுக் கொளுத்தித் தம் எதிர்ப்பினைக் காட்டினார் லூதர். மார்ட்டின் லூதரின் இச் செயலைக் கண்டு மருண்டார்கள் பழைமை விரும்பிகள். 1521ஆம் ஆண்டு வோர்ம்ஸ் என்ற நகரில் கூடிய திருச்சபை மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென லூதருக்கு ஆணையிடப்பட்டது. பேரரசர் ஐந்தாம் சார்லஸ் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற உறுதி மொழியினை அடுத்து லூதர், போப்பாண்டவரின் ஆணைக்குக் கீழ்ப்படிய ஏற்றுக் கொண்டார். லூதரின் நண்பர்கள் அவரை எச்சரித்தார்கள்.

வோர்ம்ஸ் நகர மாநாட்டில் தம் கருத்துகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென லூதர் கேட்டுக்கொள்ளப்பட்டார்

விவிலியத்திற்கு எதிராகத் தம்மால் நடக்க இயலாதென மறுமொழிவிடுத்தார் லூதர். தாம் போற்றிப் பிரசாரம் செய்த கருத்துகளை அவர் ஆணித்தரமாகக் கடைப்பிடித்தார்.

அதே ஆண்டில்தான் இங்கிலாந்து மன்னர் எட்டாம் ஹென்றி நூலொன்றினை எழுதி, லூதரின் கருத்துகளுக்கு மறுமொழி கொடுத்திருந்தார். அந் நூலைப் 'பொன் நூல்' (Golden Book) என்பர். போப்பாண்டவர் லியோ அந் நூலினைப் பெற்றுக் கொண்டு, எட்டாம் ஹென்றிக்குச் 'சமயக் காவலன்' என்ற விருதினை வழங்கினுர். இவ் விருதினை இன்றும் இங்கிலாந்து அரசர்கள் சூட்டிக்கொள்ளுகின்றனர்; ஆங்கில நாணயங்களில் அவ் விருதினை இன்றும் காணலாம். இந்நிலையில் பத்தாம் லியோ காலமானுர்.

வோர்ம்ஸ் நகரை விட்டுவந்த மார்ட்டின் லூதருக்கு ஜெர்மானிய இளவரசர்கள் பாதுகாப்பளித்தனர். வார்ட்பர்க் கோட்டையில் காக்ஸனி எலக்டரின் விருந்தினராக இருந்த ஞான்றுதான் மார்ட்டின் லூதர் கிறிஸ்தவரின் வேதநூலான விவிலியத்தை (Bible) ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்தார்.

மார்ட்டின் லூதரின் பிராடஸ்டென்ட் சமயக் கருத்துகளைப் போற்றுவதன்மூலம் போப்பாண்டவரின் ஆதிக்கத்தை எதிர்க்க வழியுண்டென்பதனுல் ஜெர்மானிய இளவரசர்கள் மார்ட்டின் லூதருக்குப் பேராதரவு நல்கினர். இதன் விளைவாக ஜெர்மனியில் பிராடஸ்டென்ட்-கத்தோலிக்க இளவரசர்களுக்கிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. போர் மூண்ட ஆண்டான 1546-ல் தான் மார்ட்டின் லூதரும் காலமானுர். பேரரசர் ஐந்தாம் சார்லஸ் கத்தோலிக்கப் படைகளுக்குத் தலைவராக நின்றுர். இறுதியாக 1555ஆம் ஆண்டில் ஆக்ஸ்பர்க் உடன்படிக்கையின் படி, ஜெர்மனியில் லூதரின் கருத்துகளை ஆதரித்த நாடுகள் லூதரின் கொள்கைப்படி நடக்கவும், போப்பாண்டவரைப் புறக்கணிக்கவும் அனுமதிக்கப்பட்டன. அந்தந்த நாட்டின் அரசரின் சமயம் எதுவோ அதுவே அந் நாட்டின் சமயமாகக் கருதப்படும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆக்ஸ்பர்க் உடன்படிக்கை ஓரளவு உள்நாட்டுப் போரைத் தவிர்த்தது. எனினும், ஜெர்மனியில் நிலவி வந்த சமய ஒருமைப்பாடு சீர்குலைந்தது; பின்னர் அது ஐரோப்பா முழுவதையும் பாதித்தது.

# 7. இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்தம்: எட்டாம் ஹென்றியும் போப்பாண்டவரும்

## (அ) ரோமாபுரியுடன் இருந்த தொடர்பு அறுபடல்

போப்பாண்டவர் பத்தாம் லியோவை மார்ட்டின் லூதரின் விவகாரத்தில் முழு மனத்துடன் ஆதரித்த எட்டாம் ஹென்றிக்கு, லியோ, சமயக் காவலன் என்ற விருதினை வழங்கினர் என்று ஏற்கெனவே கண்டுள்ளோம். மார்ட்டின் லூதரும் எட்டாம் ஹென்றிக்குக் காட்டமான மறுமொழி விடுத்து அவரைத் திட்டி எழுதியிருந்தார். ஆனல் வேடிக்கை என்னவென்ருல், இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்தம் ஏற்படவும் அதே எட்டாம் ஹென்றி மன்னரே காரணமாயிருந்தது தான். இங்கிலாந்தில் ஏற்பட்ட சமயச் சீர்திருத்தம் தொடக்கத்தில் அரசியல் ரீதியானதே யொழியச் சமயச் சார்பு கொண்டதன்று. சமய மாற்றங்கள் பின்னல் பிறந்தன. பாராளுமன்றச் சட்டத்தினல் எட்டாம் ஹென்றி இங்கிலாந்திற்கும் ரோமாபுரிக்குமிருந்த உறவினை அறுத்தெறிந்தார்.

போப்பாண்டவரின் அதிகாரங்களுக்கெதிர்ப்புத் தோன்றியது ஒன்றும் புதுமையானதன்று. இங்கிலாந்தில்கூடத் திருச்சபையின் செல்வாக்கு ஓங்கி வளர்ந்திருந்த காலத்திலேயே, திருச்சபையின் செல்வத்திற்கும் சலுகைகளுக்கும் எதிராகப் பாராளுமன்றம் சட்டங்களை இயற்ருதுபோனலும் இங்கிலாந்தின் திருச்சபை ஆதிக்கமே நிலைக்கவேண்டுமென்பதை மனதார விரும்பியிருந்தது. மூன்ரும் எட்வர்டும், இரண்டாம் ரிச்சர்டும் இங்கிலாந்திற்குப் போப்பாண்டவரால் நியமிக்கப்பெற்ற திருச்சபை அதிகாரிகளுக் கெதிராகப் பாராளுமன்றச் சட்டங்களின்மூலம், முறையற்ற தென்றும், போப்பாண்டவரின் மன்றத்திற்கு மேல்முறையீடு களைக் கொண்டு செல்லலாகாது என்றும் கோரியிருந்தனர். இரண்டு நூற்ருண்டுகளுக்குப் பின்னர் மேற்கூறிய பழைய பாராளுமன்றச் சட்டங்களைப் பயன்படுத்தி எட்டாம் ஹென்றி ஆங்கிலச் சமயச் சீர்திருத்தத்தைத் தொடங்கினர்.

## திருமண விலக்கப் பிரச்சினை

ஆங்கிலச் சமயச் சீர்திருத்தம் மாபெரும் தேசியப் பிரச்சினையாகும். அரசரின் திருமணத்திற்கும் இதற்கும் தொடர்புபடுத்தியதென்னவோ ஹென்றியின் பெயருக்கு இழுக்குத் தேடுவதாயிற்று என்பதும் உண்மைதான். போப்பாண்டவருடன் ஹென்றி சச்சரவிட்டுக்கொண்டதற்கு உடனடியான காரணம் அவர்தம் மனைவி அரகான் இளவரசி கர்தரினைத் திருமண விலக்கம் செய்யக் கோரியது ஆகும். 1527ஆம் ஆண்டில் திருமண விலக்கம்பற்றிய பிரச்சினை எழுந்தஞான்று ஹென்றிக்கும் காதரினுக்கும் திருமணமாகிப் பதினெட்டாண்டுகள் கழிந்திருந்தன. இப் பதினெட்டாண்டு காலத்தில் காதரினுக்கு ஹென்றிமூலம் ஏழு குழந்தைகள் பிறந்தன வாயினும், மேரி இளவரசி என்னும் பெண் மகவு ஒன்றினைத் தவிர ஏனைய அனைத்தும் இறந்துவிட்டன. அக்காலம்வரை இங்கிலாந்தைப் பெண்மக்கள் ஆண்டதில்லை. காதரினுக்குக் கடைசிக் குழந்தை 1518ஆம் ஆண்டு பிறந்தது. மறுமணம் செய்து கொண்டாலன்றி அரசருக்கு வாரிசாக வர ஆண் மகவு பிறக்க வழியில்லை என்பது தெளிவாயிற்று. தமக்கு எப்படியேனும் ஆண் மகவு வேண்டுமென விரும்பினார் ஹென்றி மன்னர். ஆண்வாரிசு இல்லாது போவது டியூடர் வம்சத்திற்கு ஆபத்து விளைவிக்கக் கூடியது; மேலும், அதன் விளைவாக நாட்டில் உள்நாட்டுப் போர் மூளலாம் என்ற அச்சமும் நாட்டில் நிலவியது. அத்துடன் ஹென்றி மறுமணம் செய்துகொள்ள வேண்டுமெனப் பெரிதும் விரும்பினார். அரண்மனைச் சேவகத்திலிருந்த ஆன் பொலீன் என்பாளை ஹென்றி தீவிரமாகக் காதலித்திருந்தார். ஆன் பொலீனை அரசியாக்கிக்கொள்ள வேண்டுமாயின், காதரினை மண விலக்கம் செய்தே ஆகவேண்டிய அவசியமேற்பட்டது. தமக்குக் காதரின்மூலம் பிறந்த ஆண் குழந்தைகள் அகால மரண முற்றமைக்குத் தாம் அண்ணன் மனைவியைத் திருமணம் செய்து கொண்டதேயாகும் என அவருடைய மனச்சாட்சியே குத்திக் காட்டியது. அதனைக் கடவுளே விரும்பவில்லை போலும்; ஏனெனில் அஃது உண்மையான திருமணமன்று.

போப்பாண்டவர் ஏழாம் கிளமன்ட் என்பாருக்கு ஹென்றி முறையிட்டுத் தம் திருமண விலக்கத்தைக் கோரியிருந்தார். போப்பாண்டவருக்குக் காதரினின் மணவிலக்கத்தை உடனடியாக அளிக்கத் துணிவு பிறக்கவில்லை. முதலாவது, காதரின் பேரரசர் ஐந்தாம் சார்லஸ் மன்னரின் அத்தையாவாள். அத் தருணத்தில் தான் பேரரசர் ரோமாபுரியைச் சூறையிட்டு அதைக் கைப்பற்றி இருந்தார். போப்பாண்டவரே பேரரசரின் கைதியாகி இருந்தார்.

உல்சியின் அரசியல் தந்திரத்தால் ஐந்தாம் சார்லஸ், போப் பாண்டவரைவிட அதிகாரம்பெற்றவராகி இருந்தார். அத்தகைய இக்கட்டான நிலையில் எட்டாம் ஹென்றி, தம் மணவிலக்கப் பிரச்சினையைக் கிளப்பியிருந்தார். திருமண விலக்கம் குறித்து விசாரணை நடத்துவதற்காகப் போப்பாண்டவர், கார்டிவல் கம்பெக்கியோ (Compeggio) என்பவரையும், போப்பாண்டவரின் பிரதிநிதியான கார்டினல் உல்சியையும் நியமித்தார். 1529ஆம் ஆண்டு மே மாதவாக்கில் பிளாக்ஃபிரியர்ஸ் (Blackfriars) என்னுமிடத்தில் விசாரணை மன்றம் கூடிற்று. இறுதி முடிவொன்றையும் கூறுமலேயே அம்மன்றம் இரண்டு மாதங்களுக்குப்பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. கம்பெக்கியோ இங்கிலாந்தை விட்டுப் போனர். அடுத்த நாள் உல்சிக்கெதிராக ஆணையொன்று பிறப்பிக்கப்பட்டு அவர் போப்பாண்டவரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டது ஆட்சேபிக்கப்பட்டது. உல்சியினிடம் அதற்கு முறையான அத்தாட்சி இருந்தாலும் எட்டாம் ஹென்றி அதைப் பொருட்படுத்தவில்லை, நியாயத்திற்கு அஞ்சினவரா அவர்? விசாரணை மன்றம் தீர்ப்பினை வழங்காமல்போனது உல்சியின் வீழ்ச்சிக்கு வழிகோலியது. அரசர் 1529ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தையும் கூட்டினர். எட்டாம் ஹென்றி போப் பாண்டவரின் அதிகாரங்களைத் தாக்கத் தொடங்கினர். அஃது ஒன்றும் புதியதன்று; ரோமாபுரிக்கு அடங்கி நடப்பது ஆங்கில மரபன்று.

### உல்சியின் வீழ்ச்சியும் மரணமும், 1529-30

கார்டினல் உல்சியே அரசரின் கோபத்திற்கு முதற் பலியானர். விசாரணை மன்றம் தீர்ப்பு வழங்காததை அடுத்து உல்சி பதவி விலக்கம் செய்யப்பட்டார். அவருடைய பெரும் பாலான சொத்துகள் பறிமுதலாயின. சான்சலர் பதவி சர் தாமஸ் மூர் என்பாருக்குக் கொடுக்கப்பட்டது (1529). அடுத்த ஆண்டில் உல்சி யார்க் நகருக்குச் சென்று தங்கி வந்தார். அவர் ஷெஃபீல்டு என்ற நகரில் வாழ்ந்தபோது அரசரின் டவர் சிறைக் காவலர்கள் அவரை அரசத்துரோகக் குற்றத்திற்காகக் கைதாக்கினர். அரசர் தம்மைக் கொலைசெய்யப் போகிறுர் என்பதை உணர்ந்த உல்சி வாழும் நம்பிக்கையை இழந்தார். தெற்கில் பயணம்செய்து வந்தபோது அவர் நோயுற்றுர். அவரை லீஸ்டர்த் திருச்சபைக்கு எடுத்துச் சென்றனர். அன்றிரவு அவர் லீஸ்டரிலேயே (1530) காலமானர். 'அரசருக்கு ஆற்றியது போன்ற தொண்டினை நான் கடவுளுக்கு ஆற்றியிருப்பேனேயாகில் என் தள்ளாத வயதில் இத்தகைய கொடுமை வந்திராது' என்று

இறக்கும் தறுவாயில் மனம்நொந்து கூறினர் உல்சி. அவருடைய அவலக்குரல் இங்கிலாந்திற்கு வந்த 'புதிய அரசின்' (New Monarchy) தன்மையை விளக்குவதாயிருந்தது. எனினும், உண்மையென்னவென்றால், ஹென்றி எப்படி ஆதிக்கவெறியராய் இருந்தாரோ உல்சியும் அப்படிப்பட்டவர்தாம் எனல் மிகையாகாது. 'அவரை அனைவரும் கண்டு அஞ்சினர். அவரை நேசித்தவர்கள் அருமையிலும் அருமை—ஏன் அவரை யாரும் நேசிக்கவில்லை' என்று எராஸ்மஸ் எழுதி வைத்துள்ளார்.

## சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றம், 1529-36

*1529*ஆம் ஆண்டிலிருந்து *1536*ஆம் ஆண்டுவரை கூடிய பாராளுமன்றம் அரசருடைய விருப்பப்படி சமயச் சீர்திருத்தத்தைச் செயல்படுத்தத் தொடங்கியதால் அதனைச் சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றம் என்பர். பாராளுமன்றக் கூட்டம் தொடங்கிய உடனேயே திருச்சபைக் குருமார்கள் ஒரே சமயத்தில் பல பதவிகளை வகிக்கும் முறையைத் தாக்கத் தொடங்கி, அவர்கள் ஒரு பதவிக்குமேல் வகிக்கக் கூடாதெனத் தடுத்தது. மற்றொன்று, திருச்சபை மன்றங்களுக்கும் குருமார்களுக்கும் மக்கள் கொடுத்துவந்த கட்டணங்களைப் பற்றியதாகும். கட்டணங்கள் பாராளுமன்றச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டன. காமன்ஸ் சபையினர் திருச்சபையின் நன்மையைக் கவனிக்கவில்லை; கட்டணத்தையே கண்ணுங்கருத்துமாகக் கைப்பற்றினர் என்று குருமார்கள் அங்கலாய்த்தனர். புரமுனைர் சட்டத்தின்படி பிறிதொரு சட்டத்தைப் பிறப்பித்து உல்சியைப் போப்பாண்டவரின் பிரதிநிதியென அங்கீகரித்தவர்களைத் தண்டித்தார்; பின்னர்த் திருச்சபைச் சொத்துகள் அனைத்தையும் பறிமுதல் செய்தார். பின்னர்த் 'திருச்சபைக் குருமார்கள் கீழ்ப்படிதல்' என்ற சட்டமியற்றப்பட்டது. அதன்படி அவர்கள் அரசருக்குப் பெருந்தொகையொன்றினை அபராதமாகக் கட்ட ஒப்புக்கொண்டனர். அரசரைத் தலைமைக்காவலர் எனவும், திருச்சபையின் தலையாய தலைவர் என்றும் ஏற்றுக்கொண்டனர் (*1531*). ஆனால், ஹென்றியின் பிரதிநிதிகள்—ரோமாபுரியிலிருந்தவர்கள்—இன்னும் போப்பாண்டவரை அரசருக்குச் சாதகமாக்க முடியாமல் தவித்தார்கள். *1532*ஆம் ஆண்டில் முதலாண்டு வருவாய்ச் சட்டம் என்ற ஒன்றினைப் பாராளுமன்றம் பிறப்பித்து, பிஷப்பாகப் பதவியேற்கும் ஒருவர் வழக்கமாகத் தமக்குக் கிடைக்கும் முதலாண்டு வருவாயைப் போப்பாண்டவருக்குக் கொடுக்கும் முறை தடுத்து நிறுத்தப்பட்டது.

அரசரின் திருமணத்தை விலக்கம் செய்துவைக்கப் போப் பாண்டவர் யாதொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனவே இனி, போப்பாண்டவரையே ஒரு கை பார்த்துவிடுவது என்று உறுதி பூண்டார் ஹென்றி மன்னர். ஆன் பொலீன் குடும்பக் குருமார்களில் ஒருவரான தாமஸ் கிரான்மர் என்பார் ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களைக் கலந்து மணவிலக்கம்பற்றிய கருத்துகளைக் கேட்டறிந்து வந்தார். 1533ஆம் ஆண்டு ஜனவரி மாதவாக்கில அரசர் ஆன் பொலீனை இரகசியமாகத் திருமணம் செய்துகொண்டார்; மார்ச் மாதத்தில் கிரான்மர் கான்டர்பரியின் ஆர்ச்பிஷப் ஆக்கப்பட்டார்; ஏப்ரல் மாதத்தில் ஆர்ச்பிஷப் மன்றம் காதரினை ஹென்றி மணந்துகொண்டது செல்லுபடியா காது என்று அறிவித்தது; ஜூன் மாதத்தில் இரகசியத் திருமணம் உண்மைதான் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆன் பொலீன் இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டிக்கொண்டார். அதே ஆண்டு இலையுதிர் காலத்தில் ஆன் பொலீனுக்குப் பெண் குழந்தை பிறந்தது; எதிர்காலத்தில் அப் பெண்மகவே எலிசபெத் அரசி யானர். ஆண் மகவுக்கு ஏங்கித் தவித்த அரசருக்குப் பெண் மகவு பிறந்தது பெருத்த ஏமாற்றத்தை விளைவித்தது. அவர் ஆண் வாரிசு வேண்டியவர். இங்கிலாந்தின் மாபெரும் அரசியாகத் திகழப்போகும் எலிசபெத் சட்டப்படியாகப் பிறந்த குழந்தை யன்று என்று கத்தோலிக்க உலகம் வசை பாடியது; ஒப்புக் கொள்ள மறுத்தது.

### ஹென்றி சமயநீக்கம் செய்யப்படல், 1533

அப்பழுக்கற்ற காதரினைத் தள்ளிவைத்ததும், ஆன் பொலீனை மணந்து கொண்டதும் போப்பாண்டவருக்கெதிராக மேற் கொண்ட நடவடிக்கைகளாம். போப்பாண்டவர் ஏழாம் கிள மென்ட் காதரினுக்கும் ஹென்றிக்கும் நடைபெற்ற திருமணம் நியாயப்படி செய்யப்பட்டதே என்று அறிவித்தார் (1533). அத்துடன் அரசரைச் சமயவிலக்கம் செய்யும் ஆணையொன்றினை யும் பின்னர்த் தயாரித்தார் (இரண்டாண்டுகளுக்குப் பின்னரே அது வெளியிடப்பட்டது). ஆனல் ஹென்றியோ அதிகாரத்தைச் சுவைத்திருந்தமையால், தம் சொந்தச் சக்தித்திறனையும் அறிந் திருந்தார். போப்பாண்டவரால் தம்மை வெற்றிகொள்ள இயலாதென்பதை ஹென்றி நன்கு உணர்ந்திருந்தார். ஏனெனில், பொதுமக்களின் முழு ஆதரவும் அவருக்கு இருந்தது. மேலும், போப்பாண்டவரின் ஏவலின்படி பேரரசரோ, அன்றி ஃபிரெஞ்சு அரசரோ இங்கிலாந்தின்மீது படையெடுக்க விழையமாட்டார்கள் என்பதையும் ஹென்றி அறிந்தார். எனவே ஹென்றி, அமைதி யாக, தாம் ஏற்றெடுத்த பணியை நிறைவேற்றத் தொடங்கினர்.

போப்பாண்டவருடன் தமக்கிருந்த உறவை முழுதும் துண்டித்துக்கொள்ளும் முறை ஒன்றுதான் மீதமிருந்தது. ஆன் பொலீனை அரசியாக முடிசூட்டுவித்தபின் பாராளுமன்றம் மேல்முறையீடுகள் பற்றிய சட்டமொன்றினை இயற்றி (1533) ரோமாபுரிக்கு ஆங்கிலத் திருச்சபையினர் இடும் மேல்முறையீடுகளைத் தடுத்து நிறுத்தியது. அடுத்த ஆண்டில் நிறைவேற்றப் பட்ட பாராளுமன்றச் சட்டங்கள் பல இங்கிலாந்துத் திருச்சபையை அரசரின் ஆதிக்கத்திற்குக் கீழ்ப்படிய வழிசெய்தன; பிஷப்புகள் திருச்சபைக் குருமார்களால் 'தேர்ந்தெடுக்கப்' பட்டனர். அரசர் பிஷப்பாக நியமனம் செய்யும் ஒருவரைத்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். ரோமாபுரிக்குக் கொடுக்கப் பட்ட வருவாய்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. போப்பாண்ட வருக்கு விசுவாசங்காட்டும் பிரமாணத்தை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது. மேலும், 1534ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வாரிசுரிமைச் சட்டம், அரசமுடி எட்டாம் ஹென்றியின் வாரிசுகளுக்கும், ஆன் பொலீனுக்கும் செல்லுபடியாகும் என்றும், வாரிசுரிமைச் சட்டத்தை அங்கீகரிக்க மக்கள் அனைவரும் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்படிச் செய்ய மறுப்பவர்களின்மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டப்படும் என்றும் அறிவித்தது. சர் தாமஸ் மூரும், பிஷப் ஃபிஷரும் வாரிசுரிமைச் சட்டத்தை ஏற்க மறுத்தபோது அவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். அதன் பின்னர் ஆதிக்கச் சட்டம் (Act of Supremacy) என்பதனைப் பாராளுமன்றம் நிறைவேற்றி, அரசரையும், அவருடைய வாரிசுகளையும், அவர்களின் வழிவருவோரையும், வழிவழியாக அரசராக ஏற்றுக்கொள்வதோடு, இங்கிலாந்துத் திருச்சபையின் தனிப் பெரும் தலைவர்களாகவும் அவர்கள் கருதப்படவேண்டும் என்று உறுதிப்படுத்தியது. இதைத்தான் ஆங்கிலிகன் திருச்சபை என்று அழைத்தார்கள். அதேயாண்டில் பாராளுமன்றத் துரோகக் குற்றம்பற்றிய சட்டமொன்றினையும் நிறைவேற்றி, அரசரைக் கொடுங்கோலன் என்றோ, சமய நிந்தனையாளன் என்றோ, சமயத் துரோகியென்றோ, பதவியைப் பறித்தவன் என்றோ கூறும் எவரும் தூக்குத்தண்டனை பெறுவர் என்றும் அறிவிக்கப்பட்டது. 1536ஆம் ஆண்டில் சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றம் சிறு மடாலயங்களைத் தகர்த்தெறிந்ததுடன் தன் கூட்டத்தொடரை முடித்துக்கொண்டது.

1529 முதல் 1536 வரையில் கூடியிருந்த சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றம், முதலாண்டு வருவாய்ச் சட்டம், மேல்முறை யீடுகள் சட்டம், ஆதிக்கச் சட்டம் போன்றவற்றை நிறைவேற்றித்

தொன்றுதொட்டு ரோமாபுரிக்கு இருந்த தொடர்பை அறுத்துக் கொள்ள எட்டாம் ஹென்றிக்கு வகை செய்தது. போப் பாண்டவரின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு அரசரின் ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டது. ஹென்றியின் செயல்களனைத்தும் கொடுமை நிறைந்தவைதாம்! ஆயினும் என்? நாட்டு மக்கள் அனைவரின் ஆதரவும் கிடைக்காமலிருந்திருக்குமாயின் ஹென்றியால் இத் தகைய மாபெரும் புரட்சியை நிறைவேற்றியிருக்க முடியாது என்பதும் உண்மைதான்.

## (ஆ) வெற்றி வீரர் எட்டாம் ஹென்றி

### தாமஸ் கிராம்வெல்

ஆதிக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டான 1534-ல் தான் அரசரின் செயலாளராகத் தாமஸ் கிராம்வெல் என்பார் நியமிக்கப்பட்டார். அவர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். திறமை மிக்கவரான கிராம்வெல் பதவியுயர்வு பெற்றதில் வியப்பொன்று மில்லை. அரசரின் கொடுங்கோன்மைக்கு ஊன்றுகோலானார் கிராம்வெல். கொள்கை கோட்பாடுகளைக் கண்டறியாத அவரிடம் இரக்க குணங்கூட இரக்கம் காட்டவில்லை. ஆறு ஆண்டு காலம் (*1534-40*) பதவி வகித்த அவர் சிறந்த அறிவாளியாயினும், அரசரின் இச்சைப்படி செயல்களைச் செய்த கயவர்.

### கத்தோலிக்கத் துறவிகள் கழுவேற்றப்படல்

வாரிசுமைச் சட்டத்தையும், ஆதிக்கச் சட்டத்தையும் ஒப்புக் கொள்ள மறுத்த ஐந்து கத்தோலிக்கச் சமயத்துறவிகளே ஹென்றியின் கொடுங்கோன்மைக்கு முதலில் களப்பலியான வர்கள் (*1535*). ஜான் ஹக்டன் (John Houghton), இரு கார்த் தூசியத் துறவிகள், பிறிதொரு துறவியார், ஜான் ஹேல் (John Hale) ஆகிய ஐவரும் ஹென்றியினல் கழுவேற்றப்பட்டவர்கள். அடுத்தபடியாக, சர் தாமஸ் மூரும், ஃபிஷரும் விசாரணைக் காளாகித் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள்.

ஃபிஷர் ரோசெஸ்டரின் பிஷப்பாவார். போப்பாண்டவர் அப்போதுதான் ஃபிஷரைக் கார்டினலாக நியமித்திருந்தார். சினங்கொண்ட ஹென்றி அவரைக் கழுவேற்றியபோது எழுப தாண்டை நெருங்கியிருந்த ஃபிஷர் பொதுமக்களால் போற்றப் பட்டார். சாகுந் தறுவாயில் தூய வெண்ணிற ஆடையுடுத்துக் கொண்டு, அஞ்சாநெஞ்சினராய் நின்ற அவரைச் சிரச்சேதம் செய்தார்கள். மரணத்திற்குப்பின்னர் அவருடைய சிரம் கொய்யப் பெற்று இலண்டன் பாலத்தில் செருகிவிடப்பட்டது. ஃபிஷரைக்

கழுவேற்றிய மறுநாள் அரசர் நாடகம் ஒன்றைக் கண்டுகளித்தார். அதில் அரசர் திருச்சபைக் குருமார்களின் தலையைக் கொய்யும் கட்டமும் காட்டப்பெற்றது. என்னே அரசரின் நகைச்சுவை!

## தாமஸ் மூரின் விசாரணை

*1534-ல் தாமஸ் மூர் விசாரிக்கப்பட்டபோது அவரை நார்பக் பிரபு எச்சரித்தார். அரசரின் கோபம் சாவில்தான் முடிவுறும் என்றபோது, 'அதுமட்டுமா, ஐயன்மீர்' என்று மறுமொழி பகர்ந் தார் மூர். 'உங்களுக்கும் எனக்கும் ஒரே ஒரு வேறுபாடு உண்டு. அது என்னவென்றால் நான் இன்று செத்தால், நாளை உங்கள் முறையாகும்.' மூரின் கூற்றுப் பதின்மூன்றாண்டுகளுக்குப் பின்னர் மெய்யானபோது நார்பக் பிரபு, மூரை நினைவுகூர்ந்திருக்க வேண்டும்! 1535ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் அரசத் துரோகக் குற்றத்திற்காக விசாரிக்கப் பட்டார். மறுவாரத்தில் சிரச்சேதம் செய்யப்பட்டார்.*

*கார்த்தூசியத் துறவிகள், கார்டினல் ஃபிஷர், சர் தாமஸ் மூர் ஆகியோர் கழுவேற்றப்பட்ட செய்தி கிறிஸ்தவ உலகெங்கும் காட்டுத் தீயெனப் பரவி, கொடும் அச்சத்தையும், ஹென்றியிடம் சொல்லொணா வெறுப்பையும் மூட்டியது. கழுவேறியவர்கள் அரசரிடம் விசுவாசம் காட்டுவதா, அல்லது தாம் ஏற்றெடுத்த சமயக் கொள்கைக்குக் காட்டுவதா என்ற கேள்வி எழுந்தது. சமயக் கொள்கைக்கு விசுவாசம் காட்டியவர்கள் கழுவேற்றப் பட்டார்கள்! என்னே அவர்தம் கொள்கைப் பிடிப்பு! இங்கிலாந் தின் கத்தோலிக்கச் சமயக் கொள்கைக்காகக் கழுவேறிய முதல் தியாகிகள் அவர்களேயாவர்.*

## ஆன் பொலீன் கழுவேற்றப்படல், 1536

*மூரின் மரணத்திற்கு அடுத்தாண்டு அரசியார் ஆன் பொலீனும் கழுவேற வேண்டியவரானார். ஆண் மகவு ஒன்றினை வேண்டித் தவங்கிடந்த அரசருக்கு வாரிசினைக் கொடுக்கத் தவறியதால் ஆன் பொலீன்மீது அவர் வெறுப்புற்றார். ஒழுக்கங்கெட்டவள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப்பெற்று, தண்டனைக்காளாகி, 1536-ல் அவர் கழுவேற்றப்பட்டார். கழுவேற இரண்டு நாள் களுக்கு முன்னர் அவளுடைய திருமணம் செல்லுபடியாகாதெனக் கிரான்மர் அறிவித்தார். சாகுந்தறுவாயில் அரசர்க்கு வேறு யாரையேனும் மணந்துகொள்ளலாம் எனும் தனி உரிமையைக் கொடுத்துவிட்டு உயிர் துறந்தாள் அம் மாதரசி. அடுத்த நாள் ஹென்றி, ஜேன் செய்மூர் என்பாளை மணஞ்செய்துகொள்வதென உறுதிசெய்யப்பட்டது. அடுத்த பதினைந்தாம் நாளுக்குள் அரசர்*

அவளை மணந்து கொண்டார். அரசரின் தீரா ஆசையைத் தீர்த்து வைத்த பெருமை ஜேன் செய்மூரைச் சாரும். அவளுக்கு அரசர் மூலம் ஆண் குழந்தை பிறந்தது (1537). அக் குழந்தையே எதிர் காலத்தில் ஆரும் எட்வர்டு என்றழைக்கப்பட்டது. ஆனால், குழந்தை பிறந்த பன்னிரண்டு நாள்களில் ஜேன் செய்மூர் இறந்து போனாள்.

### மடாலயங்கள்

இதனிடையில் அரசர் மேற்கொண்ட நடவடிக்கையொன்றின் மூலம் அவருடைய செல்வமும் செல்வாக்கும் பல்கிப் பெருகின. மடாலயங்களைக் கலைத்துவிட்டுத் திருச்சபைச் சொத்துகளைத் தாக்கியதே அந் நடவடிக்கையாகும் (1535-39). மடாலயங்களைக் கலைக்க அரசர் மூன்று காரணங்களைச் சுட்டிக்காட்டினார். முதலாவது, இங்கிலாந்தில் போப்பாண்டவரின் ஆதிக்கத்தைக் காக்கும் காவலர்களாக இத் துறவிகள் (மடாலயத்தில் இருந்த வர்கள்) காணப்பட்டார்கள். மடாலயங்கள் பிற நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தமையால் அவற்றைப் போப்பாண்ட வருக்கு விசுவாசம் காட்டவேண்டாம் என்று கட்டுப்படுத்துவதில் சிரமங்கள் இருந்தன. இரண்டாவது, மடாலயங்களில் குவிந் திருந்த செல்வ வளமாகும். பல நூற்றாண்டுகளாகப் புனிதத் துறவியர் பலர் விட்டுச்சென்ற வழிவழியாக வந்த செல்வவளம் ஹென்றியின் கண்களை உறுத்தின. மடாலயச் செல்வத்திற் கெதிராக விக்லிஃப் போன்ற பெரியார்கள் முந்தைய நூற்றாண்டு களிலேயே குறைகூறியிருந்தார்கள். எட்டாம் ஹென்றியின் அரண் மனை அதிகாரிகளும் மத்தியதர வகுப்பினரும் மடாலய நிலங்களைக் கவரச் சமயம் பார்த்திருந்தனர். அவர்கள் பேராசையைப் பூர்த்தி செய்வதன் மூலம் அடங்காப்பிடாரிகளான பழைய பிரபுக்களை ஒழித்துவிட்டு அரசருக்கு அடங்கி நடக்கும் புதிய பிரபுக்களை உருவாக்கமுடியும் என்று எண்ணினார் அரசர். அப்படிப்பட்ட வர்கள் இயற்கையாகவே அரசருக்கு ஆதரவு காட்டுவார்கள் அல்லவா? மடாலயங்களைக் கலைப்பதற்குப் பாராளுமன்றத்தில் அரசர் காட்டிய காரணம் மூன்றாவது காரணமாகும். மடாலயத் துறவிகள் சோம்பேறிகள்; பயனற்றவர்கள்; ஒழுக்கங்கெட்ட வர்கள் என்பதே அக்காரணமாகும். அக்காலத்தில் இங்கிலாந்தில் சற்றேறக்குறைய 600 மடாலயங்கள் இருந்தன. அவற்றில் ஒரு சிலவற்றில் மேற்கூறிய குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்கள் இருந்தார்கள் என்பதும் உண்மைதான். ஆக்ஸ்ஃபோர்டு சீர் திருத்தவாதிகள் இதை ஏற்கெனவே கண்டித்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அவற்றில் ஒன்றை மாற்றியமைத்துத்

தான் கார்டினல் உல்சி கார்டினல் கல்லூரியை உருவாக்கினர். அதுவே பின்னர் கிரைஸ்ட் சர்ச் கல்லூரி என்று அழைக்கப் பட்டது.

1535ஆம் ஆண்டில் ஹென்றி தம் விகார்-ஜெனரலான தாமஸ் கிராம்வெல்லுக்கு இங்கிலாந்திலிருக்கும் மடாலயங்களைக் கண்டு வரும் அதிகாரத்தையும் கொடுத்திருந்தார். கிராம்வெல்லின் முறைகேடான நடத்தையைக் கண்ணுற்றபோது, ஹென்றியின் உள்நோக்கம் தெரியவரும். கிராம்வெல்லின் ஏஜண்டுகள் சில மடாலயங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் பொய்யானதோர் அறிக்கையை வெளியிட்டார்கள். துரதிருஷ்டவசமாக அவ் வறிக்கை தொலைந்துபோயிற்று. எனினும் கிராம்வெல்லின் குறிப்புகளிலிருந்து ஒரு செய்தி தெற்றெனை விளங்குகிறது. அவருடைய ஏஜன்ட் ஒருவர் கொடுத்த அறிக்கையின்படி மடா லயங்கள் அனைத்தும் குறைகூறப்பட்டுக் கண்டிக்கப்பட்டன. இலஞ்சம் கொடுத்தவர்களை அந்த ஏஜன்ட் மன்னித்துவிட்டார். இவ்வறிக்கையைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டு சிறு மடா லயங்களைக் கலைக்கும் சட்டமொன்றை நிறைவேற்றியது. அதன்படி இங்கிலாந்திலிருந்த 276 சிறு மடாலயங்கள் கலைக்கப்பட்டன (1536). இதுவே சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றத்தின் இறுதி யான முக்கியச் சட்டமாகும்.

**கருணைப் பயணம் (Pilgrimage of Grace, 1539)**

சிறு மடாலயங்களைக் கலைக்கும் ஞான்று ஹென்றி எச்சரிக்கை யுடன் தம் அதிகாரத்தைப் பரிசோதித்துப் பார்த்துக்கொண்டார். எனினும், அவர் ஏற்றெடுத்த கடுமையான நடவடிக்கைகளினுல் நாட்டின் பல பாகங்களில் தீவிர அதிருப்தி எழுந்தது. குறிப்பாக, நாட்டின் மேற்கிலும் வடக்கிலும் கலகங்கள் மூண்டன. ஏன் பாராளுமன்றத்திலேயே அதிருப்தியுற்ற சூழ்நிலை நிலவியது. சிறு மடாலயங்கள் அனைத்தையும் அழித்தபோது இரு கலகங்கள் மூண்டன. முதலாவது கலகம், லிங்கன்ஷயரில் தோன்றியது. அங்குக் கலகக்காரர்களை நார்பக் பிரபுவின் தலைமையில் வந்த படைகள் சிதற அடித்தன. இரண்டாவது கலகம், யார்க்ஷயரில் எழுந்தது. இதனைக் கருணைப் பயணம் (Pilgrimage of Grace) என்பர். இக் கலகம் முதலாவது கலகத்தைவிடத் தீவிரமானது. வடபாகத்தில் இருந்த யார்க்ஷயர் பெரும்பாலும் வறண்ட பகுதியாகும். அங்கு நகரங்களின் எண்ணிக்கையும் குறைவு; ஒரு நகரத்திற்கும் மற்றொரு நகரத்திற்கும் இடையே தொலைவும் மிகுதி. இதனுல் மடாலயத் துறவிகளின் செல்வாக்குச் சிறிதும் குறையாமலேயே இருந்தது. சுற்றித் திரிந்த ஏழை எளியவர்

களுக்கும், சாதாரணப் பயணிகளுக்கும் இரக்கங் காட்டி உதவி செய்தவர்கள் யார்க்ஷயர் மடாலயத் துறவிகளேயாவர். சிஸ்டர்சியத் துறவிகள் ஆட்டு மந்தைகளை வளர்த்து மக்களின் உதவிக்கு உறுதுணை நின்றவர்கள்.

இராபர்ட் ஆஸ்க் (Robert Aske) என்னும் வழக்குரைஞரின் தலைமையில் கலகக்காரர்கள் ஸ்கிப்வொர்த் மூர் என்னுமிடத்தில் கிளர்ந்தெழுந்தார்கள். கிளர்ச்சிக்காரர்கள் யார்க் நகரைக் கைப்பற்றிக்கொண்டு, விரட்டப்பெற்றிருந்த துறவிகளை அவரவர் மடாலயங்களிலேயே தஞ்சம் புகவும் செய்தார்கள். அரசர், நார்பக் பிரபுவை யார்க்ஷயருக்கு அனுப்பிவைத்தார். டோன் காஸ்டர் வரை சென்ற நார்பக் கலகக்காரர்களின் வலிமையை உணர்ந்து போர் செய்யாமல் வேறு வழிகளைக் கையாளத் தீர்மானித்தார். கலகக்காரர்கள் கீழ்ப்படிந்துபோனால், அவர் களுக்கு மன்னிப்புக் கிட்டும் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டுக் கலகத்தை அடக்க எண்ணி, அதில் ஓரளவு வெற்றியும் கண்டார் நார்பக் பிரபு. ஆனால் 1537-ல் தொடர்ந்து இக் கிளர்ச்சிகள் எழுந்தபோது ஹென்றியின் கோபக்கனல் எல்லை கடந்து கிளர்ச்சிக்காரர்களைக் கொடுமையான நடவடிக்கைகள் மூலம் அடக்க வேண்டியவரானார். கலகத்தில் பங்குகொண்ட பன்னிரண்டு ஆபட் குருமார்கள் தூக்கிலிடப்பட்டார்கள். இவ்வாறாக, கருணைப் பயணம் முடிவுற்றது.

அடுத்த ஆண்டில் கான்டர்பரியில் இருந்த பெக்கெட் என்பாரின் பெயரில் இருந்த திருச்சபை தாக்கப்பட்டது. தாமஸ் பெக்கெட் போலித் துறவியென்றும், அரசருக்குத் துரோகம் செய்தவர் என்றும் கருதப்பட்டு, அவருடைய எலும்புகளைப் பொறுக்கித் தீயிலிட்டு எரித்தார்கள். அவருடைய திருச்சபையும் சூறையாடப்பட்டது; சேர்த்து வைக்கப்பெற்றிருந்த பொருள்கள் பறிமுதலாயின. தாமஸ் பெக்கட் இரண்டாம் ஹென்றியின் காலத்தில் வாழ்ந்த ஒரு ஞானி. தம் மூதாதையாரான இரண்டாம் ஹென்றி தோற்று இருந்தார்; ஆனால், எட்டாம் ஹென்றியோ பெக்கெட்டின் எலும்புகளைத் தீயிட்டு எரித்ததன்மூலம் இப்போது வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறலாம் அன்றோ!

### பெரும் மடாலயங்கள் கலைக்கப்படல்

எட்டாம் ஹென்றி பெரும் மடாலயங்களையும் கலைப்பதென இப்போது கங்கணம் கட்டிக்கொண்டார். பெரும் மடாலயத் துறவிகளின் நன்னடத்தையின் பயனைகப் பாராளுமன்றம் அவர் களுக்கு முன்னர்ப் பாதுகாப்பளித்திருந்தது. கிராம்வெல்லும்

அவருடைய அடியாள்களும் பெரும் மடாலயத் துறவிகளான ஆபட் குருமார்களை வாட்டத் தொடங்கினர். தம் மடாலயங்களை அரசருக்குக் கொடுத்துவிடுமாறு பலர் தூண்டப்பட்டனர். ஏனையோரை அடக்குமுறை வழிகளினால்தாம் அடக்க முடியும். ரீடிங், கோல்செஸ்டரைச் சார்ந்த ஆபட் குருமார்கள் அரசத் துரோகக் குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டனர். கிளாஸ்டன்பரி ஆபட்மீது பெருங்குற்றம் செய்த பழி சூட்டப்பட்டது. பின்னர் மூவரும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இன்னும் பல துறவி களுக்கும் அதே கதிதான். அடக்குமுறையால் மடாலயங்கள் அனைத்தையும் அழித்துவிட்டார் ஹென்றி.

616 மடாலயங்களைக் கலைத்த பெருமையால் நெஞ்சம் விம்மிய எட்டாம் ஹென்றி இங்கிலாந்தின் செல்வ வளத்தைப் பெருக்க அவற்றின் செல்வத்தைப் பறித்துக்கொண்டார். இங்கிலாந்தின் மொத்த வருமானத்தில் ஐந்திலொரு பங்கு என்றும், மூன்றிலொரு பங்கு மடாலயங்களின் வருமானத்தினால் வந்தவை என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. சூறையாடின செல்வம் பொதுப்பணிகளுக் கும் கல்விக்கும் செலவிடப்படும் என மனப்பால் குடித்தவர்கள் ஏமாற்றமுற்றனர். மடாலயச் சொத்துகளின் ஒரு பகுதி கப்பல் கட்டும் பணிக்குச் செலவிடப்பட்டது. ஏனைய சொத்துகளை அரசரும் அரசரைத் துதி பாடியவர்களும் பங்கிட்டுக்கொண்டு ஏப்பம்விட்டனர். இவ்வண்ணம் பெருஞ் செல்வந்தர்களான ஆயிரம் புதுப் பிரபுக்கள் ஹென்றிக்கு வருங்காலத்தில் ஆதரவு காட்டியவர்கள். மடாலயங்களைச் சிதைத்ததால் கலைச்செல் வங்கள் காக்கப்பட முடியாமல் அழிவுற்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

மடாலயங்களை அழித்ததால் ஏறத்தாழ 15,000 மக்கள் வேலை யற்றோர் ஆயினர். ஒரு சில துறவிகளுக்கு அரசாங்கம் பணஉதவி செய்தது. ஆயிரமாயிரம் ஏழை எளியவரைப் பல்லாண்டு காலம் காத்த துறவிகளும் ஏழை எளியவராய் அல்லலுற்றனர். இம் மடாலயங்கள் வழிபோக்கர்களுக்குத் தங்குமிடங்களாகவும், பெண் துறவியருக்குப் புகலிடங்களாகவும் நின்று உதவியவை.

## (இ) சமயப் பூசல்கள்

ஆதிக்கச் சட்டத்தை வலியுறுத்தியும், மடாலயங்களைச் சிதைத்தும், போப்பாண்டவருக்குத் துதி பாடிய ஆதரவாளர் களைத் தீர்த்துக் கட்டியும் எட்டாம் ஹென்றி தம் சமயச் சீர் திருத்தத்தை நிறைவு பெறச் செய்தார். அரசரின் தலைமையில் திருச்சபையும் அரசும் ஒன்றாக இணைந்தன. எனினும் ஹென்றி,

லூதரின் கருத்துகளை ஏற்கவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். கிறிஸ்தவச் சமயக் கோட்பாடுகளில் குற்றங்கண்ட சீர்திருத்தவாதிகளை ஹென்றி ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. இங்கிலாந்தில் லூதரைப் போற்றியவர்களும் தூக்கிலிடப்பட்டனர் என்பதைக் காணும்போது அவர் செய்த சமயச் சீர்திருத்தத்தின் பொருள் விளங்கும். கத்தோலிக்க வழிப்பாட்டு முறை வாழையடி வாழையாக வந்ததை அவர் ஒரு சிறிதும் மாற்ற விரும்பவில்லை. ஜெர்மானியச் சமயச் சீர்திருத்தம் அரசரைப் பாதிக்காவிடினும் ஆர்ச் பிஷப் கிரான்மரைப் போன்ற இங்கிலாந்து மக்களில் சிலர் ஜெர்மானியச் சீர்திருத்தக் கருத்துகளால் கவரப் பெற்றார்கள். விவிலியத்தைத் தம் தாய்மொழியில் மொழிபெயர்த்தது லூதர் ஜெர்மனியில் செய்த முக்கிய மாற்றமாகும். கிரான்மர் அரசரைத் தூண்டி விவிலியத்தை ஆங்கில மொழியில் வெளியிட வேண்டினர்.

எட்டாம் ஹென்றி முடிசூட்டிக்கொண்டபோது வழக்கில் இருந்த ஜான் விக்லிஃப் என்பார் மொழிபெயர்த்த பைபிள் (விவிலியம்) நூறாண்டுகளுக்கு முன்னர் வந்ததாகும். எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் ஆக்ஸ்ஃபோர்டு அறிஞரான வில்லியம் டைண்டேல் என்பார் விவிலியத்தைக் கிரேக்க எபிரேய மூலங்களிலிருந்து ஆங்கில மொழியில் யாத்துக் கொடுத்தார். டைண்டேல் ஜெர்மனிக்குப் பயணம் சென்று, லூதரின் பிரசாரத்தைச் செவிமடுத்து, பிராடஸ்டெண்ட் சமயவாதியானவர். அவர் மொழிபெயர்த்த விவிலியம் ஆங்கிலமொழியில் இருக்கும் சீரிய நூல்களுள் ஒன்று என்று போற்றப்படுகிறது. எனினும், எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலம் முழுவதிலும் அந் நூலை இங்கிலாந்திற்குள் நுழைய விடவில்லை. பின்னர் டைண்டேல் சமய நிந்தனையாளர் எனக் கருதப்பெற்று நெதர்லாந்து நாட்டில் கழுவேற்றப்பட்டார். எனினும், டைண்டேலின் விவிலிய நூல் இங்கிலாந்திற்குள் திருட்டுத்தனமாகக் கொணரப்பட்டு விற்கப்பட்டு வந்தது. எனவே, அதை அதிகாரபூர்வமானதாக வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. கிராம்வெல்லின் ஆசிபெற்று மைல்ஸ் கவர்டேல் என்பார் இலத்தீன் மொழியிலிருந்து விவிலியத்தை ஆங்கிலமொழிக்குப் பெயர்த்தார் (1535). இரண்டாண்டுகளுக்குப் பின்னர் டைண்டேல், கவர்டேல் ஆகியோரின் விவிலிய நூல்களின் அடிப்படையில் தாமஸ் மாத்யூ என்பார் பிறிதொரு விவிலிய நூலை வெளியிட்டார். பிற்காலத்தில் வெளியிடப்பட்ட இப் பிரதியின் நகல் ஒன்றைத்தான் பெரும் விவிலியம் (Great Bible) என்பர். அரசரின் ஆணைப்படி வெளியிடப்பெற்ற அப் பெரும் விவிலியத்தை எல்லாத் திருச்சபைகளும் பயன்

படுத்தலாம் என்று பணிக்கப்பட்டது. ஹென்றியின் ஆட்சியின் இறுதியில் பொது முறையீட்டு ஏட்டில் உள்ள வழிபாட்டுப் பாசுரம் (Litany) என்பதும் ஆங்கிலத்தில் வெளியாயிற்று.

## ஆறு விதிச் சட்டம், 1539 (Six Articles)

சமயக் கருத்துகளைப் பொறுத்தமட்டில் எட்டாம் ஹென்றி கத்தோலிக்கச் சமயத்தைப் போற்றும் வைதிகராகவே இருந்தார். பாராளுமன்றம் 1539ஆம் ஆண்டில் ஆறு விதிச் சட்டம் ஒன்றினை நிறைவேற்றி, கத்தோலிக்கச் சமயத்தால் போற்றப்படும் ஆறு கொள்கைக் கோட்பாடுகளை ஏற்க மறுப்பவர்கள் தீயிலிட்டுக் கொல்லும் தண்டனைக்கு ஆளாக நேரிடுவர் என்று எச்சரித்தது. கிரான்மர் அஞ்சி நடுங்கினர்; பெண்டு பிள்ளைகளுடனும் பெட்டி படுக்கைகளுடனும் அவர் ஜெர்மனிக்கு மூட்டை கட்டிக்கொண்டார். அதே ஆண்டில் அரசரின் ஆதிக்கத்தை எதிர்த்த மூன்று சமய குருமார்களும், மூன்று பிராட்டஸ்டென்ட் சமயத்தைப் போற்றிய சிந்தனைக்காரர்களும் ஆறு விதிச் சட்டப்படி கழுவேற்றப்பட்டனர். அதே ஆண்டில் வெள்ளிக்கிழமையன்று அசைவ உணவுண்ட ஒருவர் இலண்டனில் தூக்கிலிடப்பட்டார்.

## கிளீவ்ஸ் அரசி ஆன்

மடாலயத் துறவிகளை வெற்றிகண்ட தாமஸ் கிராம்வெல் ஹென்றியை ஜெர்மானியப் பிராட்டஸ்டென்ட் இளவசரர்களுடன் இணையச் செய்யவேண்டுமெனப் பாடுபட்டார். இவ் விளவரசர்கள் பேரரசருடன் போரிடத் தயாராகி இருந்தார்கள். கிளீவ்ஸ் பிரபுவின் சகோதரி ஆன் இளவரசியை எட்டாம் ஹென்றிக்கு மணம் முடிக்கப் பேச்சுவார்த்தைகளை அவசரம் அவசரமாகக் கிராம்வெல் தொடங்கினர். ஆனல் லூதரது கோட்பாடுகளைக்கொண்ட ஆன் இளவரசி இங்கிலாந்து வந்து சேர்ந்த போது, ஹென்றி ஜெர்மானிய உடன்படிக்கைகுறித்துத் தம் கருத்தை மாற்றிக்கொண்டிருந்தார். அவர் ஆன்மீது வெறுப்புற்றிருந்தபோதிலும், அவளை மணந்துகொண்டு, விரைவில் திருமண விலக்கம் கோருவதெனவும் முடிவு செய்தார். இம் முறை ஹென்றியின் கோபத்திற்குக் கிராம்வெல் ஆளானர். அவர் அரசத்துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். பலரை விசாரணையின்றித் தூக்கிலிட்ட கிராம்வெலுக்கும் அதே கதிதான் ஏற்பட்டது (1540).

அதே ஆண்டில் ஹென்றி, கிளீவ்ஸ் இளவரசியைத் திருமண விலக்கம் செய்துவிடுவதற்கான வழிமுறைகளைக் கண்டார். சமயச் சீர்திருத்தத்தைத் தாம் ஆதரிக்கவில்லை என்பதை உறுதிப்

படுத்தும் நோக்கத்துடன் அவர் காதரின் ஹோவார்டு என்பாளை மணந்தார். அவள் நார்ஃபக் பிரபுவின் உறவினள்; நார்ஃபக் பிரபு கத்தோலிக்கப் பிரபுக்களின் தலைவராயிருந்தவர். ஆனால், காதரின் ஹோவார்டுக்கும் ஆன் பொலீனுக்கேற்பட்ட கதியே விளைந்தது. காதரின் ஆன் பொலீனுக்கு உறவுக்காரியாவாள். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் ஹென்றி ஆறும் தாரமாகக் காதரின் பார் என்பாளைத் தம்முடைய கடைசி மனைவியாக மணந்து கொண்டார். அவள் ஏற்கெனவே இருவரை மணந்து அவ்விரு கணவன்மார்களையும் இழந்துவிட்டு விதவையானவள். அவள் ஒருத்திதான் எட்டாம் ஹென்றி காலமான பின்னரும் வாழ்ந்தவளாகும். அவள் தன் செல்வாக்கினைச் சமயச் சீர்திருத்தக்காரர்களுக்கு முடிந்தமட்டும் காட்டிவந்தாள். ஹென்றியின் இறுதி ஆண்டுகளில் நார்ஃபக் பிரபுவின் கட்சியும் சீரழியத் தொடங்கியது. 1546ஆம் ஆண்டுவாக்கில் நார்ஃபக் பிரபுவும் அவருடைய மகன் சர்ரே பிரபுவும் துரோகக் குற்றத்திற்காகத் திடீரெனக் கைதாக்கப்பட்டனர். புத்தாண்டு பிறந்தபோது அரசர் கடுமையான நோய்வாய்ப்பட்டார். 1547 ஜனவரி 15ஆம் நாள் சர்ரே பிரபு சிரச்சேதம் செய்யப்பட்டார். 27ஆம் நாள் நார்ஃபக் பிரபுவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அரசர் 28ஆம் நாள் காலமானார். அதன் விளைவாக நார்ஃபக் பிரபு கடைசிக் கட்டத்தில் தப்பிப் பிழைத்தார்.

### வேல்ஸுடன் தொடர்பு

பிரிட்டிஷ் தீவுகளின் எல்லாப் பகுதிகளிலும் எட்டாம் ஹென்றி தம் செல்வாக்கை உறுதிப்படுத்தினார். அவருடைய முயற்சியால் வேல்ஸ் இங்கிலாந்துடன் இரண்டறக் கலந்து ஒன்றாகியது. வேல்ஸ் கவுன்சில் சபையின் அதிகாரத்தை அவர் பெருக்கினார். படைமானிய முறைகளை நீக்கிவிட்டு அப் பகுதிகளில் ஐந்து புதிய ஷயர்களை உருவாக்கினார் அவர். அந்த ஷயர்கள் ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குத் தத்தம் பிரதிநிதிகளை அனுப்பத் தொடங்கின. இப்படியாக வேல்ஸ் இங்கிலாந்தின் பிரிக்க முடியாத பகுதியாக்கப்பட்டது.

### அயர்லாந்து

அயர்லாந்தைத் திருத்தி அமைக்கும் முயற்சியையும் எட்டாம் ஹென்றி தொடங்கினார். போப்பாண்டவருடன் தம் தொடர்பினை அறுத்துக்கொண்டதும் அவர் தம்மையே அயர்லாந்தின் அரசரெனக் கூறிக்கொண்டார். கில்டேர் பிரபுவின் கலகம் அடக்கப்பெற்று, அவர் அரசத் துரோகக் குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார். அவருடைய உறவினர்களும் தூக்கிலிடப்

பட்டனர். அயர்லாந்திலும் சீர்திருத்தத்தைத் தொடங்கிய பெருமை எட்டாம் ஹென்றியைச் சாரும். அவருடைய தந்தை யாரும் இது பற்றி ஓரளவு அக்கறை காட்டியிருந்தார். அயர்லாந்து திருச்சபைகளைக் கலைத்துவிட்டு அரசரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பவேண்டுமென்றும் அயர்லாந்துத் தலைவர்களைத் தூண்டினார். இங்கிலாந்திலும் வேல்ஸிலும் வெற்றியுற்ற சமயச் சீர்திருத்தம் அயர்லாந்தில் தோல்வியுற்றது.

### ஸ்காட்லாந்து

இறுதியாக, இங்கிலாந்து ஸ்காட்லாந்து அரச குடும்பங்களை ஒன்ருக இணைக்கவும் எட்டாம் ஹென்றி விரும்பினார். அவர் தம் மைந்தர் இளவரசர் எட்வர்டுக்கு ஸ்காட்டியக் குழந்தை இளவரசியை மணம் முடிக்க எண்ணினார். அவ் விளவரசியின் பெயர் மேரி ஸ்டுவர்ட் என்பதாகும். இத் திருமணத்தை நிறைவேற்ற ஹெர்ட்போர்டு பிரபுவை அனுப்பி எடின்பரோ நகரைத் தீயிட்டுக் கொளுத்தினர் (1544). ஸ்காட்டியர் ஃபிரான்ஸ் நாட்டுடன் உறவு கொண்டு ஹென்றியை விரட்ட எண்ணினர். இதனல் இங்கிலாந்திற்கும் ஃபிரான்ஸுக்கும் போர் மூண்டது. 1546-ல் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டபோது சிறிது காலத்திற்குள், இங்கிலாந்து, ஃபிரான்ஸ் அரசர்கள் இருவரும் மாண்டனர்.

### எட்டாம் ஹென்றியும் பாராளுமன்றமும்

டியூடர் எதேச்சாதிகாரத்தை எட்டாம் ஹென்றி உறுதிப்படுத்தி நிலைநாட்டினர். அதற்கான அடிக்கல்லை அவருடைய தந்தை நாட்டியிருந்தார். அவர் காலத்துப் பாராளுமன்றத்தில் வணிகக் குடும்பத்தினர் உறுப்பினர்களாக இருந்தனர். எனவே, அவர்கள் புது அரசினைப் பெரிதும் போற்றினர்கள். சமயச் சீர்திருத்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமயச் சொத்துகளைப் பறிமுதல் செய்வது தமக்கு ஆதாயமாகும் என்று நம்பினர். எனவே அரசரை ஆதரித்தார்கள். தமக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி செலுத்திய அரசர், அவர்தம் அதிகாரங்களைப் பெருக்கிக்கொள்ளவும் வாய்ப்பளித்தார். 1543ஆம் ஆண்டில்தான் காமன்ஸ் சபையில் பேச்சுரிமைச் சுதந்திரம் கொடுக்கவேண்டுமென முதன்முதலாகச் சபாநாயகர் வலியுறுத்தினர். காமன்ஸ் சபைக்கு அரசர் கொடுத்த அவ்வதிகாரம் காலப்போக்கில் அரசருடைய அதிகாரத்திற்குப் பின்னர்க் காலனைகை மாறியதை அவரால் உணர முடியவில்லை. அவருடைய மரபுவழி வந்தவர்கள் அதைக் கண்டார்கள்.

# 8. ஆறும் எட்வர்டு (1547-1553)

ஜேன் செய்முருக்கும் (Jane Seymour) எட்டாம் ஹென்றிக்கும் பிறந்த பிள்ளையே ஆறும் எட்வர்டு ஆவார். இவருக்குப் பத்து வயதாக இருந்தபோது முடிசூட்டிக்கொண்டார். இம் முடிசூட்டு விழா கி.பி. 1547 பிப்ரவரி 28ஆம் நாளில் வெஸ்ட்மினிஸ்டரில் நடைபெற்றது.

## ஆறும் எட்வர்டு அரசுகட்டில் ஏறியபோது இங்கிலாந்தின் நிலை

ஆறும் எட்வர்டின் தகப்பனர் எட்டாம் ஹென்றி இறந்தவுடன், ஹென்றியினுடைய காலத்தில் ஃபிரான்சுடன் இங்கிலாந்து போரிட்டதால் இங்கிலாந்தினுடைய பொருளாதாரம் பாழடைந்தது. மேலும், அவர் காலத்தில் சமூக அரசியல் கொந்தளிப்புகள் மிகுந்து இருந்தன. கொடுங்கோலரான எட்டாம் ஹென்றி குழப்பமானதோர் அரசியல் நிலைமையைத்தான் தம்முடைய வாரிசுக்கு விட்டிருந்தார். எட்டாம் ஹென்றி இறப்பதற்கு முன்னுல்தான், தம்முடைய 1529 முதல் முக்கிய ஆலோசகராக இருந்த நார்ஃபக் (Norfolk) பிரபுவினுடைய கவிஞர் மைந்தனைத் தூக்கிலிட்டார். ஹென்றியின் சாவு சில நாள்கள் கழித்து வந்திருந்தால் நார்ஃபக் பிரபுவையே தூக்கிலிட்டிருப்பார்.

ஹென்றி இறந்தபிறகு ஹென்றியின் வன்முறைச் செயல்களால் அடக்கியொடுக்கப்பட்ட சமயப்பூசல்கள் பெரும் மூர்க்கத்தனத்தோடு கிளர்ந்தெழுந்தன. திறமையாகவும் சிக்கனமாகவும் ஆட்சி செலுத்தவில்லையென்றுல் டியூடர் மரபு ஆற்றிய அரும்பணி அனைத்துமே அழிந்துவிடுமோ என்ற பயங்கர நிலை உருவாயிற்று.

நாட்டிலே புதியதாகத் தோன்றியுள்ள அரசாங்கத் திருச்சபை ஏற்றுக்கொள்ளும் வகையில் புதியதொரு சமயக்கோட்பாட்டினை ஏற்படுத்தவேண்டும். இல்லையென்றுல் நாட்டிலே உள்நாட்டுப் போர் உருவாகும் சூழ்நிலை இருந்தது. ஹென்றியின் புதிய சமயநெறிக் கோட்பாடு நிலையாக மக்களது உள்ளத்தைக் கவரவில்லை. இத்தகையதொரு சூழ்நிலையில்தான் ஆறும் எட்வர்டு

பட்டத்திற்கு வந்தார். இவர் இளமை முதற்கொண்டே நோயாளி யாக இருந்தார். ஆனால், வயதுக்கு மிஞ்சிய அறிவும் நேர்மையும் கண்டிப்பும் உடையவராக இருந்தார்.

## ஆறும் எட்வர்டு ஆட்சி

ஆறும் எட்வர்டு 16வயது வரைதான் பூவுலகில் வாழ்ந்தார். இவர் ஆறு ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். இவரது ஆட்சிக் காலத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஆறும் எட்வர்டு 1547 முதல் 1553வரை ஆட்சி புரிந்தார். உண்மையில் இவர் ஆண்ட காலத்தில் இருவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருந்தனர். முதல் பிரிவில் இவரது அம்மான் செய்மோரும் (Seymour), காவலராகச் சாமர் செட்டும் 1547 முதல் 1549 இறுதிவரை எட்வர்டின் பெயரால் ஆட்சிபுரிந்தனர். 1550 முதல் 1553 வரை நார்த்தம்பர்லாந்துக் கோமகனுக விளங்கிய டட்லி பிரபு எட்வர்டு பெயரால் ஆட்சி புரிந்தார்.

எட்வர்டின் ஆட்சிக்காலத்தில் இருபெரும் தலைவர்கள் சமயத் துறையில் பணியாற்றியுள்ளனர். 'வழிபாட்டு நூலை' (Prayer Book) ஆர்ச்பிஷப் கிரான்மர் இயற்றினர். இவர் லத்தீன் மொழி யிலிருந்து டியூடர் காலத்திய தூய ஆங்கிலத்தில் விவிலியத்தை மொழிபெயர்த்தார். இதனல் இவர் புதுமையும் பழைமையும் ஒருங்கிணைந்து போகுமாறு செய்தார். நாட்டு மக்களின் உள்ளத் தையும் உயர்ந்த உணர்வையும் தொடுமாறு வேண்டுகோள் விடுத்து, அதில் வெற்றி கண்டார். இவ்வாறு இவர் செய்யாமல் இருந்திருந்தால் அப் பெரும்பான்மையான மக்கள் முரண்பட்ட கருத்து உடையவராய்த் தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டிருப்பர்.

இங்கிலாந்து, சமயத்துறையில் தனக்கென ஒரு தனிப்பட்ட சூழ்நிலையை அமைத்துக்கொள்ள அலைந்துகொண்டிருந்தது. அதற் கேற்ற சூழ்நிலையை ஆறும் எட்வர்டின் காலத்தில்தான் அமைத்துக் கொண்டது. வழிபாட்டு நூல் முதலாம் எலிசபெத் காலத்தில் தான் வெற்றி பெற்றது. ஆனல், அந் நூலின் தொடக்கம் ஆறும் எட்வர்டு காலத்தில்தான் ஆரம்பித்தது. ஆறும் எட்வர்டின் ஆலோசனை மன்றத்தில் கிரான்மர் அச்சம் உடையவராகவும், காலத்திற்கேற்பப் பணிபுரிபவராகவும் இருந்தார். ஆனல், அவர் தமது ஆராய்ச்சியைச் சமயத்துறையில் தொடங்கியவுடன் மாபெரும் செயல்களைச் செய்தார்.

கிரான்மரின் நெருங்கிய நண்பரான லாட்டிமர் முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார். எட்டாம் ஹென்றியின் ஆட்சியில்

லாட்டிமர் பிராட்டஸ்டென்ட் சமயத்தை ஆதரித்தார். ஆதலின் அவர் தமது சமயப் பதவியைத் தாமே துறந்துவிட்டார். லாட்டிமர் ஆறும் எட்வர்டின் ஆட்சிக்காலத்தில் சீர்திருத்த இயக்கத்தின் ஈட்டியாகவே இருந்தார். மேலும், லாட்டிமர் பிரபுக்கள் கவுன்சிலின் முக்கியப் புள்ளியாக விளங்கினர். செயின்ட் பால்ஸ் கிராசில் (St. Paul's Cross) பொதுமக்களுக்கும் அரசினர் தோட்டத்தில் அரசசபையினருக்கும் எளிமையும் இனிமையும் நிறைந்த சமயச் சொற்பொழிவு ஆற்றினர். அடுத்த நூறு ஆண்டுகளுக்குப் பிராட்டஸ்டென்ட் சமயத்தில் மக்கள் பேரளவில் சேரக் கவர்ச்சியும் சுவையும் பயன்படுத்தி வழிபாட்டு நூலேயும் விவிலிய நூலேயும் அமைத்துத் தந்தார்.

எட்வர்டின் ஆட்சி தொழிற்கழகங்களேயும், மத குருமார்களின் மானியங்களேயும் கொள்ளேயடிக்க ஹென்றி தீட்டிய திட்டத்துடன் தொடங்கியது. இத் திட்டம் அரசினரது அவையினருக்கும், பிரபுக்களுக்கும் புதியதாகச் செல்வம் சேர்ப்பதற்கு வழிவகுத்துத் தந்தது. இத் திட்டத்தைப் பயன்படுத்தி வரம்பின்றிக் கொள்ளேயடித்தனர். கூட்டுக் கழகங்கள் அடக்கியொடுக்கப்பட்டதால் அதன் உதவி பெற்று நடந்த பள்ளிகளும் மூடப்பட்டன. பின்னர் அவற்றில் ஒரு சில எட்வர்டு அரசின் இலக்கணப் பள்ளிகளாகத் திறக்கப்பட்டன. லாட்டிமர் கல்வியைச் சமயத்தின் ஓர் அங்கமாகக் கருதினர். கல்வியறிவு பரவவில்லேயெனில் பிராட்டஸ்டென்ட் சமயத்தைப் பரப்ப முடியாது என்பது அவரது அசைக்க முடியாத கொள்கை. இங்கிலாந்தின் திருச்சபை தன் பெருங் கவனத்தைக் கல்வித்துறையில் செலுத்தியது. இதனல் மத குருமார்களும் கல்வியில் வல்லவர்களாக இருந்தனர். உதாரணமாக ஜிவல், ஹிக்கர், ஹோர்டு, வெஸ்காட்டு என்று பலரைச் சொல்லலாம். இக் காலத்தில் குருக்கள் மானியத்தைப் பங்கிட்டுக் கொண்டமையால் திருச்சபையினர் செல்வத்தைக் காப்பதிலேயே கவனம் செலுத்தினர். பணிபுரிவதுபற்றி அதிகக் கவனமும் சிரமமும் செலுத்தவில்லே.

லாட்டிமர் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படவில்லேயென்று கூக்குரலிட்டார். சமய போதனே அலுவலகம் அழிந்து போகிறது; மக்கள் செல்வம் சேர்த்து வைப்பதிலேயே உள்ளனர். எனவே, பிற்காலத்தில் நாட்டில் காட்டுமிராண்டித் தன்மை பல்கும். இதனேப் போக்கக் கல்வியைப் பரப்பவேண்டும். ரோமாபுரிப் பாதிரியின் ஆதிக்கத்தை மட்டும் ஒடுக்குவது தம் விருப்பம் அன்று என்ருர். அரசு கொள்ளேயிட்டு வந்த பொருளேக் கொண்டு செய்த நற்செயல்கள் இங்கிலாந்திணேக் காட்டுமிராண்டித் தன்மை

யிலிருந்தும் ரோமாபுரியின் ஆதிக்கத்திலிருந்தும் காப்பாற்றியது. ஆனாலும் கல்வியின்பொருட்டுப் பறிமுதல் செய்த நிலங்களை வழங்கத் தவறினர். இதற்குக் காரணம் கல்வியின்மீது தாபமும் மக்கள் ஆட்சியின்மீது அதிகப் பற்றும் இல்லாமையே ஆகும்.

**காப்பாளர் சாமர்செட்**

காப்பாளராக விளங்கிய சாமர்செட் கிரான்மரின் எதிர்ப்புகளிடையே குருமார்களின் மானியங்களையும் தொழிற்கழங்களையும் பறிமுதல் செய்தார். அக் கொள்ளைப் பொருளில் தமக்குச் சேர வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு தனியார் விருப்பத்திற்குச் செலவு செய்தார். அவர் தேம்ஸ் நதிக்கரையில் அரச போக வாழ்வை நல்கும் அழகிய மாளிகை ஒன்றைக் கட்டினர். அவர் அதிகாரங்கள் யாவற்றையும் தாமே வைத்திருக்கவேண்டும் என்று பெரிதும் முயன்றார். அரசர் வயது வராத சிறுபிள்ளையாக இருந்தது அவருக்குப் பெரிய உதவியாக இருந்தது. ஆனல், அவர் நேர்மை, கடமை, கண்ணியம் உடையவராகக் கடமைகள் ஆற்றினர்; திருச்சபை, அரசு ஆகியவற்றை இன்றியமையாத அங்கங்கள் என்று கருதினர். எட்டாம் ஹென்றியின் இறுதி ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட சட்டமான அரசு துரோகச் சட்டம் (Statute of Treason), ஆறு விதிச்சட்டம் (Act of Six Articles) ஆகிய இரு சட்டத்தையும் தள்ளுபடி செய்யுமாறு பாராளுமன்றத்தை வற்புறுத்தினர். மேலும், குருமார்கள் திருமணம் செய்துகொள்வதை ஆதரித்தார். கிரான்மரின் வழிபாட்டு நூலின் முதற்பதிப்பைக் கொண்டுவந்தார். வழிபாட்டு ஒருமைச் சட்டத்தை (Act of Uniformity) நடைமுறைக்குக் கொண்டுவந்தார்.

சாமர்செட் எப்பொழுதுமே கத்தோலிக்கரையும் பிராட்டஸ்டென்டினரையும் துன்புறுத்தியது இல்லை. அவர் சமய வேறுபாடுகளைத் தடையின்றி விவாதிப்பதற்கு உரிமை அளித்தார். அதனல் மிக நல்ல விளைவுகள் ஏற்படவில்லை. ஆற்றல் மிக்க அரசு தளர்ந்தபொழுது சினம் மிக்க பிராட்டஸ்டென்டுகள் அடக்கியொடுக்கப்பட்ட குருமார்களின்மீது பாய்ந்தனர். கோதார்கள் அவர்களுக்கு எதிரிகளான பிராட்டஸ்டென்டுகள்மீது பாய்ந்தனர். நாட்டில் மிகக் குழப்பமான நிலை நிலவியது. திருச்சபையிலும் வீதிகளிலும் தெய்வ உருவங்களை வைத்து இருப்பதைப் பற்றியும், விவிலிய நூலையும் வழிபாட்டு நூலையும் படிப்பதுபற்றியும் குழப்பம் மிகுந்தது. கத்தோலிக்க, பிராட்டஸ்டென்ட் பூசல்களினல் உள்நாட்டுப் போர் ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கியது. ஆக்ஸ்

ஃபோர்டு ஷயரில் கிளர்ச்சிகள் பல உண்டாயின. அரசு குருமார்களைத் தூக்கிலிட்டுக் கிளர்ச்சியினை அடக்கியது. இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் அமைதி நிலவியது. இங்கு அமைதி நிலவியதற்குக் காரணம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 'அருளாளர்களின் திருப்பயண'த்தை (Pilgrimage of the Grace) அடுத்து, கத்தோலிக்கர்கள் அடக்கியொடுக்கப்பட்டதே. தென் மேற்குக் கோடியில் சமயக் கலகமும் குழப்பமும் நிறைந்து இருந்தன. இக் காலத்திலும் காரன்வாலிஸில் மக்கள் இங்கிலாந்தின் பழைமையான மொழியான கெல்டி மொழியைப் பேசிவந்தனர். அவர்களுக்கு லத்தீனும் ஆங்கிலமும் புரியாத மொழிகளாக இருந்தன. போவோனில் மக்கள் குருமார்களின் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். எக்சிடன் குடிமக்கள் பிராட்டஸ்டென்ட் சார்பில் ஆறு வாரங்கள் முற்றுகையிட்டனர். இதனால் பின்னர் இது முதலாம் எலிசபெத் காலத்தில் எக்சிடர் கத்தோலிக்கச் சமயத்தை எதிர்த்துப் போராடும் கோட்டமாக விளங்கியது.

காப்பாளர் சாமர்செட்டுக் காலத்தில் வேறு பல கிளர்ச்சிகளும் நாட்டில் ஏற்பட்டன. அவை சமயச் சார்புடையன அல்ல. அவை உழவர்கள் செய்த கிளர்ச்சி ஆகும். காலம் மிகக் கொடியதாக இருந்தது. எட்டாம் ஹென்றி நாணயத்தின் மதிப்பைக் குறைத்தார். அதனால் விலையேற்றமும் நிலையில்லாத விலைவாசியும் மக்களைத் துன்புறுத்தின.

**நார்ஃபோக் (Norfolk) கலகமும் சாமர்செட் வீழ்ச்சியும்**

கி.பி. 1549-ல் நார்ஃபோக்கில் உழவர்கள் ஆயுதம் தாங்கிக் கிளர்ச்சி செய்தனர். நார்ஃபோக்கில் சீர்திருத்த இயக்கம் நல்ல செல்வாக்குப் பெற்று இருந்தது. பெரும் நிலச்சுவான்தார்கள் விளைநிலங்களைப் பண்ணைகளாக மாற்றி இருந்தனர். ஏனெனில், பண்ணைகளில் வளர்க்கப்பட்ட செம்மறி ஆடுகளின் கம்பளி அதிக வருவாய் தந்தது; உழவர்களையும் பாதித்தது. இதனால் உழவர்கள் வெறுப்பும் சினமும் கொண்டு கெட்டு (Kett) என்பவரின் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் கி.பி. 1549-ல் நார்விச்சைக் கைப்பற்றினர். மௌஸ்கோல்டு ஹீத் (Mousehold Heath) என்பது நார்விச்சின் வாயிலாகும். இங்குக் கிளர்ச்சிக்காரர்கள் பாசறை அமைத்துத் தங்கியிருந்தனர். இவ்வுழவர்களின் மனப்போக்கு நவீனகால மக்களாட்சியின் பண்புடையதாக இருந்தது. ஆனால், இவர்களது கிளர்ச்சியும் பிற கிளர்ச்சிகளைப் போலவே அடக்கியொடுக்கப்பட்டது. இக் கிளர்ச்சியின் விளைவாக மக்களிடையே ஆற்றல் மிக்க அரசை அமைக்கும் மனப்பான்மை பரவியது. மேலும், இக் கிளர்ச்சியினால் சாமர்செட்

வீழ்ச்சியுற நேர்ந்தது. அவரது வீழ்ச்சிக்குக் காரணம் அவர் மக்களிடம் இரக்கம் காட்டியதே ஆகும்.

லாட்டிமரின் தூண்டுதலால் சாமர்செட் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் ஆதரவில் தடுப்பு நிலங்களைக் கட்டுப்படுத்தப் பாராளுமன்றத்தில் பல சட்டங்களை இயற்றினார். அக்காலத்திய பாராளுமன்ற உறுப்பினர்களே அத் தடுப்புநில வணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஆதலின் அவர்கள் கெட்டின் கிளர்ச்சிக்குச் சாமர்செட்டே காரணம் என்ற வீண்பழியைச் சுமத்தினார்கள். சாமர்செட் மக்களின் உதவியை நாடினார். ஆனால் அது பயனற்றுப் போயிற்று. அதன் பிறகு ஆலோசனை மன்றத்தில் இருந்த கத்தோலிக்க, பிராட்டஸ்டென்ட் உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து சாமர்செட்டைப் பதவி விலகும்படி செய்து சிறை செய்தனர்.

**நார்த்தம்பர்லாந்துக் கோமகன்**

சாமர்செட்டின் வீழ்ச்சிக்குப் பிறகு வார்விக் கோமகன் ஆகவும், நார்த்தம்பர்லாந்துக் கோமகனாகவும் சிறப்புப் பெற்ற டட்லி(Dutley) சாமர்செட்டின் காப்பாளர் பதவியைக் கைப்பற்றினார். டட்லி தமக்கென எந்தச் சமயக் கோட்பாட்டையும் பின்பற்றவில்லை. ஆனால், பிராட்டஸ்டென்ட் சமயத்தின் வேலைகளைக் கவனிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சாமர்செட் திருச்சபை அரசில் பொறுமையுடன் சமூகப் பிரச்சினையைப் போக்க இரக்கத்தையும் ஆதரவையும் மக்களிடம் பெற முயன்றார். அம் முயற்சி உயர்ந்த வகுப்பினரிடம் தோல்வி கண்டது. ஆனால் டட்லி, எட்டாம் ஹென்றியின் கொடிய முறைகள் சிலவற்றைப் பின்பற்றிச் செயலாற்றத் தொடங்கினார். இதனால் இவர் பிராட்டஸ்டென்ட் கொள்கையைப் பின்பற்றி நடந்தார். இவர் ஏசுநாதரின் தெய்வீகத் தன்மையை மறுத்த ஜான் போச்சரையும், ஒரு டச்சுக் காரனையும் தவிர வேறு யாரையும் சமயம்பற்றிக் கொல்லவில்லை. ஆனால், பல கத்தோலிக்கர்கள் பதவியை இழந்து சிறையில் தள்ளப்பட்டனர்.

டட்லி வழிபாட்டு நூலைத் திருத்தத்தோடு வெளியிட்டார். ஜெர்மானிய அரசர்களிடம் லூதரிஸம் பற்றற்றுப் போன நாள் முதல் ஸ்டார்ஸ்பர்க்கும் (Starsburg) சுவிட்ஸர்லாந்தும் பிராட்டஸ்டென்ட் தீயின் அணையாத இடமாக இருந்தன. இங்கிலாந்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஆங்கிலேயர்கள் இங்கு ஒன்று கூடினார்கள். அவர்கள் டட்லி காலத்தில் இங்கிலாந்து வந்து தங்கள் பணியை ஆற்றத் தொடங்கினர். ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் விடப்படும் மூச்சுக் காற்று உடனே இங்கிலாந்து சென்று வீசியது. இன்னும் அச் செல்வாக்கு ஜெனேவாவைச் சார்ந்த கால்வினிடமிருந்து (Calvin) வருவதற்கு முன்பே சூரிச்சிலுள்ள அமைதியான

சுவிங்கிலியிடமிருந்து (Zwingli) வந்தது. ஆனால், இவ்விரு சீர்திருத்தக்காரர்களும் மக்கள் ஆட்சியைப் போற்றுபவராக இருந்தனர். பிராட்டஸ்டென்ட் சமயம் ஜெர்மனியில் அரசரைச் சார்ந்தும் சுவிட்சர்லாந்தில் பொதுமக்களைச் சார்ந்தும் விளங்கியது. சுவிட்சர்லாந்தின் சமயத்தில் எளிமை காணப்பட்டது. இந்த எளிமை இங்கிலாந்தின் சீர்திருத்த இயக்கத்திற்கு ஒரு பண்பை அளித்தது; ஆனால், இங்கிலாந்தின் வெளியில் உள்ளவர்க்கு நன்மை செய்யவில்லை.

டட்லி காப்பளராக ஆன சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1551-ல் நார்த்தம்பர்லாந்துக் கோமகனாக ஆக்கப்பட்டார். டட்லி தன்னலம் மட்டுமே நோக்குபவர். ஆறும் எட்வர்டு, ஏழாம் ஹென்றியின் திறமையும், எட்டாம் ஹென்றியின் பேரரசினை நிறுவும் ஆர்வமும் பெற்றிருந்தும், அவர் நோயாளியாகவும் மிக இளவயதினராகவும் இருந்தமையால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு அவர் பொறுப்பாளியல்லர். நோயாளியான அரசர் ஆறும் எட்வர்டு டட்லியைப் பிராட்டஸ்டென்ட் எனத் தவறாக நம்பினார். டட்லி பேராசையும் சூழ்ச்சியும் நிறைந்தவர் என்பதனை மக்கள் நன்கு அறிந்திருந்தனர்.

ஆறும் எட்வர்டு 16ஆம் வயதிலேயே காலமானார். அந்நிலையில் டட்லி எட்டாம் ஹென்றியின் பெண்களான மேரியையும் எலிசபெத்தையும் ஆட்சிக்கு வராமல் தடுக்கச் சதித் திட்டங்கள் தீட்டினார். ஜேன் கிரே என்னும் சீமாட்டி டட்லிக்கு மருமகள் ஆவாள். அவள் அரச பரம்பரையுடன் தொடர்புடையவள். ஆதலின் அவளை அரசியாக்கிவிட்டால் தாமே ஆட்சி செலுத்த முடியும் என்ற பேராசையினால் எட்வர்டின் மனத்தை மாற்றினார். அரசி மேரி பட்டத்திற்கு வந்தால் கத்தோலிக்கம் நாட்டில் மீண்டும் பலம் பெறும்; குழப்பமும் உண்டாகும் என்று எட்வர்டினை அச்சுறுத்தி அதற்காக ஜேன் கிரேயை (Jane Grey) அரசியாக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அதன்படி ஆறும் எட்வர்டு கி.பி. 1553ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் நாள் பாராளுமன்றத்தில் சாசனம் எழுதினார். அதன்படி ஆங்கில அரசு ஜேன் கிரேயுக்குத் தான் தமக்குப் பிறகு செல்லவேண்டும்; அரசி மேரிக்குச் செல்லக் கூடாது என்று எழுதிவைத்தார். ஜேன் கிரேயுக்கு அரசியாவதில் விருப்பமில்லை. அவள் டட்லியின் வற்புறுத்தலினால் பேசாமல் இருந்தாள்.

சாசனம் தயாரித்த அதே ஆண்டு (1555) ஜூலை 6 ஆம் நாள் ஆறும் எட்வர்டு மன்னர் கிரீன்விச்சில் இறந்து போனார். அவரது உடலம் வெஸ்ட்மினிஸ்டரில் அடக்கம் செய்யப்பட்டது.

# 9. முதலாம் மேரி (1553-1558)

ஆறாம் எட்வர்டு காலமான பிறகு மூன்றுநாள் கழித்தே நார்த்தம்பர்லாந்து பிரபு பொதுமக்களுக்கு அவர் மறைவை அறிவித்தார். ஜூலை பத்தாம் நாள் சாசனப்படி ஜேன் கிரேயை அரசியாக்கினார். ஆனால், அரசசபை உறுப்பினர்கள் ஜேன் கிரேயை அரசியாக ஏற்றுக்கொள்ளாமல் முதலாம் மேரியை ஆதரித்தனர். நாட்டில் பெரும்பான்மை மக்களும் மேரியை ஆதரித்தனர். இந் நிலைமையில்கூட நார்த்தம்பர்லாந்து பிரபுவினால் தமது பேராசையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் படையெடுத்து மேரியை அடக்கச் சென்றார். ஆனால், அவரது வீரர்கள் அவரை விட்டுச் சென்றார்கள். மேரியின் ஆதரவாளர்கள் அவரைப் பிடித்துச் சிறையிலிட்டனர். ஜேன் கிரே சீமாட்டியும் அவளது கணவனும் சிறையில் இடப்பட்டனர்.

கி.பி. 1553-ல் மேரி இங்கிலாந்திற்கு வந்து அரசியானள், ஆனால், அவள் இரண்டாம் ஜேம்ஸைப் போலவே மக்களது ஆதரவை விரைவில் இழந்துவிட்டாள். மேரி இங்கிலாந்து வந்த அரசியானவுடன் கார்டினர் முதலிய ரோமானியக் கத்தோலிக்கர்களை விடுதலை செய்தாள். கார்டினரைச் சான்ஸலர் ஆக நியமித்தாள். மேரிக்கு அவர் 1553 அக்டோபர் முதல்நாள் முடிசூட்டினார். கிரான்மர், லாட்டிமர், ரிட்லி, ஹூப்பர் போன்ற பிராட்டஸ்டென்டுகள் சிறையிலிடப்பட்டனர். கத்தோலிக்கச் சமயம் எட்டாம் ஹென்றிக்கு முன்பு இருந்த நிலையினை அடைந்தது.

டியூடர்களது பாராளுமன்றம் டியூடர் அரசர் அரசிகளது இச்சைக்குத் தகுந்தவாறு நடப்பதில் நிகரற்றது. மேரியின் அரசு, ஆறாம் எட்வர்டு சமயத் துறையில் இயற்றிய சட்டங்கள் அனைத்தையும் மாற்றியது. மேரி பிராட்டஸ்டென்டுகளைக் கொடுமைப்படுத்தினாள். ஆதலின் பிராட்டஸ்டென்டுகள் மேரியைக் 'கொலை வெறி பிடித்த மேரி' (Bloody Mary) என்று வர்ணித்தனர். அக்காலத்தில் சமயப் பூசல்கள் வெகு சாதாரணமாக இருந்தமையால் மேரியைக் குறைகூற முடியாது. வேறு விதங்களில் மேரி தூய வாழ்வினள். அவ்வரசி தனது கணவராலும் நாட்டவராலும் புறக்கணிக்கப்பட்டாள்,

மேரி பட்டத்திற்கு வந்தபோது அவளுக்கு வயது 30. மேரியின் மாமன் ஐந்தாம் சார்லஸ் ஸ்பானிய மன்னர்; ரோமன் கத்தோலிக்கம் இங்கிலாந்தில் தழைக்க வேண்டும் என்று விரும்பினார். ஆதலால், அவர் தமது மகன் ஃபிலிப்பை (Philip) மேரிக்கு மணமுடிக்கும் கருத்தை வெளியிட்டார். மேரிக்கும் ஃபிலிப்பைப் பிடித்து இருந்தது. இதனால் பிராட்டஸ்டென்டுகள் எங்கே ஸ்பானிய ஆதிக்கமும் கத்தோலிக்கமும் இங்கிலாந்தின் நிலையை மாற்றிவிடுமோ என்று பயந்தனர். இந்தப் பயம் எதிர்ப்புக்குக் காரணமாகியது.

**சர் தாமஸ் வையாட் கிளர்ச்சி**

கி.பி. 1554-ல் கென்டில் சர் தாமஸ் வையாட் என்பவர் தலைமையில் கிளர்ச்சி நடந்தது. வையாட்டின் கிளர்ச்சி பொது மக்களின் ஸ்பானிய அரசரை ஏற்க மறுக்கும் உணர்ச்சியை வெளிப்படுத்தியது. வையாட் பொதுமக்களின் இரக்கத்தைப் பெற்றாரே ஒழிய, அவர்களது ஆதரவைப் பெறவில்லை. இதற்குக் காரணம் நாட்டில் கிளர்ச்சி செய்வது சூனிய வித்தையைப் போன்ற கொடிய பாவமாக அக்கால மக்கள் கருதியதே ஆகும். வையாட் முதலில் நார்ஃபக் பிரபுவை ரோஸ்டரில் தோற்கடித்தார். பிறகு வெஸ்ட்மினிஸ்டர் போன்ற இடங்களையும் கைப்பற்றினார். வையாட்டின் படைகள் ஃபிளீட் தெரு (Fleet Street) வழியாக லட்கேட்டிற்கு (Ludgate) சென்றபொழுது பிராட்டஸ்டென்ட்டுகளான லண்டன் மக்கள் அவருக்கு ஒத்துழைப்பைத் தரவில்லை. எனவே, பேராற்றல் வாய்ந்த அரசினால் சிறைப் பிடிக்கப்பட்டார்.

மேரி ஏறியிருந்த அரியணையில் எலிசபெத்தை அமர்த்த வேண்டும் என்பது வையாட்டின் உள்ளக்கிடக்கை ஆகும். சில பிரபுக்களும் எலிசபெத் அரசியாவதை விரும்பினர். பலர் வையாட்டின் கிளர்ச்சிக்கு எலிசபெத் காரணம் என்று பழி சுமத்த முயன்றனர். அதற்குத் தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. கத்தோலிக்கத் தலைமைக் குருவும் அரசியல் வீரகருமான கார்டினர் ஸ்பானிய அரசரை மேரிக்கு ஏற்ற கணவர் அல்லர் என்று எதிர்த்தவராவார். ஆயினும் அவர் எலிசபெத்தை அரசியாக வராமல் தடுப்பதற்குத் தயாராக இருந்தார். பொது வழிபாட்டின்போது எலிசபெத் பக்தியோடு மண்டியிட்டு வணங்குவதில்லை என்பது அவருடைய ஐயுறவுமிக்க குற்றச்சாட்டாகும். ஆனால், பாராளுமன்றம் அவள் அரசியாக வரும் உரிமையை ஆதரித்தது. அரசராக வருவது யார்? என்பதை நிர்ணயிப்பதில்

பாராளுமன்றம் தனது உரிமையைப் போற்றி வந்தது. கத்தோலிக்கப் பாதிரியாருக்கும் ஸ்பானியத் தூதருக்கும் எதிராக, இங்கிலாந்து மக்களும் பாரளுமன்றமும் எலிசபெத்திற்குப் பேராதரவு தர முன்வந்தனர். அவள் எங்குப் பலம் இருக்கிறது என்பதை அமைதியாகப் பார்த்து அறிந்துகொண்டாள்.

சர் தாமஸ் வையாட் கிளர்ச்சி நடந்தபொழுதே ஜேன் கிரேயின் தந்தையான ஸஃபோக் டியூக் கிளர்ச்சி செய்தார். ஆதலால், மேரி அவரையும், சிறையிலிருந்த 18 வயதான ஜேன் கிரேயையும் அவளது கணவரையும் தூக்கிலிட்டாள். இச்செயல் மேரிக்கு அழியாத பழியை வாங்கித் தந்தது. கி.பி. 1554 ஜூலையில் மேரி ஸ்பானிய இளவரசன் ஃபிலிப்பை மணந்தார். ஃபிலிப் மேரியைவிடப் பதினுறு ஆண்டுகள் இளையவர். ஃபிலிப் இறுமாப்பு உடையவர். ஆனாலும் அவர் ஆங்கில ஆட்சியை விரும்பியே மேரியை மணந்தார். இவர்களது மணவாழ்க்கை ஒரு துன்ப இயல் நாடகம் ஆகும். ஃபிலிப் 1555–ல் இங்கிலாந்தை விட்டுச் சென்றபிறகு, 1557–ல் சில நாள்கள் மேரியைக் காண வந்தார். இதனால் மேரிக்கு மணவாழ்க்கையில் மிக வருத்தம் இருந்தது.

மேரியின் தகப்பனர் எட்டாம் ஹென்றி, போப் ஆதிக்கத்தை இங்கிலாந்திலிருந்து வெளியேற்றினர். ஆனல், மேரி 1555-ல் போப் ஆதிக்கத்தைக் கொண்டுவந்தார். கார்டினல், போப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

மேரி கி.பி. 1556-ல் கத்தோலிக்கர் அல்லாதாரைத் துன்புறுத்தினள். இதன் காரணமாக லாட்டிமர், ரிட்லி முதலியோர் ஆக்ஸ்ஃபோர்டில் கொல்லப்பட்டனர். கிரான்மர் எட்டாம் ஹென்றியின் காலத்தில் போப்பின் ஆதிக்கத்தை ஒழிக்கப் பாடுபட்டார். இவர் இப்போது காலத்திற்கேற்பக் கத்தோலிக்கத்தை ஆதரித்தாலும் தமக்குச் சாவு நிச்சயம் என்று தெரிந்தவுடன் பிராட்டஸ்டென்ட்டாக மாறி, கத்தோலிக்கத்தை எதிர்த்து வீரமரணம் எய்தினர். ஸ்மித்ஃபீல்டு (Smithfield) என்னுமிடத்தில் மேரி கார்டினர், பானர் முதலியோரது உதவியால் கத்தோலிக்கர் அல்லாதாரைச் சுட்டு எரித்தாள். பாக்ஸ் என்பவர் மேரியின் செயல்களுக்குப் பயந்து இங்கிலாந்தை விட்டே ஓடினர். இவர்தாம் 'உயிர்த் தியாகிகளின் வரலாறு' என்ற நூலை எழுதினர். இந்த நூலில் சிறந்தவராக வர்ணிக்கப்பட்டவர் கிரான்மரே. கி.பி. 1555 முதல் கி.பி. 1558 வரையில் 289 பேர்களைச் சுட்டெரித்தாள் மேரி. ஸ்மித்

ஃபீல்டு என்னுமிடத்தில் கி.பி. 1555-ல் ஃபிலிப் ஸ்வீடன் அரசராக ஆனார். அவர் இரண்டாம் ஃபிலிப் என்று அழைக்கப்பட்டார்.

ஃபிலிப் அரசரானது முதல் தாம் ஐரோப்பாவையே கட்டி ஆள வேண்டும் என்ற மனப்பான்மை பெற்றிருந்தார். இதனால் அவரும் அவர் மனைவி மேரியும் 1557-ல் ஃபிரான்ஸைத் தாக்கினர். ஃபிரான்ஸ் படையை, சுவீடன் படையும் இங்கிலாந்துப் படையும் சேர்ந்து தாக்கின. ஸெயின்ட் குவென்டின் (St. Quentin) என்னுமிடத்தில் ஃபிரான்ஸைத் தோற்கடித்தது.

### அரசி மேரியின் முடிவு

அரசி மேரி கத்தோலிக்கச் சமயத்தைக் காப்பதாக நினைத்து அதனை அழித்தார். கி.பி. 1558-ல் இங்கிலாந்தின் ஒரே உடைமையாக ஃபிரான்சு தேசத்தில் இருந்த கலே நகரத்தை ஃபிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றினர். இக்கலே நகரம் மூன்றும் எட்வர்டு காலம் முதல் இங்கிலாந்தின் வசம் உள்ளது. இதனைக் கீஸ்டியுக் என்ற ஃபிரெஞ்சுகாரர் ஒரே அடியில் பிடித்துக்கொண்டது ஆங்கிலேயருக்கு அதிர்ச்சியைத் தந்தது. மேரியின் மனம் அந்த நகரை இழந்ததால் மிக வருந்தியது. வேறு பல காரணங்களாலும் மனம் வருத்தப்பட்டு நின்ற அவ்வரசி கி.பி. 1558-ல் நவம்பர் 17ஆம் நாள் உயிர்நீத்தாள். அவள் உடல் வெஸ்ட்மினிஸ்டரில் அடக்கம் செய்யப்பட்டது. அதே நாளில் கார்டினரும் இறந்து போனார்.

# 10. எலிசபெத் அரசியாரின் ஆட்சி (1558-1603)

## அரசியாரின் தொடக்ககாலப் பிரச்சினைகள்

எலிசபெத் அரசி, ஆன் பொலீனின் மகள்; 1533ஆம் ஆண்டில் எட்டாம் ஹென்றி மன்னரின் மகளாகப் பிறந்தார். 1558ஆம் ஆண்டில் அவர் அரசியாராக முடிசூட்டிக் கொண்டபோது அவருடைய ஆட்சி நீடிக்குமா என்ற ஐயப்பாடு நிலவியது. ஸ்காட்டிய ராணி மேரியின் சார்பாக அவளை ஆதரித்தோர் அனைவரும் எலிசபெத் அரசியாவதைத் தடுக்க முயன்றனர். ஆன் பொலீனுக்கும் எட்டாம் ஹென்றிக்கும் நடைபெற்ற திருமணம் சட்டப்படி செல்லாது என்றும், எனவே அவர்களுக்குப் பிறந்த எலிசபெத் சட்டப்படி அரியணை ஏறுவது கூடாது என்றும் வாதித்தனர். மேலும், ஃபிரான்ஸுடன் இங்கிலாந்து போரிட்டு வந்தது. அப் போரில் இங்கிலாந்து தோற்றுப்போகக் கூடும் என்ற நிலை அப்போது நிலவியது. ஸ்பெயின் அரசர் ஃபிலிப்பும் இங்கிலாந்து நாட்டின்மீது ஒரு கண் வைத்திருந்தார். எலிசபெத்தைத் திருமணம் செய்துகொள்ள அவர் விரும்பி அதற்கான பேச்சுவார்த்தைகள்கூட நடந்திருந்தன. உள்நாட்டிலும் நிலவிய சூழ்நிலை கவலைக்கிடமானதாய் இருந்தது. வாணிபத்துறையில் பொருள்களின் விலைவாசிகள் வீழ்ச்சியுற்றமையால், நாட்டில் தேக்கநிலை நீடித்துப் போதாக்குறைக்குச் சமயப்பூசல்களும் நாட்டில் மூண்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையில் பட்டத்திற்கு வந்த எலிசபெத் தம்மை எதிர்நோக்கி வந்த பிரச்சினைகளைத் துணிச்சலாகச் சாடினார். அதிருஷ்டவசமாக அவருக்கு மூன்று வகையான அனுகூலங்கள் இருந்தன. முதலாவது, அவருடைய பிறப்பால் அனுகூலம் இருந்தது. தம்மை வெறும் ஆங்கில மொழிக்காரி என்று அவர் கூறிக்கொண்டார். இரத்த பாசத்தால் அவருக்கு ஆங்கில மக்களோடு நெருங்கிய உறவு இருந்தது. இரண்டாவது, எலிசபெத் பல்லாண்டு காலம் விளம்பரமில்லாமல் வாழ்ந்து, சாமர்செட்டின் சகோதரர், மற்றும் ஏனைய சூழ்ச்சிக் காரர்களின் வலையில் விழாது, அவசியமேற்பட்டபோது தமக்கு

வேண்டியவர்களுடன் மட்டும் உறவு கொண்டிருந்ததாகும். சர் வில்லியம் செசில் என்பார் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரராய்ச் செயலாளர் போன்று அரும்பணியாற்றி அவருக்கு உதவினார். செசில், பின்னர் பர்க்லி பிரபுவானார். 1572 முதல் 1598 வரை கருவூலத் தலைவராக இருந்து இங்கிலாந்தைக் காத்த பெருமை அவரைச் சாரும். இறுதியாக, வெளிநாட்டுச் சூழ்நிலையும் எலிசபெத் அரசிக்குச் சாதகமாக அமைந்தது. ஃபிரான்ஸும் ஸ்பெயினும் இங்கிலாந்திற்கு எதிராக இருந்தாலும், சண்டைக் காலமாயினும் சரி, சமாதானக் காலமாயினும் சரி, அவற்றில் ஒன்று இங்கிலாந்தைக் கைப்பற்றிக்கொண்டு வலுப்பெறுவதை மற்றொரு நாடு விரும்பாமலும், ஒன்றுக்கொன்று பொறாமையும் பொச்சரிப்பும் கொண்டிருந்தன.

## சமயத் துறையில் இடைநிலை நெறி

1559ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொதுவான உடன்பாட்டின்படி இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்குமிடையே அமைதியான சூழ்நிலை தோன்றியது. போரற்ற நிலையில் சமயப் பிரச்சினையைத் தீர்ப்பதென அரசியார் முடிவு செய்தார். சமயத் துறையில் எலிசபெத் அரசியார் பின்பற்றிய கொள்கையை இடைநிலை நெறி என்பர். அதன்மூலம் நாட்டின் ஒருமையைப் பாதுகாக்க இயலும் என்று கருதியே அவர் அதைப் பின்பற்றினர். அப்போது நாட்டில் பிராட்டஸ்டென்ட், கத்தோலிக்கச் சமயப் பிரிவுகள் இரண்டையும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, இரண்டையும் சாராத, ஆனால் இரண்டிற்கும் பொதுப்படையான இடைநிலை நெறியைப் பின்பற்றுவது காலத்தின் தேவை என்று தோன்றியது. இதைத்தான் ஆங்கிலிகன் இடைநிலை நெறி (Via media Anglican) என்பர்.

## ஆங்கிலச் சமயச் சீர்திருத்தத்தின் மூன்று நிலைகள்

எலிசபெத் அரசியாரின் தந்தை எட்டாம் ஹென்றி, அவளுடைய தம்பி ஆறும் எட்வர்டு, தங்கை ஸ்காட்டிய அரசி மேரி ஆகியோர் அரசாண்ட காலத்தில் ஆங்கிலச் சமயச் சீர்திருத்தம் மூன்று நிலைகளைக் கடந்திருந்தது. எட்டாம் ஹென்றி சமயச் சீர்திருத்தத்தை அரசியல் சீர்திருத்தமாக ஆக்கி இருந்தார். அவர் செய்த சீர்திருத்தத்தால் இங்கிலாந்தில் போப்பாண்டவரின் ஆதிக்கமற்ற கத்தோலிக்கச் சமயம் உருவாயிற்று. ஆறும் எட்வர்டின் காலத்தில் அன்னியச் சமயச் சீர்திருத்தவாதிகளின் செல்வாக்கின் பயனாக இங்கிலாந்தில் பிராட்டஸ்டென்ட் சமயம் முன்னேறியிருந்தது. அதன் விளைவாகப் பழைய சடங்குகள்

கைவிடப்பட்டு, ஆங்கில வழிபாட்டு நூலைப் பின்பற்றும் முறை ஏற்பட்டது. திருச்சபைகள் அக்கிரமமாகக் கொள்ளையடிக்கப் பட்டன. மேரியின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் கத்தோலிக்கச் சமயத்திற்குப் புத்துயிரளிக்கப்பெற்று, சீர்திருத்தக்காரர்கள் உயிருடன் எரிக்கப்பட்டு, சமயச் சீர்திருத்தம் என்ற இயக்கம் உயிருடன் நிலைக்க வழி பிறந்தது. எலிசபெத்தின் ஆட்சிக் காலத்தில் சமயச் சீர்திருத்தத்தின் நான்காம் நிலை பிறந்தது. மேற்கூறிய மூவரின் ஆட்சிக்காலத்தில் திருச்சபை விவகாரம் முடிவு காண முடியாமல் இருந்தமையால் நாட்டில் அமைதியற்ற நிலை நீடித்தது. சமயப் பிரச்சினைக்கு முடிவு கண்ட பெருமை எலிசபெத்தைச் சாரும். கத்தோலிக்கம், பிராட்டஸ்டென்ட் ஆகிய இரண்டு சமயங்களையும் போற்றியவர் பலர் இங்கிலாந்தில் இருந்தார்கள். எலிசபெத் சமரச இணக்கக் கொள்கையைப் பின்பற்றிப் பல புது நடவடிக்கைகளை மேற்கொண்டார். செசில் பிரபு இவ்விஷயத்தில் எலிசபெத்திற்கு உறுதுணையாக நின்றார். பாராளுமன்றத்தின் ஒப்புதல் பேரில் 1559ஆம் ஆண்டில் திருச் சபைப் பூசலை முடிவு கட்டினார் எலிசபெத் அரசியார்.

## ஆதிக்கச் சட்டம், 1559

போப்பாண்டவருடன் இங்கிலாந்தின் உறவினை இணைத்த மேரி அரசியாரின் சட்டம் தள்ளி வைக்கப்பட்டது. புதியதோர் ஆதிக்கச் சட்டம் (1559) நிறைவேற்றப்பட்டு நாட்டின் சமயத் துறையாயினும் சரி, பிற துறைகளாயினும் சரி, அனைத்திற்கும் அரசியாரே தலைவர் என்பது உறுதி செய்யப்பட்டது. தம் தந்தையார் சூட்டிக்கொண்ட தலையாய தலைவர் (Supreme Head) என்ற பட்டத்தைப் புறக்கணித்துவிட்டுத் தலையாய ஆளுநர் என்று சமயத் துறையில் அவர் தம்மை அழைத்துக்கொண்டார். இம் மாற்றத்தால் கத்தோலிக்கர்களை அவரால் சரிசெய்ய முடிந்தது. இருப்பினும், திருச்சபை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற் குள்ளேயே இருக்கவேண்டும் என்ற கொள்கையை அவர் தளர்த்த வில்லை. சமயக் கொள்கைக் குறித்துப் பாராளுமன்றக் குறுக் கீட்டைக்கூட அரசியார் வெறுத்தார்.

## வழிபாட்டொருமைச் சட்டம், 1559

ஆறும் எட்வர்டு வெளியிட்ட வழிபாட்டு நூலில் சில திருத்தங் களைச் செய்து, 1559ஆம் ஆண்டில் பாராளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. அதை வழிபாட்டொருமைச் சட்டம் என்பர். அச் சட்டப்படி திருச்சபை குருமார்கள் அவ் வழிபாட்டு நூலையே பயன்படுத்தவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டதோடு,

சாதாரணக் கிறிஸ்தவர்களும் திருச்சபைக்குச் செல்லவேண்டும் என்றும், ஆங்கில மொழியில் வழிபாடு நடத்தப்படவேண்டு மென்றும் வலியுறுத்தப்பட்டது. திருச்சபைக்குப் போகாதவர்கள் பன்னிரண்டு பென்னி அபராதம் செலுத்தவேண்டியவர்களாயினர். அவ்வபராதத் தொகை ஏழை எளியவரைக் காப்பாற்றப் பயன் பட்டது.

ஆதிக்கச் சட்டத்தையும், வழிபாட்டொருமைச் சட்டத்தையும் நிறைவேற்றியதன் மூலம் எலிசபெத் அரசியார் திருச்சபை விவகாரத்திற்கு முடிவு கட்டினர். போப்பாண்டவரின் அதிகாரம் தகர்த்தெறியப்பட்டதுடன், ஆங்கில வழிபாட்டு முறை ஒருமித்த தாகி, கட்டாயப்படுத்தப்பட்டது. சமயத் துறையில் தம் கட்டளை களைச் சரிவரச் செயல்படுத்த, அரசியார் உயர்நீதி மன்றம் நிலை நாட்டினர். இதனைத் திருச்சபைக்கான பிரிவி கவுன்சில் என்றும் பிராட்டஸ்டென்ட் வழக்காடு மன்றம் என்றும் கூறிக்கொண்டனர். திருச்சபைக்குச் செல்லாதவரைத் தண்டிப்பது, திருச்சபையைச் சார்ந்தவர்கள் செய்யும் குற்றங்களை விசாரிப்பது, நீதிபதிகள், மேயர்கள், மற்றும் ஏனைய அதிகாரிகட்கு ஆதிக்கச் சட்டத்தின் படி விசுவாசப் பிரமாணம் செய்துவைப்பது போன்ற பணிகளை இந் நீதிமன்றம் மேற்கொண்டது. முதன்முதலில் இம் மன்றம் 1559-ல் கூடியபோது கத்தோலிக்கச் சமய பிஷப்புகளும், ஏறத் தாழ 190 சமய குருமார்களும் பதவியை இழந்தார்கள்.

சமய விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்த எலிசபெத் அரசியார் மிதவாதத்தையே கைக்கொண்டார். ஆதிக்கச் சட்ட படி பிரமாணம் எடுத்துக்கொள்ள வற்புறுத்தப்பட்டவர்கள் சமய குருமார்கள் மட்டுமே; சாதாரணக் குடிமக்கள் வற்புறுத்தப்பட வில்லை. ரோமானியக் கத்தோலிக்கச் சமயவாதிகளின் மனத்தைப் புண்படுத்தக் கூடாதெனக்கொண்டு, எட்வர்டின் வழிபாட்டு நூலில் இருந்த சில வாசகங்கள் அகற்றப்பட்டன. சமயத் தீர்வு பற்றித் தம் முடிவு ஆங்கில மக்களின் விருப்பங்களை நிறை வேற்றும் என்று எலிசபெத் நம்பினர். போப்பாண்டவரின் ஆதிக்கத்தை நம்பினவர்களும், ஆங்கில வழிபாட்டு முறையை ஏற்க மறுத்தவர்களும் ஒடுக்கப்படவில்லை என்பது ஈண்டு நினைவிற்கொள்ளவேண்டும். எனினும், இம் மிதவாதம் நீண்ட நாள்கள் நீடிக்கவில்லை.

வழிபாட்டொருமைச் சட்டம் இரண்டு வகைகளில் போற்றப் படத்தக்கதாம். முதலாவது, இங்கிலாந்துத் திருச்சபை எங்ஙனம் செயல்படவேண்டும் என வருங்காலத்திற்கும் இச்சட்டம் கோடி

காட்டியது. இரண்டாவது, நாட்டில் அமைதி நிலவ வழிவகை செய்தது. பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பல்வேறு சமயப் போராட்டங்கள் மூண்டபோதிலும், இங்கிலாந்தில் அமைதி நிலவியது இதன் விளைவேயாகும். 1559ஆம் ஆண்டு வந்த சமயத் தீர்வால் கடந்த இருபத்தைந்து ஆண்டுச் சச்சரவுகள் முடிவு கட்டப்பட்டது உண்மையாயினும், அஃது அடுத்த நூற்றாண்டுகளுக்குப் பிறிதொரு போராட்டத்திற்கு வழிகோலியது என்பதையும் மறந்துவிடக் கூடாது. எலிசபெத் அரசியாரின் சமயத் தீர்வினை எதிர்த்த இரு கட்சிகள் நாட்டில் நீடித்துச் செயல் பட்டன. அவை போப்பாண்டவரை ஆதரித்தவர்களும், பியூரிட்டானியக் கொள்கைகளைக் கொண்டவர்களும் ஆவர். எலிசபெத் அரசியாரின் ஆட்சிக்காலத்தின் இறுதிக் கட்டத்தில் இங்கிலாந்தில் மூன்று கட்சிகள் உருவாகியிருந்தன. எலிசபெத் அரசியாரின் சமயத் தீர்வினை ஆதரித்த ஆங்கிலிகன் கட்சியினர், ஆதிக்கச் சட்டத்தை ஏற்க மறுத்துப் போப்பாண்டவரை ஆதரித்த கத்தோலிக்கக் கட்சியினர், மேலும் தீவிரப் பிராட்டஸ்டெண்ட் சீர்திருத்தத்தைக் கோரிய பியூரிட்டானியக் கட்சியினர் என்போரே அம் மூன்று கட்சியினராவர். ஆங்கிலிகன் கட்சியினரும் கத்தோலிக்கக் கட்சியினரும் மோதிக்கொண்ட அதே வேளையில் ஆங்கிலிகன் கட்சியினரும், பியூரிட்டானியக் கட்சியினரும் கூட இக் காலகட்டத்தில் மோதிக்கொண்டார்கள். நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இம்மூன்று கட்சியினரும் மோதிக் கொண்டதை (இரண்டாம் சார்லஸின் ஆட்சிக்காலத்தில்) ஆங்கில வரலாறு குறித்துக் காட்டும். எலிசபெத்தின் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலிகன் சமயம் ஒன்று மட்டும் அங்கீகரிக்கப்பட்டது. மற்ற இரண்டு கட்சிகளை யாரும் பொருட்படுத்தவில்லை; ஒறுத்தார்கள். சமயப் பொறைவுடைமை இன்மை பின்னர்ச் சமயப் புரட்சிக்கு வழிவகுத்தது. எலிசபெத்தால் அப் புரட்சியைத் தடுக்க முடிந்தது. ஆனால், ஸ்டுவர்ட் மன்னர்களால் அதைத் தடுக்க முடியாதபோது நாட்டில் புரட்சி பொங்கி எழுந்தது.

# 11. ஸ்காட்டிய சமயச் சீர்திருத்தம்

ஸ்காட்டிய சமயச் சீர்திருத்தத்திற்கும் இங்கிலாந்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எலிசபெத் இங்கிலாந்தை ஆண்டு வந்த காலத்தில் ஸ்காட்லாந்தில் ஸ்டுவர்டுகள் ஆட்சி நடத்தினர். ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் அவர் தம் மகள் மார்க்கரெட்டை ஸ்காட்டிய மன்னரான நான்காம் ஜேம்ஸுக்கு மணம் செய்து கொடுத்தார். பின்னர் ஜேம்ஸ், தம் மைத்துன ரான எட்டாம் ஹென்றியுடன் சண்டையிட்டுக்கொண்டார். இங்கிலாந்துடன் தமக்கிருந்த உறவை அவர் முறித்துக்கொண்டு, ஃபிரான்ஸுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். இங்கிலாந் துக்கும் ஸ்காட்லாந்துக்கும் ஏற்பட்ட பிளாடன் போரில் (1513) நான்காம் ஜேம்ஸ் பெரும்பாலான தம் பிரபுக்களுடன் போர்க் களத்திலேயே மாண்டார்.

அவருடைய மகன் ஐந்தாம் ஜேம்ஸ் தம்முடைய இரண்டாம் வயதில் முடிசூட்டிக்கொண்டார். வயது வந்ததும், அவரும் தம் மாமன் எட்டாம் ஹென்றியுடன் போரிட்டார். சால்வே மாஸ் (1542) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் ஐந்தாம் ஜேம்ஸும் தோற்றுப்போனார். மூன்று வாரங்களுக்குப் பின்னர் அவர் காலமானார். அவருக்கு ஸ்காட்டிய ராணி மேரி என்ற பெண் ணொருத்தி பிறந்திருந்தாள். சாமர்செட் பிரபு பின்கியில் வெற்றி பெற்றபோது, மேரியை ஃபிரான்ஸிற்கு அனுப்பி, அங்கு அவள் ஃபிரான்ஸ் இளவரசரைத் திருமணம் செய்துகொண்டாள். மேரியின் கணவரே பின்னர் இரண்டாம் ஃபிரான்ஸிஸ் என்றழைக் கப்பட்டார். மேரி தம் கணவரை இழந்துவிட்டு விதவையாகத் தம் பத்தொன்பதாம் வயதில் ஸ்காட்லாந்து திரும்பினார்.

பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் ஸ்காட்லாந்து முன்னேறாமல் பதின்மூன்றாம் நூற்றாண்டில் காணப்பட்ட நிலை யிலேயே நீடித்திருந்தது. மன்னர்களின் பலவீனத்தைப் பயன் படுத்திக்கொண்டு பிரபுக்கள் சட்டத்திற்குப் புறம்பாக நடந் தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியும் பொறாமையும் கொண்டு வாழ்ந்தார்கள். நாட்டில் கொலையும், களவும், காட்டு

மிராண்டித்தனமும் தாண்டவமாடின. மலைப்பகுதிகளில் வாழ்ந்த கள்ளர் கூட்டத்தை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாத அவல நிலையும் நீடித்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் ஸ்காட்லாந்தில் சமயச் சீர்திருத்தம் தோன்றலாயிற்று.

**ஜான் நாக்ஸ்**

ஸ்காட்லாந்து நாடு இடைக்காலத்தில் எப்படியிருந்ததோ அதைப் போன்றே ஸ்காட்டியத் திருச்சபையின் நிலையும் தென்பட்டது. இருப்பினும் நாட்டின் பாதிக்குமேற்பட்ட சொத்துக்கு அதிபதியாகத் திருச்சபை திகழ்ந்தது. பிரபுக்களின் பிள்ளைகளும், அரசர்களின் கள்ளக் காதலின் விளைவாகப் பிறந்த பிள்ளைகளும் திருச்சபையின் நிலங்களைப் பறித்துக்கொண்டு காதல் களியாட்டங்களில் வாழ்வைச் சுவைத்து இன்புற்றனர். நான்காம் ஜேம்ஸின் ஒரு மகன் செயின்ட் ஆண்ட்ரூஸ் ஆர்ச் பிஷப்பாகி இருந்தார். அவரும் தம் இருபதாம் வயதில் பிளாடன் போரில் செத்து மடிந்தார். தம் கள்ளக் காதலிகளின் பிள்ளைகளுக்குப் பல்வேறு மடாலயங்களை உரிமையாக்கப் போப்பாண்டவரை வேண்டித் தூண்டினார் ஐந்தாம் ஹென்றி. திருச்சபைச் சொத்துகள் பறிபோனதே ஸ்காட்டிய சமயச் சீர்திருத்தம் தீவிரமானதற்கு ஒரு காரணம் என்றால் அது மிகையாகாது.

ஸ்காட்டிய குருமார்களின் ஒழுக்க வீழ்ச்சியும், தரங்கெட்ட வாழ்வும் சமயச் சீர்திருத்தத்தைத் துரிதப்படுத்தின. எழுத்து வாசனையற்றவர்கள் சமய குருமார்களாகி, தம் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையால் சமயத்திற்கு இழுக்கைத் தேடித்தந்தார்கள்.

பதினைந்தாம் நூற்றாண்டில் லோலார்டிய சமயப் பிரசாரத்தினால் ஸ்காட்லாந்தில் சமய நிந்தனையாளர்களும் பெருகலாயினர். ஐந்தாம் ஜேம்ஸின் ஆட்சியின்போதுதான் அங்கு டைண்டேல் என்பார் எழுதிய விவிலியத்தின் புதிய ஏற்பாடு முறைப்படி வழிபாடு தொடங்கியபோது சமய சீர்திருத்தக் கருத்துகள் வளர்ந்து பெருகலாயின. சமய நிந்தனைக்காக உயிர் துறந்தவர்களில் பாட்ரிக் ஹாமில்டன் என்பார் சிறப்பானவர். அவர் 1528-ல் தீயில் வெந்து சாம்பலானார். சற்றேறக் குறைய இருபதாண்டுகளுக்குப் பின்னர் ஜார்ஜ் விஸ்ஹார்ட் (George Wishart) என்பாருக்கும் அதே கதிதான் ஏற்பட்டது. கொதித்தெழுந்த அவருடைய நண்பர்கள் ஸ்காட்டியத் திருச்சபையின் தலைவராய் இருந்த கார்டினல் பீட்டன் என்பாரைச் செயின்ட் ஆண்ட்ரூஸ் கோட்டையிலேயே குத்திக் கொன்று பழிதீர்த்துக் கொண்டனர்.

அரசியல் வானில் காணப்பட்ட சண்டைச்சச்சரவுகள் சமயத் துறையையும் பீடித்தது.

பீட்டனின் கொலைக்குப் பின்னர் கொலைகாரர்கள் கோட்டையைக் காத்து வந்தனர். ஆனால், இரண்டு மாதத்திற்குப் பின் படையெடுத்து வந்த ஃபிரெஞ்சியக் கப்பற் படையினிடம் அவர்கள் சரணடைந்தனர். ஸ்காட்டிய அரசாங்கத்தைக் காப் பாற்றும்பொருட்டு அப் படை அனுப்பப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்டவர்களில் ஜான் நாக்ஸ் என்ற பிராட்டஸ்டெண்ட் சமயப் பெரியாரும் ஒருவர். கப்பலிலேயே ஏறத்தாழ ஒன்றரை யாண்டு சிறைப்பட்டு அடிமைபோலக் காலங்கடத்தினார் அவர். சிறை மீண்டு இங்கிலாந்து சென்றபோது, அவர் ஆறும் எட்வர்டு மன்னரின் குருமாரானார். மேரி டியூடர் அரசியானபோது ஃபிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து நாடுகளில் அவர் பயணம் சென்றார். ஜெனிவாவில் கால்வின் என்ற துறவியாரைச் சந்தித்து அவருடைய சீடரானார் ஜான் நாக்ஸ். கால்வின் தலைசிறந்த சமய சீர்திருத்தவாதி. 1555ஆம் ஆண்டுவாக்கில் அவர் ஸ்காட்லாந்து வந்து சென்றார். நான்காண்டுக்குப் பின்னர் நாடு திரும்பிய போது, அவரே ஸ்காட்டிய சமயச் சீர்திருத்தத்தின் தலைவரானார்.

**கால்வின்**

மார்டின் லூதரின் மரணத்திற்குப் பின்னர் பிராட்டஸ்டெண்ட் சமயத்தைப் பரப்பிய பெருமை ஜான் கால்வினைச் சாரும். அவர் ஜெனிவாவில் வாழ்ந்துவந்த ஃபிரெஞ்சுக்காரர். கால்வின் சமயச் சீர்திருத்தத்தின்மூலம் புதியதொரு திருச்சபைக்கு வழிகோலி யவர் மட்டுமல்லர்; அவர் புதியதோர் உலகிற்கு வழிகாட்டியாவார். அவருடைய கருத்தின்படி நாட்டின் அரசாட்சி இளவரசர்களை மட்டும் சார்ந்ததன்று; அது சமூகத்தைச் சார்ந்ததாகும். பிஷப்புகளோ குருமார்களோ அந்தச் சமூகத்தை ஆள்வதற்கு மாறாக, கால்வியன் காட்டிய சமூகத்தைப் பிரெஸ்பிடீரியர்கள் என்னும் பெரியோர்கள் ஆண்டனர். அவருடையசீடர்களை ஸ்காட்லாந்தில் பிரெஸ்பிடீரியர்கள் என்றும், இங்கிலாந்தில் பியூரிட்டன்கள் என்றும், ஃபிரான்ஸில் ஹியூஜினோக்கள் என்றும் அழைத்தனர். ஜான் நாக்ஸ் கால்வினின் கருத்துகளே உண்மையான கிறிஸ்துவ சமயக் கருத்துகளாகும் என்று நம்பினார்; போப்பாண்டவர் அவருடைய கருத்துகளைச் 'சைத்தானின் கூடு' என்று ஏளனம் செய்தார்.

ஸ்காட்லாந்தின் சமயச் சீர்திருத்த இயக்கம் அரசியலுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. பிரபுக்களில் ஒரு பிரிவினர்

ஸ்காட்லாந்தில் ஃபிரெஞ்சியச் செல்வாக்குப் பெருகுவதை வெறுத்தனர். ஃபிரெஞ்சு இளவரசரை மணந்திருந்த மேரி அரசியார் ஃபிரான்ஸிலேயே வாழ்ந்து வந்தார். அவருடைய தாயாரான கைஸ் அரசி மேரி, ஸ்காட்லாந்தின் பிரதிநிதி போன்று கருதப்பட்டவர். மேற்கூறிய பிரபுக்கள் ஸ்காட்லாந்து ஃபிரான்ஸ் நாட்டின் ஒரு மாநிலம்போல் ஆக்கப்பட்டிருந்த நிலையை வெறுத்து, சமயச் சீர்திருத்தக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர். அவர்கள் ஜான் நாக்ஸின் உதவியை நாடினர். அவர் நூலொன்றை எழுதி ஸ்காட்லாந்து, இங்கிலாந்து, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஆட்சி நடாத்திய பெண்களைக் குறை கூறியிருந்தார். இங்கிலாந்தில் ஸ்காட் மேரி காலமானதும், எலிசெபத் அரசியானாள்; ஜான் நாக்ஸின் நூலை ஆதரிக்க மறுத்த அரசியார் இங்கிலாந்தின் வழியாக ஜான் நாக்ஸ் பயணம் செய்வதற்குக்கூட அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்.

இந்நிலையில்தான் ஜான் நாக்ஸ் 1559ஆம் ஆண்டில் லீத் என்ற நகரில் வந்திறங்கினார். அவருடைய பிரசாரத்தின் விளைவாக ஸ்காட்டிய மக்கள் திருச்சபைச் சொத்துகளைச் சூறையாடினர். 1560ஆம் ஆண்டுவாக்கில் ஸ்காட்டிய மடாலயங்கள் சொல்லொணா இடுக்கண்களுக்கு ஆளாகி அழியத் தொடங்கின. நாக்ஸின் பேருரையைக் கேட்ட பெர்த் நகர மக்கள் கலகத்திலும் அழிவிலும் ஈடுபட்டனர். செயின்ட் ஆண்ட்ரூஸ் திருச்சபையும் அழிக்கப்பட்டது. அத் திருச்சபையில் சேர்க்கப்பட்டிருந்த விலை மதிப்பற்ற கலைச்செல்வங்கள் அழிக்கப்பட்டோ, சூறையாடப்பட்டோ சின்னாபின்னமாக்கப்பட்டது. ஜான் நாக்ஸ் சூறையாடலைத் தடுத்து நிறுத்தியபோதிலும், சமய வெறி தலைக்கேறிய பொதுமக்கள் அவருடைய சொற்களை மீறி நடந்தபோது அவரால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஃபிரான்ஸின் அரசியாராகத் திகழ்ந்த மேரி ஸ்டுவர்டின் கணவர் இரண்டாம் ஃபிரான்ஸிஸ் லீத் நகரைக் கைப்பற்ற ஃபிரெஞ்சியப் படையொன்றை அனுப்பினார். கைஸ் மேரி எடின்பரோ கோட்டையில் தஞ்சம் புகுந்தார். இத் தருணத்தில் தான் ஆங்கில அரசி எலிசபெத் ஸ்காட்லாந்தின் விவகாரத்தில் குறுக்கிடத் தீர்மானித்தார். ஸ்காட்டிய பிரபுக்களும் அவருடைய தலையீட்டை விரும்பி வேண்டினர். தயக்கத்தை உதறித் தள்ளி விட்டு, ஆங்கிலப் படையொன்றை எலிசபெத் ஸ்காட்லாந்திற்கு ஏவினார். ஆங்கில–ஸ்காட்டியப் படைகள் லீத் நகரை முற்றுகையிட்டன. ஆங்கில முயற்சி தோல்வியுற்றபோதிலும், பஞ்சத்தின் காரணமாக ஃபிரெஞ்சியப் படை பின்வாங்க வேண்டியதாயிற்று.

இவ் வேளையில்தான் அரசப் பிரதிநிதியாக ஆண்ட மேரி காலமானார். ஃபிரெஞ்சியர் எடின்பரோவில் உடன்படிக்கை யொன்றைச் செய்துகொண்டனர் (1560). அதன்படி ஸ்காட்லாந்தை விட்டு ஃபிரெஞ்சியர் வெளியேறலாயினர். அதே தருணத்தில் ஆங்கிலப் படைகளும் நாடு திரும்பின. ஸ்காட்லாந்து ஜான் நாக்ஸின் வசமாயிற்று. சமயச் சீர்திருத்தம் வேண்டியவர்கள் சிறப்பான வெற்றி பெற்றனர். எடின்பரோ உடன்படிக்கை இங்கிலாந்தைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமானதாகும். ஏனெனில் அவ்வுடன்படிக்கை ஸ்காட்லாந்தில் பிராட்டஸ்டென்ட் சமயத்திற்கு வழிகோலியது. இங்கிலாந்தின் உதவிக்கு ஸ்காட்லாந்து நன்றி செலுத்தியது. ஃபிரெஞ்சுப் படைகள் எடின்பரோவைக் கைப்பற்றி இருந்தாலும், சமயச் சீர்திருத்தக்காரர்களைக் கைஸ் மேரி வெற்றி கண்டிருந்தாலும், ஸ்காட்லாந்தின் கதையே—ஏன் இங்கிலாந்தின் வரலாறே மாறியிருக்கும்.

1559-60ஆம் ஆண்டுகளின் சம்பவங்கள் ஸ்காட்டிய வரலாற்றின் திருப்புமுனையாயின. வெற்றி வாகை சூடிய சமயச் சீர்திருத்தக்காரர்கள் (1560) பாராளுமன்றத்தைக் கூட்டி, போப்பாண்டவரின் அதிகாரத்தை ஏற்க மறுத்ததோடன்றி, மடாலயங்களைக் கலைத்தும், கூட்டு வழிபாட்டைச் சட்டவிரோதம் என்றும் முடிவு செய்தனர். நாக்ஸும் அவர்தம் நண்பர்களும் ஸ்காட்டிய கிர்க் என்னும் பிராட்டஸ்டென்ட் சமய நிறுவனத்தை நிலைநாட்டினர். கிர்க்கைப் பெரியோர்கள் அல்லது பிரெஸ்பிடீரியர்கள் எனப்பட்டோர் ஆண்டனர். நாக்ஸின் வாரிசாக வந்த ஆண்ட்ரு மெல்வில்லி என்பாரின் காலத்தில் பிஷப் பதவி அவசியமற்றதென்றும், சட்ட விரோதமானதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஸ்காட்லாந்தில், இவ்வகையாகக் கத்தோலிக்கச் சமயம் தகர்க்கப்பட்டது. இங்கிலாந்துடன் தொன்றுதொட்டு நீடித்து வந்த சச்சரவும் தீர்ந்தது. எலிசபெத் அரசியார் புதிய ஸ்காட்லாந்தின் நல்லுறவைப் பெற்றார். எனினும், அவரால் ஸ்காட்டிய மேரியின் அனுதாபத்தைப் பெற முடியவில்லை. அவர் கத்தோலிக்கச் சமயத்தின் காவலராகவே இருந்தார். தம் கணவர் இரண்டாம் ஃபிரான்ஸிஸ் காலமானபோது (1560) ஸ்காட்டிய மேரி ஃபிரான்ஸின் அரசியென்னும் பொறுப்பிலிருந்தும் விடுபட்டார். ஃபிரான்ஸை விட்டு ஸ்காட்லாந்து திரும்பியபோது மேரியைப் பிராட்டஸ்டென்ட் சமயத்தார் பொருட்படுத்தவே இல்லை.

# 12. எலிசபெத் அரசியாரின் கொள்கை

## (அ) எலிசபெத் அரசியார்: இங்கிலாந்தும் ஐரோப்பாவும் (1558-1603)

எலிசபெத் அரசியாரின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்து கடலாதிக்கம் பெற்றதும், இலக்கியத் துறையில் வெகுவாக முன்னேறியதும் சீரிய செயல்களாகும். இங்கிலாந்து கடலரசி என்று கருதப்படும் உயரியநிலை அடைந்ததும், ஆங்கில இலக்கியம் உலகையே கவரும் பெருநிலைக்கு உயர்ந்ததும் இக்காலத்தில் தான். எலிசபெத் அரசியாரின் சாமர்த்தியமும், அவளுக்கு உதவிசெய்த அமைச்சர்களும் இவ் வெற்றிக்குக் காரணபூதர் களாவர். இடுக்கண் சூழ்ந்த நிலையைப் போரிட்டுச் சமாளிக்காமல், சூழ்ச்சித் திறனால் வென்ற பெருமை எலிசபெத்தைச் சாரும். அவருடைய தனிப்பெரும் கொள்கைகளின் வினைவாக இங்கிலாந்து சமயத்துறையிலும், அரசியலிலும் சுதந்திரம் பெற்றுக் காக்கப்பட்டது.

### செசில், வால்சிங்ஹாம் என்னும் அமைச்சர்களின் பணி

வில்லியம் செசில் என்பார் நாற்பதாண்டுகள் எலிசபெத்தின் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார். 1572ஆம் ஆண்டுவரை அவரே அரசியாரின் முக்கியச் செயலாளராகவும் பணியாற்றியவர். பின்னர் அவர் கருவூலத் தலைவராக்கப்பெற்று பர்லி பிரபு என்றும் அழைக்கப்பட்டார். அவரை அடுத்துச் செயலாளராக சர் பிரான்ஸிஸ் வால்சிங்ஹாம் பொறுப்பேற்றார். செசில் மிதவாதக் கொள்கைகளைப் பின்பற்றிப் பழைமை விரும்பிக் கொள்கையைக் காத்தவர். ஸ்பெயினுக்கு ஆத்திரமூட்டும் நடவடிக்கை எதையும் அவர் செயல்படுத்த விரும்பவில்லை. மாறாக, வால்சிங்ஹாம் சிறந்ததொரு பிராட்டஸ்டென்ட்; ஆங்கிலக் கத்தோலிக்கரைக் கடும் நடவடிக்கைகளின்மூலம் அடக்க விரும்பினார். ஸ்பெயினுடன் போராட வேண்டிய அவசியத்தையும் அவர் ஆதரித்தார். எலிசபெத் அரசியாரைக் கொல்ல நடைபெற்ற முயற்சிகள் அனைத்தையும் முறியடித்தவர் வால்சிங்ஹாமேயாவார்.

## எலிசபெத்தின் குணநலன்

எலிசபெத் குற்றங்குறைகளைக் கொண்டிருந்தவராயினும், தேசிய நலன்களைக் காப்பதில் தீவிர ஆர்வம் காட்டினர். அவருக்குச் சமய ஆர்வம் குறைவாக இருந்தது; காதல் விளையாட்டுகளிலும், அவர் ஈடுபட்டார்; எனினும், அவருக்கு அரசியலில் மிகுந்த ஈடுபாடிருந்தது; அதில் அவர் அனைவரையும் மிஞ்சினர். சுருங்கச் சொன்னல், நாட்டுப்பற்றே அவருடைய சமயம்; இங்கிலாந்தே அவருடைய காதல் தெய்வமாயிற்று. அவருக்குப் பகைவர்கள் பலர். போப்பாண்டவரும் கத்தோலிக்க ஐரோப்பியரும் அவரைச் சட்ட விரோதமாகப் பிறந்தவர் என்றே கருதினர். அவரது ஆட்சியின் முதல் முப்பதாண்டுகளில் இங்கிலாந்தை எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஆராயாமல் எலிசபெத்தின் ஆட்சியின் சிறப்பினைப் புரிந்துகொள்வது கடினம்.

## எதிர்நோக்கிய தொல்லைகள்

இக் காலக் கட்டத்தில் எலிசபெத் அரசியாரை மூன்று பயங்கர ஆபத்துகள் எதிர்நோக்கின. ஆபத்து நீங்கும் முன்னர் ஒருவேளை எலிசபெத் காலமாகியிருந்திருப்பாராயின் இங்கிலாந்தையே அத் தொல்லைகள் அழித்திருக்கக் கூடும். முதலாவது வாரிசுரிமையைப் பற்றியதாகும். வைதிகக் கத்தோலிக்கர்கள் ஸ்டூவர்டு மேரியையே இங்கிலாந்தின் சட்டபூர்வமான அரசியெனக்கொண்டிருந்தமையால் வாரிசுரிமை குறித்து உள்நாட்டுப் போர் மூளும் அபாயம் இருந்தது. இரண்டாவது, பிராட்டஸ்டென்ட்-கத்தோலிக்கச் சமயவாதிகளிடையே சமயப் போர் மூளும் அபாயமாகும். மூன்றாவது, அன்னியப் படையெடுப்பும் வெற்றியும்பற்றிய அபாயமாகும். இத் தொல்லைகளுக்கும் அபாயங்களுக்கும் ஒன்றுக்கொன்று தொடர்பிருந்தது. அரசியார் இறந்திருந்தாலும் சரி, அல்லது கொலை செய்யப்பட்டிருந்தாலும் சரி, இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் மூண்டிருக்கக்கூடும். அத்தகைய நிலையில்—எலிசபெத் இறந்திருந்தால் —ஸ்டூவர்டு மேரி இங்கிலாந்தின் அரச வாரிசாக வர நேர்ந்திருக்கும். அப்போது அந்த வாரிசுரிமையை எதிர்த்து உள்நாட்டுப் போர் எழுந்திருக்கும். மேரி ஸ்டூவர்டு கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவராகையால், இயற்கையாகவே அவர் ரோமானியப் போப்பாண்டவரின் ஆதிக்கத்தை மீண்டும் இங்கிலாந்தில் நிலைநாட்ட முயற்சி செய்திருப்பார். அதன் விளைவாக, சமயப் போர் மூண்டிருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக ஹாலந்திலும் ஃபிரான்ஸிலும் இத்தகைய சமயப் போர்கள் நடைபெற்றிருந்தன.

தம் தந்தையார் எட்டாம் ஹென்றியைப் பின்பற்றித் தம்மை எதிர்நோக்கின தொல்லைகளை அழித்துவிட எலிசபெத் முயலவில்லை. ஏனெனில், அதற்கான மனப்பக்குவம் அவரிடம் இருக்கவில்லை. மேலும், ஐரோப்பியச் சூழ்நிலையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டிருந்தது. எட்டாம் ஹென்றியின் காலத்தில் கத்தோலிக்கச் சமய ஐரோப்பா லூதரின் கருத்துகளுக்கு மறுப்புக் கூறமுடியாமல் திக்குமுக்காடித் தவித்தது. பின்னர் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் பயனாக ஜெர்மனியில் அமைதிக்கு வழி பிறந்தது. ஆக்ஸ்பர்க் உடன்படிக்கையின்படி பிராட்டஸ்டென்ட் இளவரசர்கள் ஓரளவு சமயப் பொறையுற்று அமைதியாக வாழ்ந்தார்கள். ஆனால், கத்தோலிக்க ஸ்பெயின் நாடோ மிகுந்த அதிகாரப் படலம்பெற்றுத் திகழ்ந்தது. அந் நாட்டின் அரசராகத் திகழ்ந்த இரண்டாம் ஃபிலிப் (1556–98) பேரரசரானபொழுது அவர் உலகிலேயே பெரிதெனக் கருதப் பட்ட பேரரசுக்குத் தலைமை வகித்தார். அவர் கத்தோலிக்கச் சமய எதிரிகளை நசுக்கப் பல திட்டங்களைத் தீட்டியிருந்தார். ஸ்பானிய அரசரும் பேரரசருமான இரண்டாம் ஃபிலிப்பும், ஃபிரெஞ்சிய அரசரும் ஒன்றாகக் கூட்டுச் சேர்ந்திருந்தார்களே யாயின் ஆங்கிலப் பிராட்டஸ்டென்ட் சமயமோ—அன்றி ஆங்கில மக்களின் சுதந்திரமோ பறிபோயிருக்கக்கூடும்.

கத்தோலிக்கர் இங்கிலாந்துக்கெதிராகச் சமயப் போரைத் தொடங்கும் அச்சம் இருந்தது. சமயச் சீர்திருத்த எதிர்ப்பியக்கத் தால் (Counter Reformation) கத்தோலிக்கரின் நிலை சீர்பெற லாயிற்று. போப்பாண்டவர்களின் பேரார்வத்தால் கத்தோ லிக்கச் சமயம் திருத்தமடையலாயிற்று. டிரென்ட் என்னுமிடத் தில் நடைபெற்ற திருச்சபை மாநாட்டில் கத்தோலிக்கச் சமயக் கொள்கைகள் திருத்தப்பெற்றன. இன்குஸிஷன் நீதிமன்றங்கள் கத்தோலிக்கச் சமய எதிரிகளைச் சமய நிந்தனையாளர் என்று விசாரித்துத் தண்டித்துக் கத்தோலிக்கச் சமயத்தை நிலைநாட்டும் முயற்சிகளில் வெற்றிபெற்றன. ஏசுநாதர் கழகம் என்ற ஒன்றினை ஸ்பானியரான இக்னேஷியஸ் லயோலா என்பார் நிலைநாட்டிக் கத்தோலிக்கச் சமயத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்டார். மேற் கூறிய காரணங்களினால் கத்தோலிக்கச் சமயம் மீண்டும் நிலை நாட்டப்பட்டது.

கத்தோலிக்கச் சார்புடைய நாடுகள் ஒன்றாக இணைந்து எலிசபெத்தை அரியணையிலிருந்து இறக்கி, ஆங்கிலப் பிராட்டஸ் டென்ட் சமயத்தை அழிக்க முற்படும் முயற்சி தோல்வியுற்றது. தோல்வியுற்றமைக்குக் காரணம் ஃபிரெஞ்சு-ஸ்பானியப் பகை

மையேயாகும். ஸ்பெயினும், ஃபிரான்சும் ஒன்று சேர்ந்து இங்கிலாந்தைத் தாக்கத் தவறினாலும், தனித்தனியாக இங்கிலாந்தை எதிர்க்கக் கூடுமன்றோ? ஆங்கில அரியணையில் ஸ்காட்டிய மேரி ராணி முடிசூட்டிக் கொள்வதை ஸ்பெயின் அரசர் ஃபிலிப் விரும்பவில்லை. அப்படிப்பட்ட நிலையேற்படுமாயின் இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஃபிரான்ஸ் நாட்டிற்கு அடிமைப்பட்டு, அந் நாட்டின் மாநிலங்கள்போல் காட்சியளித்திடக்கூடும். இதை விரும்பாத ஃபிலிப் தனித்து நின்று நடவடிக்கை எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதைத் தவிர்க்கத்தான் எலிசபெத் பெரிதும் முயன்றார்; தம் ஆட்சிக்காலத்தின் முதல் முப்பதாண்டுகள் வரை இம் முயற்சியில் அவர் வெற்றி கண்டார்.

## எலிசபெத்தும் ஸ்பெயினும்

ஃபிலிப்புடன் நேரிடையான போரைத் தவிர்க்க விரும்பினார் எலிசபெத். எனினும், ஃபிலிப்பிற்குத் தொல்லைகளைத்தரும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபடத் தவறவில்லை. அத்தகைய நடவடிக்கைகள் பலவற்றுக்கு வழிகள் இருந்தன. எடுத்துக்காட்டாக, ஆங்கில மாலுமிகளைத் தூண்டிவிட்டு ஸ்பெயினுக்குச் சொந்தமாயிருந்த அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகளுக்குச் சென்றுவரும் கப்பல்களைக் கொள்ளையடித்துச் சூறையாடச் செய்தார். அதே சமயத்தில் ஸ்பானியத் தூதரிடத்தில் தமக்கும், அத்தகைய சம்பவங்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்றும் அவர் கூறத் தவறவில்லை.

மற்றும் ஃபிலிப்பிற்குச் சொந்தமாயிருந்த நெதர்லாந்து நாட்டின் விவகாரத்திலும் எலிசபெத் குறுக்கிட்டார். நெதர்லாந்துக்கும் ஃபிலிப்பிற்கும் சரியான உறவில்லை என்பதை அறிந்த எலிசபெத் அந் நாட்டினை ஃபிலிப்பிற்கு எதிராகப் போகும்படி தூண்டினார். நெதர்லாந்து (ஹாலந்து, பெல்ஜியம்) ஐரோப்பாக் கண்டத்தின் முக்கிய வணிகத் தலங்களையும், சந்தைக் கடைகளையும் கொண்டிருந்தன. இயற்கையாகவே அவை ஸ்பெயினின் ஆதிக்கத்தை வெறுத்தன. அவை சுதந்திரத்திற்காகப் போராட ஆயத்தமாயின. ஏறத்தாழ நாற்பதாண்டுகள் ஃபிலிப்பும் அவருடைய வாரிசாக வந்தவரும் நெதர்லாந்தின் கலகங்களை அடக்கப் பெருமுயற்சி செய்தும், வெற்றி கிட்டவில்லை. ஆல்வா பிரபு என்பாரை அனுப்பி நெதர்லாந்துப் பகுதிகளைக் கொடுமையாக அடக்க முற்பட்டார். ரத்த வெறி பிடித்த ஆல்வாவின் ஆட்சியும் நீண்ட காலம் நீடிக்கவில்லை. இத் தருணத்தில் சமயச் சீர்திருத்த ஆர்வமும் பிறக்கவே ஆல்வாவின் கடுமையான பிடியும் தளர வேண்டியதாயிற்று. ஹாலந்து நாட்டில் கால்வினியக் கொள்கைகள்

வலுப்பெற்றமையால் அப்பகுதி மக்கள் ஃபிலிப்பின் ஆட்சியை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டனர். கலகக்காரர்களின் தலைவராக ஆரஞ்சு இளவரசர் வில்லியம் தலைமை தாங்கினர். போதாக்குறைக்கு, கடற் பிச்சைக்காரர்கள் என்னும் டச்சிய மாலுமிகள் ஸ்பானியக் கப்பல்களைக் கொள்ளையடித்துத் தொல்லை களைத் தந்தனர். இக் கடற்பிச்சைக்காரர்கள் ஆங்கிலத் துறை முகங்களைத் தம் அடித்தளமாக்கிக்கொண்டு டோவர் நீர்ச்சந்தியில் செல்லும் ஸ்பானியக் கப்பல்களைக் கொள்ளையடித்தார்கள் எலிசபெத் இக் கடற் பிச்சைக்காரர்களுக்கு மறைமுகமாக ஆதரவளித்தார். அவர்களுக்குச் சமயம் வாய்த்தபோதெல்லாம் பொருளுதவியும் செய்தார்.

### எலிசபெத்தும் ஃபிரான்சும்

ஃபிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற சமயப்போர்களை எலிசபெத் இவ்வண்ணமே பயன்படுத்தித் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டார். ஃபிரெஞ்சியப் பிராட்டஸ்டென்டுகளை ஹியூஜினேக் கள் என்பர். அவர்கள் கால்வினியக் கோட்பாடுகளில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் ஃபிரெஞ்சிய அரசர்களுக்குத் தொல்லைசளைக் கொடுத்து வந்தார்கள். ஒன்பதாம் சார்லஸ், மூன்ரும் ஹென்றி போன்ற ஃபிரெஞ்சிய அரசர்கள் இத்தகைய தொல்லைகளுக்கு இலக்காகியவர்கள். அவ்வப்போது எலிசபெத் ஹியூஜினேக்களுக்கு அரை மனத்துடன் உதவி செய்து வந்தார். ஃபிரெஞ்சிய அரசருடன் அவர் நேரிடையான தாக்குதல்களை விரும்பவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

### அரசியாரின் திருமணம்பற்றிய விவகாரம்

அரசியாரின் திருமணம்பற்றிய பிரச்சினை மேற்கூறிய சூழ் நிலையை மேலும் குழப்பமடையச் செய்தது. ஸ்பானிய அரசர் ஃபிலிப்பை மணந்துகொள்ள எலிசபெத் மறுத்துவிட்டார் (1559). ஆனல், ஃபிரெஞ்சிய அரசர்களில் யாரையேனும் மணந்து கொள்ளக் கூடுமோ என்று நப்பாசையை மூட்டிவிட்டிருந்தார் அவர். இருப்பினும் எலிசபெத்தின் திருமணப் பேச்சுகள் முறிந்து விட்டன. நார்த்தம்பர்லாந்து பிரபுவின் மகனை இராபர்ட் டட்லி என்பாரைக் காதலித்த எலிசபெத், அவரை மணந்துகொள்ள எண்ணியிருந்தார். ஆனல் டட்லியின்மீது சுமத்தப்பட்ட பழி யொன்றின் விளைவாக அவரை மணந்துகொள்ளும் திட்டமும் கைவிடப்பட்டது. எலிசபெத் திருமணம் செய்து கொள்ளுவதைப் பாராளுமன்றம்கூட வேண்டி விரும்பியது. அவருக்கு அடுத்தபடி யாக ஆட்சி நடத்த வாரிசு வேண்டுமே! அதுதான் பாராளு

மன்றத்தின் விருப்பம். அவர் திருமணம் செய்து கொள்ளாமலேயே தம் வாழ்நாள்களைக் கழித்துவிட்டார். ஸ்பெயினையும் ஃபிரான்சையும் இணையவிடாமல் அந் நாட்டு மன்னர்கள் எலிசபெத்தை மணந்துகொள்ளப் பெரிதும் விரும்பியவர்கள். அந் நாடுகளுடன் தம் கொள்கையை நிலைநாட்டிக்கொண்டார். திருமணத்தால் ஏதாவது ஒரு நாட்டினைப் பகைத்துக்கொள்ள நேரிடலாமன்றோ?

## (ஆ) ஸ்காட்டிய அரசி மேரியின் வீழ்ச்சி

எலிசபெத் ஆட்சியின் முதல் ஒன்பதாண்டுக் காலம் ஸ்டுவர்ட் மேரி ஸ்காட்லாந்தின் அரசியாக ஆட்சி செய்தார். அடுத்து வந்த பத்தொன்பதாண்டுகள் அவர் எலிசபெத்தின் கைதியாகிச் சிறையில் அடைக்கப்பட்டார். மேரியின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்த சம்பவங்கள் ஆங்கில வரலாற்றில் மிக முக்கியம் வாய்ந்தவையாம்.

ஸ்காட்லாந்தில் இருந்த நாலாவது ஆண்டில் மேரி திருமணம் செய்துகொண்டார் (1565). மார்க்கரெட் ட்யூடரின் இரண்டாவது கணவன் வழியில் வந்த அவரது பேரன் டார்ன்லி பிரபுவை அவர் திருமணம் செய்துகொள்ள விரும்பினர். மேரிக்கும்-டார்ன்லி பிரபுக்கும் ஆங்கில அரசுரிமைக்கு வர வாய்ப்பிருந்தது. ஏனெனில் இருவரும் ஏழாம் ஹென்றியின் வமிசத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டவர்கள். எலிசபெத்தைக் கத்தோலிக்க ஐரோப்பா இன்னமும் அரசியாக ஏற்க மறுத்திருந்தது. சட்டப் படி அவருடைய அரசுரிமை செல்லத்தக்கதன்று என்பது அவர்கள் கருத்து. ஆனல், மேரியோ கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்; எனவே, இங்கிலாந்தின் அரசுரிமையைப் பெறத்தக்கவர். டார்ன்லி பிரபுவும் ஒரு கத்தோலிக்கர். எனவே அவ்விருவரும் மணந்துகொண்டதால் இங்கிலாந்து-ஸ்காட்லாந்து நாடுகள் ஒருமைப்பட வழி பிறக்கலாம் அன்றோ!

ஆனல், மேரியின் குணநலன் எலிசபெத்தின் குணநலனைவிட வேருனதாக மாறுபட்டிருந்தது. அவர் உணர்ச்சிவயப்படக் கூடியவர்; விருப்பு வெறுப்புகளுக்கு எளிதாக இரையானர். அஃதே அவருடைய வீழ்ச்சிக்கும் வழிசெய்தது.

### டார்ன்லி பிரபு கொலை செய்யப்படல், 1567

மேரியின் கணவர் டார்ன்லி பிரபு பலஹீனர்; கவைக்குதவாதவர் எனக்கொண்டு அவரை மேரி வெறுக்கத் தலைப்பட்டார்.

டார்ன்லி பிரபுவும் மேரியின்மீது பொறுமை கொண்டார். அதன் விளைவாக அவர் மன்னிக்க முடியாததொரு குற்றத்தைச் செய்து அதற்கான தண்டனையைப் பெற்றார்.

டார்ன்லி பிரபுவும் அவருடைய நண்பர்களும் ஒரு நாள் மேரியின் அந்தப்புரத்தில் நுழைந்து அடாத செயலொன்றினைச் செய்தனர். அவ்வேளையில் மேரி தம் செயலர் டேவிட் ரிஸ்ஸோ என்ற இத்தாலியனுடன் உணவருந்திக்கொண்டிருந்தார்: டார்ன்லி பிரபுவும் அவர் நண்பர்களும் ரிஸ்ஸோவைக் கொல்ல வாளையுருவியபோது, அவர் மேரியின் பின்புறத்தில் ஒளிந்து கொண்டார். எனினும் அவரை இழுத்துப்போட்டு வாயில் வழியில் குத்திக் கொன்றனர். இத்தகைய அடாத செயலைச் செய்த டார்ன்லியை மேரி ஒருபோதும் மன்னிக்கவேயில்லை. எனினும் கணவனையிற்றே! சூழ்ச்சியில் ஈடுபட்டு அவரைப் பழிதீர்த்துக் கொள்ள உறுதி பூண்டாளாயினும், அதை வெளிக்குக் காட்ட வில்லை. அவரைக் காதலிப்பது போன்றே நாடகம் நடத்திவந்தார். அது மட்டுமன்று; அக் கொலைகாரர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளவும் மூடனை தம் கணவனைத் தூண்டி, எடின்பரோ வுக்கு தப்பிச் சென்றார். அதற்குப் பின்னர்தான் மேரிக்கு டார்ன்லி யின்மூலம் மகன் ஒருவன் பிறந்தான். அவனே வருங்கால ஆரும் ஜேம்ஸ் ஆகும். அடுத்த ஆண்டில் டார்ன்லி நோய்வாய்ப்பட்டார். இன்னமும் அவரைக் காதலிப்பதாக நடித்த மேரி அவரை எடின்பரோ நகருக்கு அழைத்து வந்தாள். ஊர் வந்து சேர்ந்த அதே இரவு டார்ன்லி பிரபு தங்கியிருந்த வீடு தீக்கிரையாக்கப் பெற்றது; டார்ன்லி பிரபுவின் சடலம் தோட்டத்திற்கு வெளியே தென்பட்டது. மேரி தம் கணவனைப் பழி தீர்த்துக்கொண்டார். தம் கொலைக்கு அவரே காரணம் என்பாருமுண்டு; இல்லை யென்பாருமுண்டு. எனவே, இதுநாள் வரை அப் புதிர் புரியாமலேயே நீடிக்கிறது.

## மேரியின் வீழ்ச்சி, 1567

தம் கணவரின் கொலைக்குக் காரணமாயிருந்தவர்களில் ஒரு வரான போத்வெல் பிரபுவை மேரி காதலித்து வந்தார். டார்ன்லி பிரபுவின் கொலைக்கு இரண்டு மாதங்களுக்குப் பின்னர், போத்வெல் மேரியை டன்பாருக்குக் கூட்டிச்சென்று தம் மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு, மேரியுடன் எடின்பரோ நகருக்குத் திரும்பிவந்தார். மேரியின் வீழ்ச்சிக்குப் போத்வெல் பிரபுவுடன் கொண்ட காதல் ஒரு காரணம். மேரி போத்வெல்லை 1567-ல் மணந்துகொண்டார். இருப்பினும் அவருடைய துன்பம் தீரவில்லை. வேடிக்கையான பேர்வழியாயினும், போத்வெல்

ஒழுக்கங்கெட்டவன். மேரியின் உறவினரான மோரே பிரபுவின் தலைமையில் ஸ்காட்டிய பிரபுக்கள் போத்வெல்லுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். கார்பெரிஹில் என்னுமிடத்தில் அரசியாரும் போத்வெல்லும் தோற்கடிக்கப்பெற்றனர். போத்வெல் தப்பி யோடிவிட்டான்; ஆனால் மேரி கைதாகி லாக்லெவன் கோட்டையில் சிறையிலடைக்கப் பெற்ருர். அவர் முடி துறக்க வேண்டுமெனக் கோரப்பட்டார் (1567). அவருடைய பச்சிளங்குழந்தை ஆரும் ஜேம்ஸ் என்னும் பட்டப் பெயருடன் ஸ்காட்லாந்து அரசராக முடி சூட்டப் பெற்ருர். அடுத்த ஆண்டு மேரி சிறையிலிருந்து தப்பி மீண்டுமொருமுறை அரியணையைக் கைப்பற்ற முயன்ருர். ஹாமில்ட்டன் குடும்பத்தினரும், வேறு சில நண்பர்களும் அவருடன் இணைந்துகொண்டனர். எனினும் அவர்கள் அனைவரும் லாங்க்சைட் போரில் (1568) தோற்றுப் போயினர். போர்க் களத்திலிருந்து தப்பிய மேரி, இங்கிலாந்திற்கு ஓடினர். உதவி வேண்டி எலிசபெத் அரசிக்குக் கடிதம் எழுதினர் அவர். எலிசபெத் அவருக்காகக் காவலரை அனுப்பிக் கார்லைல் என்னு மிடத்திலிருந்து யார்க்ஷயரிலிருக்கும் போல்டன் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டார். யாராலும் காப்பாற்றமுடியாதபடி அவர் சிறையிலேயே வாடித் தவித்தார்.

## (இ) கத்தோலிக்கரின் சதித்திட்டங்கள் (1568-87)

தொடக்ககாலத் தொல்லைகள் பல தீர்ந்திருந்தமையால் இப்போது எலிசபெத்தைச் சுற்றி நிலவிய சூழ்நிலை அவருக்குச் சாதகமாக இருந்தது. ஸ்காட்லாந்தில் சிறுகுழந்தையான ஆரும் ஜேம்ஸ் அரசராகிவிட்டமையாலும், அவர் பிராட்டஸ்டென்டாக வளர்ந்தமையாலும் நிலைமை சீர்திருந்தியதுபோல் தென்பட்டது. ஃபிரெஞ்சியர் ஸ்காட்டிய மேரியை ஆங்கில அரியணையில் அரசி யாக அமர்த்த விரும்புவாராயினும், அவர்களுக்குதவிட ஸ்காட் லாந்தில் நண்பர்கள் கிட்டவில்லை. இருப்பினும் ஆங்கிலக் கத்தோலிக்கர்களால் ஆபத்து விளையக்கூடுமோ என்ற அச்சம் நிலவியது. அவர்கள் எலிசபெத்தை நீக்கிவிட்டு மேரியை அரசி யாக்க விரும்பினர். அவர்களுடைய முதல் முயற்சியாக எழுந்தது தான் வடபால் கலகம் (Rising in the North). மேரி இங்கிலாந்து வந்திறங்கிய சிறிது காலத்திற்குள் இக் கலகம் மூண்டது.

### வடபால் கலகம், 1569

இங்கிலாந்தின் வடதிசையில் தென்திசையைவிடக் கத்தோ லிக்கச் சமயத்தின்பால் ஈடுபாடு கொண்டவர்கள் அதிகம். எனவே, வடதிசையிலிருந்து கலகம் மூண்டதில் பொருள் உண்டு.

எலிசபெத்தை எதிர்த்துப் படைகளைத்திரட்ட நார்த்தம்பர்லாந்து பிரபுவும், வெஸ்ட்மூர்லாந்து பிரபுவும் இசைந்தனர். நார்ஃபக் பிரபுவும், ஸ்பானிய தூதுவரும் இச் சதித் திட்டத்தில் கலந்திருந்தனர். ஸ்பெயின் அரசர் ஃபிலிப்பிற்குச் செய்தி அனுப்பி அவரின் உதவியை நாடியிருந்தார் மேரி. அத்தகைய உதவி கிட்டுமாயின் தாம் மூன்று மாதத்திற்குள் அரசியாக முடியும் என்றும், மீண்டும் இங்கிலாந்தில் கத்தோலிக்கச் சமயம் பரவும் என்றும் நம்புவதாக மேரி செய்தி அனுப்பியிருந்தார். அதிருஷ்ட வசமாக எலிசபெத்தைப்போன்றே ஃபிலிப்பும் எச்சரிக்கையான மனிதர். போப்பாண்டவரும் அவரை வேண்டி இங்கிலாந்தில் மேரியின் ஆட்சிக்கு உதவிசெய்யக் கோரினர். இவ் வேளையில் ஹாலந்துக்குச் சென்றிருந்த ஸ்பானியக் கப்பல்களைச் சூறையாடி, அவற்றின் செல்வங்களைக் கைப்பற்றியிருந்தார் எலிசபெத். இதைச் சாக்கிட்டாவது ஃபிலிப் இங்கிலாந்திற்கெதிராகப் போகக் கூடாதா என்று போப்பாண்டவர் முதல் அனைத்துக் கத்தோலிக்கரும் விரும்பினலும்கூட இங்கிலாந்துடன் நேரடி மோதலை ஃபிலிப் தவிர்க்க முயன்றார். அவர் வடபால் கத்தோலிக்கருக்கு இரகசியமாகப் பொருளுதவியையும் சலுகைகளையும் மட்டும் கொடுத்து உதவினர். இவ்வாறு அரைகுறை மனத்தோடு ஃபிலிப் தடுமாறிக்கொண்டிருந்தபோது வடதிசைக் கத்தோலிக்கர் கலகத்தில் ஈடுபட்டனர் (1569). நார்த்தம்பர்லாந்து பிரபுவும், வெஸ்ட்மூர்லாந்து பிரபுவும் டர்ஹாம் என்ற நகரைப் பிடித்துக் கொண்டனர்; அவ்வூர்த் திருச்சபைக்குச் சென்று கத்தோலிக்கச் சமய முறைப்படி தொழுகை நடத்தி, ஆங்கில வழிபாட்டு நூலையும், ஆங்கில விவிலியத்தையும் வெளிப்படையாகத் தீயிட்டுக் கொளுத்தினர். யார்க்ஷயரைச் சார்ந்த டாட்காஸ்டர் வரை அவர்கள் படை முன்னேறியது. ஆனால் டாட்காஸ்டரில் வெற்றிபெறுவோமா என்ற ஐயப்பாட்டினால் பின்வாங்கத் தொடங்கினர். படைகள் சிதறுண்டு, கலகக்காரர்களின் தலைவர்கள் ஸ்காட்லாந்துக்குத் தப்பியோடினர். ஆனால், எலிசபெத் வடபால் எழுந்த கலகத்தைக் கொடூரமாக அடக்கினர். ஒவ்வொரு கிராமத்திலும் தூக்கு மரங்களை நட்டு, அறுநூறு முதல் எழுநூறு வரை கலகக்காரர்கள் தூக்கிலிடப்பெற்றுக் கொல்லப்பட்டனர். கிராம மக்களை அச்சுறுத்திப் பாடம் புகட்டவே வடபால் கிராமங்களில் தூக்கு மரங்கள் நாட்டப்பெற்றன.

இங்கிலாந்தில் கத்தோலிக்கரது ஆட்சியை நிலைநாட்டப் போப்பாண்டவரும் முயன்றார். அக்காலத்தில் போப்பாண்டவராய் இருந்த ஐந்தாம் பயஸ் என்பார் 1570-ல் ஆணையொன்றினை வெளியிட்டு எலிசபெத் அரசியாரைச் சமய விலக்கம் செய்தார்.

ஆங்கிலக் கத்தோலிக்கர்கள் சமய நிந்தனைக்காரியான அரசியாருக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை என்றும் அறிவித்திருந்தார் போப்பாண்டவர். நிலைமை அச்சம் விளைவிக்கக் கூடியதாய் மாறியது. மேரியும் ஸ்பெயினுடன் இரகசியப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு எலிசபெத்தின் ஆட்சியைக் கைப்பற்றும் சதித்திட்டங்களைத்தொடர்ந்து செயல்படுத்த எண்ணினர். அப்போது ஃபிளாரன்ஸ் வங்கிக்காரரான ரிடோல்ஃபி என்பார் மேரியின் ஏஜென்டு; நார்ஃபக் பிரபு அவரை ஆதரித்த ஆங்கிலேயராவார். இச் சதித்திட்டத்திற்குப் போப்பாண்டவரின் ஆசி கோரி ரிடோல்ஃபி ரோமாபுரிக்குச் சென்றார். பின்னர் அவர் ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று, ஸ்பானிய கவுன்சிலரிடம் எலிசபெத்தைக் கொல்லவேண்டுமென்றும், நெதர்லாந்திலிருந்து ஆல்வா பிரபுவை இங்கிலாந்தின்மீது படையெடுக்கவேண்டுமென்றும் தூண்டினர். ஆனால், ஃபிலிப்பின் தடுமாற்றத் தயக்கத்தாலும், இச் சதித்திட்டத்தைச் செசில் கண்டுபிடித்துவிட்டார். வடபால் கலகம், அரசியாரைச் சமய விளக்கம் செய்த போப்பாண்டவரின் ஆணை, ரிடோல்ஃபியின் சதித்திட்டம் ஆகிய அனைத்தும் எலிசபெத்தின் மூன்றும் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு வந்தன. 1571ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டப்படி, இங்கிலாந்தில் போப்பாண்டவரின் ஆணையைக் கொணரும் எந்தவோர் ஆங்கிலக் குடிமகனும் பெரும் துரோகக் குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்று அறிவுறுத்தியது. பின்னர் ஸ்பானியத் தூதுவர் நாடு கடத்தப்பட்டார். நார்ஃபக் பிரபு அரசத் துரோகக் குற்றஞ் சாட்டப்பெற்றுத் தூக்கிலிடப்பட்டார். நார்ஃபக் பிரபுவைத் தூக்கிலிடும் அரச ஆணையில் எலிசபெத் கையொப்பமிடத் தயங்கியபோதும், இறுதியாக அவரைத் தூக்கிலிட்டுக் கொன்றார். பாராளுமன்றம் மேரியைச் சிரச்சேதம் செய்யக் கோரியபோது எலிசபெத் சம்மதிக்க மறுத்துவிட்டார் (1572).

ஆங்கிலக் கத்தோலிக்கர் ஸ்பெயினுடன் கூட்டுச் சேர்ந்து அரசியல் சதித்திட்டங்களில் ஈடுபட்டிருந்ததை அறிந்த செசில் ஃபிரான்ஸுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்துகொண்டார். இதனை ஃபிளாய்ஸ் உடன்படிக்கை என்பர் (1572). இதன்படி, ஸ்பெயினுக்கெதிராக நெதர்லாந்துக்கு உதவி செய்ய இங்கிலாந்து ஃபிரான்ஸுடன் இணைய வாய்ப்புக் கிட்டியது. நான்கு மாதங்களுக்குப் பின்னர் ஃபிரெஞ்சியப் பிராட்டஸ்டென்டுகளான ஹியூஜினேக்கள் படுகொலை செய்யப்பட்டபோதிலும்கூட இவ்வுறவு நீடித்தது. செயின்ட் பார்த்தலோமியோ படுகொலை என்று கூறப்படும் இச் சம்பவத்தால் ஆயிரக்கணக்கான

ஹியூஜினேக்கள் பாரிஸ் நகரத்தில் படுகொலை செய்யப்பட்டனர். கத்தோலிக்கரான ஃபிரெஞ்சிய அரசியாரின் ஆணையின்படி இது நடைபெற்றது.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் பிரிட்டிஷ் தீவுகளில் குறிப்பாக அயர்லாந்தில் ஏசு சங்கத்தினர் கத்தோலிக்கச் சமயத்தை மீண்டும் நிலைநாட்ட அரும்பாடுபட்டனர். அவர்கள் ஐரோப்பாவிலிருந்து பெரும் எண்ணிக்கையில் வந்து, அயர்லாந்தில் குடியேறி ஐரிஷ் கத்தோலிக்கரை இங்கிலாந்துக்கு எதிராகப் பொதுமக்களின் உணர்ச்சியைத் தூண்டினர். அதன் பயனாக எழுந்ததுதான் டெஸ்மாண்ட் பிரபுவின் கலகமாகும். அதற்கு வெளிப்படையாக ஆதரவுகாட்டிய போப்பாண்டவர் இத்தாலியப் படை வீரர்களை அயர்லாந்துக்கு அனுப்பினார். இரண்டாம் ஃபிலிப்பும் சில ஸ்பானியப் படை வீரர்களை அவர்களின் உதவிக்கு அனுப்பினார். ஆனால், ஐரிஷ் கலகம் அடக்கப்பட்டதுடன் டெஸ்மாண்டும் கொல்லப்பட்டார்.

### இங்கிலாந்தில் ஏசு சங்கத்தார்

இத்தருணத்தில் இங்கிலாந்திலிருந்த ஏசு சங்கத்தினர் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பார்சன்ஸ் என்பாரும், காம்பியன் என்பாரும் அவர்களின் தலைவர்கள். 1580ஆம் ஆண்டில் அவர்கள் இங்கிலாந்து வந்துற்றனர். பாராளுமன்றம் அவர்களின் நடவடிக்கைகளைக் குறித்துப் பேரச்சம்கொண்டு, அந் நடவடிக்கைகளை ஒடுக்கச் சட்டமொன்றை இயற்றியது. அதன்படி, இங்கிலாந்துக் குடிமக்களை ரோமானியக் கத்தோலிக்கச் சமயத்திற்கு மாற்ற நினைப்பவர்கள் துரோகக் குற்றம் புரிந்தவர்களாகக் கருதப்படுவர் என்றும், கத்தோலிக்கச் சமய முறைப்படியான தொழுகையில் பங்குகொள்வோர் நூறு மார்க் அபராதத்தையும் ஓராண்டு சிறைவாசத்தையும் அனுபவிக்க வேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. ஆங்கிலத் திருச்சபை வழிபாட்டில் பங்குகொள்ள மறுக்கும் கத்தோலிக்கர்மீது விதிக்கப்பட்டிருந்த அபராதத் தொகை இருபது பவுனாக உயர்த்தப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்னர் காம்பியன் பெர்க்ஷயரில் பிடிக்கப்பட்டு, அரசியாரின் எதிரிகளுடன் சதித்திட்டங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாகி 1581-ல் உயிர் துறந்தார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் (1583) செஸ்ஷயரைச் சார்ந்த துரோக் மார்ட்டன் என்னும் கத்தோலிக்கர் ஒருவர், மேரியை அரசியாக்கும் நோக்குடன் ஸ்பானியரைப் படையெடுக்கத் தூண்டின சதித்திட்டத்தில் ஈடுபட்டிருந்தார். பார்சன்ஸ் பாதிரியாரும் இச் சதித்திட்டத்தில் பங்கு பெற்றிருந்தார்.

### கத்தோலிக்கர் ஒறுக்கப்படல்

எட்மண்ட் காம்பியன் நல்லவர்; நேர்மையானவர். கத்தோலிக்கர் என்ற காரணத்திற்காக உயிர்த் தியாகம் செய்த முதற் தியாகி அவரே; ஏசு சங்கத்தைச் சார்ந்தவர். அவருடைய சிரச்சேதம் ஒரு சோகக் கதையாகும். சமயத்தின்மீதிருந்த பேரார்வத்தின் காரணமாக அவர் போப்பாண்டவரின் ஏஜன்டானார். எனினும், எலிசபெத்தின் குடிமக்கள் அவருக்கு விசுவாசம் காட்டக்கூடாதென்னும் கருத்தினை அவர் மனதார விரும்பவில்லை. அயர்லாந்துக்குப் படைகளை அனுப்பிக் கத்தோலிக்கச் சமயத்தைக் காக்க விரும்பிய போப்பாண்டவரின் ஏஜன்டுகளை அடக்கி ஒடுக்குவது தம் கடமை என எலிசபெத் எண்ணியதில் வியப்பொன்றுமில்லை. அயர்லாந்தும் எலிசபெத்தின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தது. இதிலிருந்து கத்தோலிக்கரை ஒறுக்கும் கொள்கையை எலிசபெத் தம் ஆட்சிக்காலத்தின் இறுதிவரை தொடர்ந்து கடைப்பிடித்தார். டவர் சிறையில் கத்தோலிக்கரை அடைத்துச் சித்திரவதை செய்து, கைதிகளுக்கு ஆதரவு காட்டியவர்களின் பெயர்களை அறிந்துகொள்ள முயன்றனர். சூழ்நிலையைச் சாக்குக் காட்டி அரசாங்கம் இத்தகைய கொடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நியாயம் இருப்பதாக எண்ணியது. விசுவாசமுள்ள கத்தோலிக்கன் ஒருவன் எலிசபெத் அரசியாரின் விசுவாசமுள்ள குடிமகனுக இருக்க முடியாது என்று நம்பினர். இதன் பயனுகக் கத்தோலிக்கர் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவித்தனர். கொள்கைக்காக ஒறுக்கப்பட்ட கத்தோலிக்கர்கள், அபராதம் கட்டி வறியவர்களாகி, எந்தச் சமயத்திலும் கைப்பற்றப்பட்டுச் சித்திரவதைக்காளாகி, துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சாவையும் எதிர்நோக்க வேண்டியவராயினர். உண்மையென்னவென்றுல் அவர்கள் அத்தகைய குற்றத்தைச் செய்ய ஒரு போதும் விரும்பவில்லை. ஆனல், கொலை செய்யப்பட்ட கத்தோலிக்கர்கள் துரோகக் குற்றத்திற்காக ஒறுக்கப்பட்டனரேயன்றி, தாம் போற்றிய சமயத்திற்காகவன்று.

### ஆரஞ்சு வில்லியம் கொலையுறல், 1584

1584ஆம் ஆண்டில் வெளிநாட்டில் நடைபெற்ற சம்பவம் ஒன்று செசில், வால்சிங்ஹாம் ஆகியோரின் அச்சத்தைப் பெருக்கியது. ஸ்பானிய அரசரான இரண்டாம் ஃபிலிப்பின் ஆணைப்படி, நெதர்லாந்து கலகக்காரர்களின் தலைவரான ஆரஞ்சு வில்லியம் என்பார் கொலை செய்யப்பட்டார். ஆரஞ்சு வில்லியம் கத்தோலிக்கச் சமய எதிரி. எனவே, அடுத்து எலிசபெத் அரசியாருக்கும் அத்தகைய கதி நேரிடுமோ என ஆங்கிலேயர் சிந்தித்

தனர். பிராட்டஸ்டென்ட் மக்களைக்கொண்ட தேசிய நிறுவனம் ஒன்று நிலைநாட்டப்பெற்றது. அரசியாரின் உயிரை எப்படியாவது காப்பது கடமை என்று அந் நிறுவனத்தினர் கங்கணம் கட்டிக்கொண்டனர். 1585ஆம் ஆண்டில் இந்தத் தேசிய நிறுவனத்தைப் பாராளுமன்றமே அங்கீரித்து, சட்டப்படியான இயக்கம் என்று முத்திரை தீட்டியது. மற்றொரு சட்டம் இயற்றி ஏசு சங்கத்தவர் நாடு கடத்தப்பட்டனர். மீறினவர் தூக்கிலிடப் பட்டனர்; ஏசு சங்கத்தைச் சார்ந்தவர்களுக்குப் புகலிடம் கொடுப் பதும் பெரும் குற்றமாக்கப்பட்டது.

சிறையில் வாடிய ஸ்காட்டிய மேரி ராணியாரும், அவருடைய ஆதரவாளர்களும் இன்னும் ஸ்பெயின் அரசர் ஃபிலிப்பையே நம்பி இருந்தனர். ஆனால், ஃபிலிப்போ மேரிக்கு உதவி செய்வது குறித்து முடிவு செய்யாமலேயே இருந்தார். எலிசபெத்தோ ஃபிலிப்போ ஒருபோதும் போர் செய்ய விரும்பவில்லை. எனினும் போர் அவர்களை விட்டபாடில்லை. 1585-ல் போர் மூண்டு விடுமோ என்ற அச்சம் நிலவியது. ஆங்கில மாலுமியான டிரேக் ஸ்பெயினுக்குச் சொந்தமான மேற்கிந்தியத் தீவுகளைச் சூறையாடினர். ஸ்பானியத் துறைமுகங்களில் ஆங்கிலக் கப்பல் களைக் கைப்பற்றிக்கொண்டதை அடுத்து டிரேக் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். டச்சுக் கலகக்காரர்களுக்கு உதவவேண்டுமென்று வால்சிங்ஹாம் விரும்பியதுபோன்று நாளாக நாளாக எலிசபெத்தும் விரும்பினர். 1585ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கும் டச்சுக் கலகக்காரர்களுக்கும் இடையே உடன் படிக்கை ஒன்று கையெழுத்தாயிற்று. அதன்படி, டச்சுக்காரர் களுக்கு உதவிடவேண்டி லீசெஸ்டர் பிரபுவின் தலைமையில் 6000 வீரர்களைக்கொண்ட படையொன்று ஹாலந்தில் இறங்கியது. எலிசபெத்தைக் கலந்தாலோசிக்காமலேயே, அடுத்த ஆண்டில் லீசெஸ்டர் பிரபு தம்மை நெதர்லாந்தின் கவர்னர் ஜெனரலென அறிவித்துக்கொண்டார். அரசியார் வெகுண்டபோதிலும், அவ் விருதினைச் சூட்டிக்கொள்ள அனுமதித்தார். எனினும், புதிய கவர்னர் ஜெனரலான லீசெஸ்டர் பிரபு பல தொல்லைகளுக்கு ஆளானர். நெதர்லாந்தில் இருந்த பல்வேறு கட்சிகளினிடையே மூண்ட முடிவற்ற சச்சரவுகளில் அவர் மாட்டிக்கொண்டார். ஸ்பெயினுடன் வாணிகம் செய்யக் கூடாதென ஆணையிட்டார் அவர். ஆனால், வாணிகம் நசிவுற்றதால் தொல்லைக்காளான வர்கள் ஸ்பானியர் மட்டுமல்லர், டச்சியரும் கூடத்தான். நெதர் லாந்து துறைமுகங்களின் செல்வ வளம் கடல்கடந்து நடத்தப்படும் வாணிகத்தைச் சார்ந்திருந்தது. லீசெஸ்டருக்கு எதிராகக் கிளர்ச் சிகள் மூண்டபோது செய்வதறியாது, அவர் இங்கிலாந்து

திரும்பினர். அவருடைய உடல்நலமும் குன்றியிருந்தது. இங்கிலாந்து திரும்பிய லீசெஸ்டர் சிறிது காலத்திற்குள் காலமானர். நெதர்லாந்து படையெடுப்பால் இங்கிலாந்தின் வருமானம் குறைந்தது ஒன்றுதான் மிச்சம்.

**பாபிங்டன் சதித் திட்டம், 1586**

எலிசபெத்தைக் கொன்றுவிட்டு மேரியை அரியணையில் அமர்த்த மேரியின் ஆதரவாளர்கள் அரும்பாடுபட்டனர். ஆதரவாளர்களில் பெரும்பாலோர் கத்தோலிக்க இளைஞர்கள்; பெருங்குடியில் பிறந்தவர்கள். அந்தோணி பாபிங்டன் என்பானின் தலைமையில் சதித்திட்டத்தில் இறங்கினர். மேரிக்கும் சதிகாரர்களுக்குமிடையே நடந்த கடிதப் போக்குவரத்துகளை இரகசியமாகக் கண்டறிந்தார் வால்சிங்ஹாம். உரிய தருணத்தில் அக் கடிதப் பிரதிகளைச் சான்றாகக் காட்டி, பாபிங்டனையும் அவனுடைய ஆதரவாளர்களையும் வால்சிங்ஹாம் சிறைப்படுத்தினர்.

**மேரி விசாரணைக்காளாதல், 1586**

சதிக்குற்றம் சாட்டப்பட்ட பதின்மூன்று சதிகாரர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். பார்த்திங்ஹே கோட்டையில் விசேஷ நீதிமன்றம் ஒன்றினல் மேரி விசாரிக்கப்பட்டாள். அந் நீதிமன்றத்திற்குத் தம்மை விசாரிக்கும் உரிமை கிடையாதென மேரி வாதிட்டாள்; தாம் நிரபராதி என்றும் கூறிக்கொண்டாள். 1585ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டப்படி அவள் விசாரிக்கப்பட்டு, துரோகக்குற்றம் சுமத்தப்பட்டாள். எலிசபெத்தின் உயிரைக் காப்பது கடமையெனக் கொண்ட பாராளுமன்றம், மேரியைச் சிரச்சேதம்செய்வது ஒன்றே பரிகாரம் எனக்கருதியது. எலிசபெத் தயங்கினர்; வேறு யாதேனும் வழியில் தம்மைக் காப்பாற்ற முடியுமா என்று அவர் பாராளுமன்றத்திற்குச் செய்தி அனுப்பினர். இரண்டு மாத காலத் தயக்கத்திற்குப் பின்னர் எலிசபெத் மேரி ராணியைச் சிரச்சேதம் செய்யும் ஆணையில் கையெழுத்திட்டார். இருபதாண்டுக் கால சிறை வாசத்திற்குப் பிறகு 1587ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் மேரி சிரச்சேதம் செய்யப்பட்டாள். மேரியின் கொலைக்குத் தாம் காரணமல்லவென்று எலிசபெத் கூறிக்கொண்டார்.

## (ஈ) வணிகர்களும் மாலுமிகளும்

**கீழ்த்திசை நாடுகளுடன் வாணிகம்**

போர்த்துகீசியர் இந்தியாவிற்கு முதன்முதலாகக் கடல்வழி கண்டுபிடித்தனர். ஸ்பானியர் அமெரிக்காவில் தம் பேரரசின்

அதிகாரத்தை நிலைநாட்டியிருந்தனர். இவ்விரண்டும் எலிசபெத் அரசாட்சியின்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகளாகும். உலக வாணிகத்தில் ஸ்பானியரும் போர்த்துகீசியரும் முற்றுரிமை பெற்றவர்கள்போல் தென்பட்டார்கள். ஆங்கில வணிகர்களும், மாலுமிகளும் ஸ்பானிய-போர்த்துகீசிய முற்றுரிமைக் கெதிராக எழுந்தனர். சமயச் சீர்திருத்த இயக்கம் அவர்களுடைய உணர்ச்சிக்கு மேலும் ஆதரவளித்தது. சமயச் சச்சரவுகளுடன் இக்காலத்தில் வாணிபத்துறை போட்டா போட்டியும் சேர்ந்து கொண்டன. தம் ஆட்சிப்பகுதிகளில் ஆங்கில மாலுமிகள் செல்லக்கூடாதென ஸ்பானியர் பன்முறை தடுத்திருந்தனர்; ஒரு சில வேளைகளில் ஆங்கில மாலுமிகள் பிடிபட்டுச் சமய நிந்தனையாளர் என்றும், கடற் கொள்ளைக்காரர்களென்றும் கருதப் பட்டனர். மேற்கூறிய காரணங்களினால் எலிசபெத்தின் ஆட்சிக் காலத்தில் ஸ்பானியருக் கெதிராக எழுந்த சச்சரவுகள் தேசிய உணர்வையும் கிளரச்செய்தன.

அந்நியருக்குச் சொந்தமில்லாத வழியொன்றினைக் கண்டறிந்து அதன்மூலம் கீழ்த்திசை நாடுகளுடன் வாணிபம் செய்யவேண்டும். இல்லையேல் ஸ்பானியருக்குச் சொந்தமான வழிகளிலும் சென்று அவசியமேற்படின் அவர்களைத் தாக்கி வெற்றி பெற்று வாணிபத்தில் தமக்கென ஒரு முறையை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். இவ்விரு வழிகள்தாம் ஆங்கில மாலுமிகளின் முன்னிருந்தன. செசில் முந்தைய வழியைப் பின்பற்றுவதே சிறந்ததெனக் கருதினர். அக் கருத்தைக் கொண்ட அவர் பிரான்சிஸ் டிரேக், ஜான் ஹாக்கின்ஸ் போன்றவர்களின் கொள்ளையை வெறுத்தார். அத்தகைய கொள்ளைகள் நெறிமுறை தவறியவை என்று கருதிய அவர், அது நீடித்தால் ஸ்பெயினுடன் போர்மூளவும் வழிபிறக்கும் என்று எச்சரித்தார். அவர் சோதிடம் பின்னால் பலித்தது என்னவோ உண்மைதான்! செசிலின் அமைதி வழியைப் பின்பற்றியே ஆங்கிலேயர் ஐரோப்பாவில் தம் கடல் வழி வாணிபத்தைப் பெருக்கினர். பால்டிக் கடற்கரைப்பகுதி, ஜெர்மனி, மத்தியதரைக் கடல்பகுதி, லெவாண்ட் சந்தைகள் போன்ற புதிய பகுதிகளில் ஆங்கிலேய மாலுமிகள் தம் வாணிபத்தைப் பெருக்கி நிலைநாட்டினர். கீழ்த்திசை நாடுகள், பார்பரி, வெனிஸ் போன்ற பகுதிகளுக்கும் வாணிபம் விரிந்து, பெருகலாயிற்று.

1578ஆம் ஆண்டில் வில்லியம் ஹார்போர்ன் என்பவரைக் கான்ஸ்டான்டிநோபிலுக்கு அனுப்பிய ஆங்கில வணிகர்கள், துருக்கிய சுல்தானுடன் அவரைப் பேச்சு வார்த்தைகள் மூலம்

அங்கு வாணிபச் சலுகைகளைப்பெற விழைந்தனர். சுல்தானின் அனுமதியின் பேரில் துருக்கியக் கம்பெனி என்ற பெயரில் வாணிகக்கழகம் ஒன்றை ஆங்கில வணிகர்கள் நிலைநாட்டினர் (1581). அக்கழகம் வளம்மிக்க வாணிபத்தைச் செய்து வந்தது. இங்கு ஸ்பானியர் ஆங்கிலேயருக்குத் தொல்லைகளைத் தரத் தவற வில்லை. ஆங்கிலக் கப்பல்கள் ஜிப்ரால்டர் நீர்ச்சந்தியில் சென்ற போது அவற்றைத் தடுக்க ஸ்பானியர் முயன்றனர். துருக்கியக் கம்பெனியும், வெனிஸ் கம்பெனியும் இணைந்து லெவாண்ட் கம்பெனி உருவாயிற்று. இக் கம்பெனி ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் வெற்றிகரமாக வாணிபம் செய்தது.

செபாஸ்டியன் காபட் என்பார் ஆர்க்டிக் பெருங்கடல் வழியாகக் கீழ்த்திசை நாடுகளுக்கு வழி கண்டுபிடிக்க முயன்றார். அவரைப் பின்பற்றித்தான் சர் ஹியூ வில்லியும், ரிச்சர்டு சான் சலரும் வட ரஷிய அரசுக்குக் கடல்வழி கண்டனர் (1553). ரஷிய நாட்டின் கடுங்குளிருக்கு இரையாகி வில்லியும் அவருடைய துணைவர்களும் மாண்டு மடிந்தனர். அதிருஷ்டவசமாகச் சான்சலர் ஆர்க்கேஞ்சல் துறைமுகத்தைச் சென்றடைந்தார். அங்கிருந்து அவர் மாஸ்கோ சென்றார். அவருடைய பயணத்தின் விளைவாகத் தான் இங்கிலாந்துக்கும் ரஷியாவுக்குமிடையே வாணிகம் தொடங்கலாயிற்று. மாஸ்கோ கம்பெனியென்று ஒன்றும் (1553-55 ஆம் ஆண்டுகளில்) நிலைநாட்டப் பெற்றது. இக் கம்பெனி பல்லாண்டுகள் தொடர்ந்து வாணிகம் செய்து வந்தது. இக் கம்பெனியின் ஆர்வத்தின் விளைவாகத்தான் அந்தோனி ஜெங்கின் சன் என்பார் வால்கா ஆற்றின் வழியாகச் சென்று காஸ்பியன் கடலைக் கண்டறிந்தார். அவர் பொக்காரா என்னும் நகரம் வரை சென்று மத்திய ஆசியாவில் நிலவிய சூழ்நிலைகளின் விளை வாகச் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் தரைவழியைக் காண முடியாது என்பதை அறிந்து வந்தார். பின்னர் அவர் மாஸ்கோ திரும்பினார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் பயணம் செய்து பாரசீகம்வரை சென்றார். ஆங்கில–பாரசீக வாணிபத் தொடர்பு இப்போதுதான் ஏற்பட்டது. அடுத்த இருபதாண்டுகள் இத் தொடர்பு நீடித்துப் பின்னர்க் கைவிடப்பட்டது. துருக்கியர் பாரசீகத்தின்மீது படையெடுத்ததே இம் முயற்சி கைவிடப்படக் காரணமாகும். இதைத்தான் வடகிழக்குப் பயணவழி என்பர்.

அதைப்போன்றே வடமேற்குப் பயணவழியொன்றையும் கண்டுபிடிக்க ஆங்கிலேயர் பெரிதும் முயன்றனர். மார்ட்டின் ஃப்ரோபிஷர் (Martin Frobisher) இப் பயணவழியைக் காணச் சென்று இங்கிலாந்தில் பெரும் பரபரப்பை மூட்டினார். வழி

யொன்றினைக் கண்டதோடன்றி அவர் தங்கக்கட்டிகள் கலந்த தாதுப்பொருள்களையும் கொண்டு வந்ததாகக் கருதப்பட்டது. அதன் பயனாகக் காத்தே கம்பெனி என்று ஒன்று நிறுவப்பெற்றது. இரண்டு பயணங்கள் சென்றுவந்த பிறகுதான் புதிய கடல்வழி யொன்றினைக் கண்டுபிடிக்க முடியாதென்பதும், தங்கக்கட்டிகள் கிடைக்கவில்லையென்பதும் புலனாயிற்று. பத்தாண்டுகளுக்குப் பின்னர்க் காப்டன் ஜான் டேவிஸ் என்பார் இவ் வழியைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து பாபின்லாந்துக்கும கிரீன் லாந்துக்கும் இடையே இருந்த பனிக்கட்டிகளைக் கண்டறிந்தார் (1585-87). இப் பயணங்களால் பலன்கள் கிட்டாவிடினும், அவை ஆங்கிலேயரின் கப்பற் பயணத் திறனை வளர்க்கப் பெரிதும் உதவின.

கடல்வழி காணும் முயற்சியில் ஈடுபட்டு வடகிழக்கு-வடமேற்கு வழிகளைக் கண்ட ஆங்கில மாலுமிகளின் முயற்சிகள் எதிர் பார்த்தபடி பலன் கொடுக்கவில்லை. கீழ்த்திசை நாடுகளுக்கு நன்னம்பிக்கை முனை வழியாக உண்மையானதொரு வழியைக் கண்டுபிடித்ததும் எலிசபெத் அரசியாரின் ஆட்சிக்காலத்தில் தான். ஸ்பானியர் குறுக்கீடு இருக்குமோ என்ற ஐயப்பாடு எழுந்தது. 1582ஆம் ஆண்டில் எட்வர்டு ஃபென்டன் (Edward Fenton) என்பார் கிழக்கு இந்தியப் பகுதிகளுக்குச் சென்றபோது இங்கிலாந்து மாலுமிகள் ஸ்பானியரின் சொத்துகளைக் கொள்ளை யடிக்கக் கூடாதென அவருக்குக் கூறப்பட்டிருந்தது. எனினும், ஃபென்டனை ஸ்பானியர் தாக்கியதால், இப் பயணம் கைவிடப் பட்டது.

பத்தாண்டுகளுக்குப் பின்னர் சூழ்நிலை இங்கிலாந்திற்குச் சாதகமாயிருந்தது. இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் போர் மூண்டிருந்தது. ஆங்கிலேயர் ஸ்பானிய-போர்த்துகீசியக் கப்பல் களைக் கீழ்த்திசை நாடுகளில் சூறையிட்டுப் பெருஞ் செல்வத்தைக் கவர்ந்தனர் ஜார்ஜ் ரேமாண்ட், ஜேம்ஸ் லங்காஸ்டர் எனனும் இரு ஆங்கிலக் காப்டன்கள் 1591-ல் கீழ்த்திசை நாடுகளுக்குக் கடற்பயணம் செய்தனர். ரேமாண்டின் கப்பல் புயலில் சிக்கி அலைவருடன் மூழ்கிப்போனபோதிலும், லங்காஸ்டர் கிழக்கு இந்தியப் பகுதிகளைச் சென்றடைந்தார். அங்கு அவர் இரண்டு போர்த்துகீசியக் கப்பல்களைக் கைப்பற்றியதுடன், இலங்கைக்கும் சென்றுவந்தார். இக் கப்பற்பயணம் பல தொல்லைகளுக்கு இலக்கா கியது. உயிருடன் இருந்த மாலுமிகள் கலகம் செய்து கப்பலையே பிடித்துக்கொண்டனர். லங்காஸ்டர் ஃபிரஞ்சியக் கப்பல் ஒன்றி லேறி வீடு திரும்பினார் (1594). எனினும், கீழ்த்திசை, நாடுகளைக்

கண்டறியும் முயற்சி கைவிடப்படவில்லை. அதன் பயனாக நிலை நாட்டப்பட்டதுதான் கிழக்கிந்தியக் கம்பெனியாகும் (1600 ஆம் ஆண்டில்). மீண்டுமொருமுறை லங்காஸ்டர் அடுத்த ஆண்டில் கீழ்த்திசை நாடுகளுக்குப் பயணமானார். இம் முறை அவருடைய பயணம் மாபெரும் வெற்றியைக் கொடுத்தது. ஜாவாவிலிருந்து அவர் ஏராளமான மிளகு, வாசனைத் திரவியங்கள் முதலானவற்றுடன் நாடு திரும்பினார். கிழக்கிந்தியக் கம்பெனியே இத்தகைய பயன்மிக்க பயணத்தை மேற்கொள்ளக் காரணமாய் இருந்தது.

## குடியேற்ற நாடுகள்

சர் ஹம்ப்ரி கில்பர்ட் என்ற டெவன்ஷயர் பெரியார் வடமேற்குக் கடல் வழியைக் காணும் முயற்சியில் ஈடுபட்ட முதல் பயணியாவார். அவர் சர் வால்டர் ராலே என்பாரின் ஒன்றுவிட்ட சகோதரர். ஆனால் ஃப்ரோபிஷரின் முயற்சி தோல்வியுறவே கில்பர்ட் தம் கவனத்தை வேறு திசைக்குத் திருப்பினார். வட அமெரிக்காவைக் காணும் முயற்சிகூடப் பயனளிக்கக்கூடும் என்று முதலில் அறிந்தவரும் அவரேதாம். அரசியாரின் அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கில்பர்ட் பண்பாடறியாக் காட்டுமிராண்டிகளின் நாடுகளைக் கண்டறிய அனுப்பப்பட்டார் (1578). அதே ஆண்டில் பதினொரு கப்பல்களுடன் அவர் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு அடுத்தாண்டில் எதையும் கணடறியாது திரும்பினார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அவர் ஐந்து கப்பல்களுடன் மீண்டும் கடற் பயணத்தை மேற்கொண்டார். இம்முறை அவர் நியூபௌண்ட்லாந்து தீவில் இறங்கினார். அந்தத் தீவை அரசியாரின் பெயரில் உரிமை கொண்டாடினார் (1583). ஆனால், வரும்வழியில் அவருடைய கப்பல் பயணிகள் அனைவருடன் மூழ்கிப்போய்விட்டது. அதைப் பின்தொடர்ந்து வந்த பிறிதொரு கப்பலின் மாலுமி ஒருவன் கில்பர்ட்டுக்கு ஏற்பட்ட கதியைக் கூறினான்.

கில்பர்ட் காலமான இரண்டாண்டுகளுக்குப்பின், சர் வால்ட்டர் ராலே என்பார் அரசியாரின் அனுமதியைப் பெற்று அமெரிக்காவை நோக்கிப் பிறிதொரு கடற் பயணத்தை மேற்கொண்டார். நேரிடையாக சர் வால்ட்டர் ராலே அப் பயணத்தில் பங்குகொள்ள அனுமதி கொடுக்க அரசியார் மறுத்தபோது, சர் ரிச்சர்டு கிரான்வில் என்பாரின் தலைமையில் நூறு மாலுமிகளுடன் அப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. வட கரோலினாவுக்கு அடுத்திருந்த ரோனுக் (Roanoke) என்னும் தீவில் ஆங்கிலேயர் தம் முதற் குடியேற்றத்தை அமைத்தனர். அக் குடியேற்றப்

பகுதியை அரசியாரைப் போற்றும் வகையாக வர்ஜீனியா என்று அழைத்தார் (Virgin—கன்னி—அரசி திருமணம் செய்துகொள்ளாமல் கன்னியாகவே இருந்தார்). எனினும், அக் குடியேற்றம் வெற்றி பெறவில்லை. சர் ஃபிரான்சிஸ் டிரேக் அதனைச் சிறு பிள்ளைக் குடியேற்றம் எனக் கூறினர். ஸ்பானியக் குடியேற்றங்களைக் கொள்ளையடித்து அவரும் நாடு திரும்பும்போது அக் குடியேற்றத்தில் பங்குகொண்டிருந்த அனைவரையும் அவர்களின் வேண்டுகோளின்படி திரும்ப அழைத்துக்கொண்டு நாடு சேர்ந்தார். அடுத்தாண்டும் முயற்சி செய்து ராலே 160 குடியேற்றக்காரர்களை அனுப்பி வைத்தார். அவர்களின் கதி என்னவாயிற்று என்பது புரியாத புதிராகப் போயிற்று. அடுத்தமுறை ஆங்கிலக் கப்பலொன்று அத் தீவினைச் சென்றடைந்தபோது அக்குடியேற்றப் பகுதியில் மக்கள் நடமாட்டமே தென்படவில்லை. அங்குக் குடியேறியவர்கள் எங்குச் சென்றூர்கள்; எப்படி மறைந்தார்கள் என்பது குறித்து விவரம் கிட்டவில்லை. அவர்களை ஒருவேளை சிவப்பிந்தியர்கள் கொன்றிருக்கக்கூடும். கடல் கடந்து குடியேற்றத்தை நிலைநாட்ட ஆங்கிலேயர் செய்த முதல் முயற்சி இப்படியாக முடிவுற்றது.

## கடற்கொள்ளையும் போரும்

மேரியின் ஆட்சிக்காலத்திலேயே மேற்கு ஆப்பிரிக்காவிற்கும் ஆங்கிலேயர் கடற்பயணம் செய்யத் தொடங்கி இருந்தனர். தாமஸ் விண்ட்ஹாம் (Thomas Wyndham) என்பாரும், ஜான் லாக் என்பாரும் (John Lok) கினிக் கடற்கரைக்குப் பன்முறை பயணம் செய்து வந்தனர். போர்த்துக்கீசிய அரசாங்கம் அவர்களுடைய பயணத்தை எதிர்த்தபோதிலும் அப் பயணங்கள் நடைபெற்று வந்தன.

எலிசபெத் அரசியாரின் ஆட்சியின்போது போர்த்துகீசியருடன் மீண்டுமொருமுறை குறுக்கீடு ஏற்பட்டது. இம்முறை அக் குறுக்கீட்டிற்குக் காரணமாய் இருந்தவரின் பெயர் ஜான் ஹாக்கின்ஸ் என்பதாகும். கினிக் கடற்கரையில் இறங்கிய ஜான் ஹாக்கின்ஸ், 300 நீக்ரோக்களைக் கைப்பற்றினர். நீக்ரோக்களை மேற்கு இந்தியத் தீவுகளில் விற்க வாய்ப்புண்டு என்று அவருக்கு யாரோ கூறியிருந்தனர். ஹாக்கின்ஸ் கைப்பற்றிய நீக்ரோக்களை ஸ்பானியர் தம் அமெரிக்கக் குடியேற்றங்களில் பணிபுரிய ஆவலுடன் விலைகொடுத்து வாங்கினர்கள். என்ன கொடுமை! ஆனல், தம் குடியேற்றப் பகுதிகளில் அன்னிய நாடுகளுடன் வாணிபம் செய்வதை ஸ்பானிய அரசாங்கம் தடைசெய்திருந்தது.

எனவே, நீக்ரோக்களை விலைக்கு வாங்கியதை அரசாங்கம் கண்டு அல்லலுற்றது.

1562-லும், 1564-லுமாக இருமுறை ஹாக்கின்ஸ் அடிமை வாணிகத்தை (நீக்ரோக்களை வறபது அடிமை வாணிபம் எனப் பட்டது) மேற்கொண்டு வெற்றி கண்டார். ஆனல், மூன்றும் முறை அவருக்குப் பெரு நட்டம் ஏற்பட்டது. ஆப்பிரிக்கா சென்று நீக்ரோக்களை விலைக்கு வாங்கி அவர்களை மேற்கு இந்திய தீவுகளில் விற்றுவிட்டு நாடு திரும்ப ஆயத்தமானர் ஹாக்கின்ஸ். அவருடன் அவருடைய உறவினரான ஃபிரான்சிஸ் டிரேக்கும் உடன் இருந்தார். சூறவளி ஒன்றுக்கு இரையாக அவருடைய ஆறு கப்பல்களும் மெகசிகோ கடற்கரைகது அடித்துத் தள்ளப்பட்டன சான் ஜுவான் டி உள்ளோவா என்ற ஸ்பானியத் துறைமுகததில் தஞ்சம் புகுந்தார் ஹாக்கின்ஸ். தஞ்சம் புகுந்த சிறு நேரத் திற்குள் பதின்மூன்று ஸ்பானிய கப்பல்களும் வந்துசேர்ந்தன. அவர் அக் கப்பல்களுக்கு இடமளித்தார். ஆறு நாள்களுக்குப் பின்னர் ஸ்பானியப் படைவீரர்கள ஹாக்கின்ஸைத் தாக்கி நான்கு கப்பல்களைப் பிடித்துக்கொண்டனர். எஞ்சியிருந்த கப்பல் ஒன்றில் ஹாக்கின்ஸும் மற்றும் 200 மாலுமிகளும் உயிர் தப்பினர். மற்றொரு கப்பலில் டிரேக்கும் தப்பினர். கப்பலில் போதிய இடம் இன்மையால் நூறு மாலுமிகளை மெக்சிகோ கடற்கரையில் விட்டுவர வேண்டியவரானர் ஹாக்கின்ஸ். அவர்களை ஸ்பானியர் கொன்று தீர்த்தனர்.

இந்தச் சம்பவத்தால் ஃபிரான்ஸிஸ் டிரேக் பெரிதும் பாதிக்கப் பட்டார். ஸ்பானிய முறைகளை வெறுத்தார் அவர். ஸ்பானியருடன் வாணிபம் செய்வது தவறு என்றும் அவர்களுடன் போர் செய்வதே முறை என்றும் கருதினர் டிரேக். அக்காலத்தில் ஒரு நாட்டின் அரசாங்கத்தைக் கலந்துகொள்ளாமலேயே தனிப்பட்ட வர்கள் பிறிதொரு நாட்டுக் குடிமக்களுடன் போரிடும் முறை செயல்பட்டு வந்தது. டிரேக் தனிப்பட்டவராகவே வாணிபத்தில் ஈடுபட்டிருந்தார். இதைப் போன்று ஐரோப்பியக் கடல் பகுதி களிலும் தனிப்பட்ட வணிகர்கள் அக் காலத்தில் இருந்தனர். எனினும், டிரேக் இத்தகைய வாணிபத்தால் பெரும்செலவந்தராகி வெற்றி பெற்றிருந்தார்.

1572ஆம் ஆண்டில் டிரேக் இரு கப்பல்களுடன் பிளிமத்தி லிருந்து புறப்பட்டுப் பனமா வளைகுடாவிற்குச் சென்றார். அங்கு அவர் நோம்ப்ரி-டி-டயோஸ் என்னுமிடத்தில் இறங்கி, அங்கு வாழ்ந்த நாட்டுக் குடிகளுடன் நட்பு கொண்டார். அவர்

ளுடைய உதவியுடன் குன்றுகளைக் கடந்து பசிபிக் பெருங்கடலி லிருந்து அட்லான்டிக் பெருங்கடல் வரை பனமா பூசந்தியைக் கடந்து வந்தார். நாடு திரும்பும்போது ஆங்கிலேயர் வெள்ளிக் கட்டிகளைக் கப்பல்கள் சுமக்கும்வரை கொண்டுவந்ததாகக் கூறுகின்றனர். இப் பயணத்தின்போதுதான் டிரேக் ஒரே சமயத்தில் அட்லான்டிக்-பசிபிக் பெருங்கடல்களைக் கண்டார். மரமேறிய டிரேக் இரு பெருங்கடல்களைக் கண்டு வியப்புற்றார்.

### உலகைச் சுற்றி டிரேக்கின் கடற்பயணம், 1577-80

1577ஆம் ஆண்டில் டிரேக் பிளிமத்திலிருந்து புறப்பட்டுத் தம் உலகப் பயணத்தை மேற்கொண்டார். அரசியாருக்கும் இதில் பங்கிருந்தது. எனினும், எலிசபெத் அதை வெளிக்குக் காட்ட வில்லை. அவர் பிளிமத்திலிருந்து தென் அமெரிக்கா சென்று மகெல்லன் கடற்காலின் வழியாகப் பசிபிக் பெருங் கடற்பக்கம் சென்றார். தம்முடைய ஐந்து கப்பல்களில் நான்கினை இழந்து விட்டு, எஞ்சிய கப்பலுடன் அவர் சிலி கடற்கரைக்குப் பயண மானார். அங்கு முக்கியமான ஸ்பானியத் துறைமுகங்களைச் சூறை யாடினார். லிமா, வால்பரைசோ போன்ற நகரங்கள் சூறையாடப் பெற்றன. தங்கத்தையும், விலையுயர்ந்த ரத்தினங்களையும் சுமந்து கொண்டு அவருடைய கப்பல் வடதிசை நோக்கிப் பயணமாயிற்று. குளிர்காலத்தில் நியூ ஆல்பியன் என்ற நிலப் பகுதியில் தங்கினார். அப் பகுதியைத்தான் தற்போது கலிஃபோர்னியா என்பர். அங்கிருந்து வசந்த காலத்தில் புறப்பட்டுப் பசிபிக் பெருங்கடல் வழியாகக் கிழக்கு இந்தியத் தீவுக் கூட்டங்களைச் சென்றடைந்தார். இந்தியப் பெருங்கடல், நன்னம்பிக்கை முனை வழியாக 1580ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் நாள் அவர் பிளிமத் திரும்பினார். உலகைச் சுற்றிக் கடல் வழியாகப் பயணம் செய்த முதல் ஆங்கில மாலுமி டிரேக்; அஃது ஒரு மாபெரும் சாதனையாக அக்காலத்தில் கருதப்பட்டது.

டிரேக் உலகப்பயணத்தைக் கேள்வியுற்ற ஸ்பானியத் தூதுவர் சொல்லொணக் கோபங்கொண்டார். டெப்ட்போர்டில் நிறுத்தப் பட்டிருந்த டிரேக்கின் கப்பலைக் காண எலிசபெத், ஸ்பானியத் தூதரையும் தம்மோடுகூட வருமாறு அழைத்திருந்தார். கப்பலில் ஏறித் தலைசிறந்த கடற்கொள்ளைக்காரரான டிரேக்கிற்கு ஸ்பானியத் தூதரின் முன்னிலையிலேயே பட்டங்கொடுத்து அரசியார் கௌரவித்தார். அவருடைய கொள்ளைப் பொருள்களில் பத்தாயிரம் பவுன்களை வைத்துக்கொள்ள டிரேக் அனுமதிக்கப் பட்டார். இப் பயணத்திற்கு ஆதரவளித்தவர்கள் ஏனையவற்றைப்

பங்குபோட்டுக்கொண்டனர், அரசியாருக்கும் ஐந்து இலட்சம் பவுன்கள் கிடைத்தன.

டிரேக்கின் கடற்பயணம் ஸ்பெயினுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே மூள இருந்த போரைத் துரிதப்படுத்தும் என்று எதிர்பார்த்தபோதிலும், அடுத்த ஐந்தாண்டுக் காலம் போர் மூளவில்லை; தாமதமாயிற்று. 1585ஆம் ஆண்டில் ஸ்பானியத் துறைமுகங்களிலிருந்த ஆங்கிலக் கப்பல்களை நிறுத்திவைக்க வேண்டுமென ஃபிலிப் ஆணையிட்டார். எலிசபெத் பழிக்குப்பழி வாங்க முடிவு செய்தார். டிரேக்கை அழைத்து, ஸ்பானியக் குடியேற்றப் பகுதிகளைச் சூறையாடும்படி பணித்தார் எலிசபெத். டிரேக் பிளிமத்திலிருந்து புறப்பட்டுக் கேப் வெர்டி தீவுக் கூட்டங்களிலிருந்த இரண்டு நகரங்களைத் தீக்கிரையாக்கினர். அவருக்குத் துணையாக ஃப்ரோபிஷரும் சென்றிருந்தார். பின்னர் அட்லான்டிக் பெருங்கடலைக் கடந்து சாண்டோ டாமிங்கோவைத் தீயிட்டார். ஸ்பானியரிடமிருந்து கார்டஜீனு என்ற ஊரைக் கைப்பற்றிப் பணயமாக வைத்துக்கொண்டார். அங்கிருந்து புறப்பட்டு ஃபிளாரிடா வரை சென்று, செயின்ட் அகஸ்டின் என்ற நகரையும் டிரேக் அழித்தார்; அனைத்து வீடுகளும் வெந்து சாம்பலாயின. பெருங்கொள்ளைப் பொருள்களுடன் டிரேக் பின்னர் நாடு திரும்பினர்.

## (உ) ஆர்மடாவின் தோல்வி

ஸ்பானியக் கப்பற்படைக்கு ஆர்மடா என்று பெயர். ஸ்பெயின் அரசர் ஃபிலிப் இங்கிலாந்தின் அரசியான எலிசபெத்தைத் தாக்க ஆர்மடா என்னும் பெருங் கப்பற்படையை அனுப்பியபோது (1588) இங்கிலாந்தை எலிசபெத் முப்பதாண்டுகள் ஆட்சி செய்திருந்தார். ஸ்பெயினுக்கும் இங்கிலாந்துக்குமிடையே பகைமை பல்லாண்டுகளாக இருந்துவந்ததை நாம் அறிவோம். ஃபிலிப் இங்கிலாந்தைத் தாக்காமல் காலம் தாழ்த்தினமைக்குத் தம்மால் வெற்றி பெற முடியுமா என்ற ஐயப்பாடுதான் காரண மாகும். மேலும் போர் என்று வந்துவிட்டால் சொல்லொணுப் பொருளைச் செலவிட்டேயாக வேண்டும். இறுதியாக, ஃபிலிப் இங்கிலாந்துடன் போரிட முடிவு செய்தமைக்குப் பல்வேறு காரணங்களிருந்தன. கடந்த இருபதாண்டுகளாகவே ஆங்கில மாலுமிகள் ஸ்பானியக் கப்பல்களைக் கொள்ளையடித்தும், ஸ்பானியத் துறைமுகங்களைச் சூறையடித்தும் வந்திருந்தனர். ஆனல், அவ்வனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல அமைந்தது 1585ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளில் டிரேக் நடாத்திய தாக்குதல்

களாம். அவை சொல்லமுடியாத அழிவிற்கு வழிகோலின. மீண்டும், நெதர்லாந்தின் உள் விவகாரத்தில் எலிசபெத்தின் குறுக்கீடு அத்துமீறிப் போயிருந்தது. லீசெஸ்டரின் படையெடுப்புக்குப் பின்னர் எலிசபெத்தின் போக்கு ஸ்பெயினுடன் நட்புறவை நீடிப்பதாகக் காட்டவில்லை. இறுதியாக, போப் பாண்டவர் ஃபிலிப்பைத் தூண்டிப் போரிட்டுப் பிராட்டஸ்டெண்ட் சமயத்தைக் காக்கும் அரசாங்கத்தைத் தகர்க்க எண்ணினர்.

ஸ்காட்டிய மேரி ராணியின் சிரச்சேதம் ஃபிலிப்பின் ஐயப்பாடுகளை நீக்கிவிட்டது. ஆங்கில அரியணையின்மீது மேரியை அமர்த்த அவர் ஒருபோதும் உடன்படவில்லை. பழக்க வழக்கங்களில் மேரி ஃபிரெஞ்சுக்காரியேயன்றி ஸ்பானிய நாட்டைச் சார்ந்தவள் அல்லர். மற்றும் அவருடைய மகன் ஆறும் ஜேம்ஸ் ஸ்காட்லாந்து மன்னராக இருந்தார். எலிசபெத்துக்குப் பின்னர் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகிய இரண்டு இராச்சியங்களுக்கும் வாரிசாக வரப் போகிறவர். அவர் பிராட்டஸ்டென்ட் சமயத்தைச் சார்ந்தவர். ஆனல், தாம் காலமாவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஜேம்ஸைத் தம்முடைய வாரிசாக ஏற்றுக்கொள்ளவில்லை; மறுத்து இருந்தார். தமக்குப் பின்னர் ஆங்கில அரியணைக்கு வரத் தகுதி படைத்தவர் ஃபிலிப்பே என்றும் கோரியிருந்தார். இதற்குப் பின்னரும் ஃபிலிப் தயக்கம் காட்டவேண்டிய அவசியமில்லை அன்றோ! எல்லா ஸ்பானியத் துறைமுகங்களிலிருந்தும் பெரியதொரு கப்பற்படை ஆயத்தப் படுத்தவேண்டுமென ஃபிலிப் அரசர் ஆணையிட்டார்.

இங்கிலாந்தின்மீது ஸ்பானியப் படையெடுப்பிற்கு ஃபிலிப் மன்னர் ஆயத்தம் செய்துகொண்டிருந்த வேளையில்தான் டிரேக் மற்ருெரு தாக்குதலை மேற்கொண்டார். ஸ்பானியத் துறைமுகங்களில் நடைபெறும் போருக்கான ஆயத்தங்களை வேவு பார்க்கும்படி அரசியார் அவரைப் பணித்திருந்தார். ஸ்பானியக் கப்பல்களின் கேந்திரமான கேடிஸ் நகர்மீது டிரேக் பாய்ந்தார். இருபத்துநான்கு கப்பல்களுடன் கேடிஸ் சென்ற டிரேக், நான்கு கப்பல்களுடன் துறைமுகத்துள் நுழைந்தார். டிரேக்கின் தைரியத்திற்கு அவருடைய நம்பிக்கைதான் காரணம். ஸ்பானியரது கப்பல்களைவிட ஆங்கிலக் கப்பல்கள் திறமை வாய்ந்தவை; போர்த்தளவாடங்களை நிரம்பப் பெற்றவை. ஆனல் ஸ்பானியக் கப்பல்களின் போர் முறையோ ஆங்கில முறையிலிருந்து வேறுபட்டிருந்தது. பகைவர்களின் கப்பல்களை ஸ்பானிய கப்பல்கள் மோதி அவற்றை மூழ்கடிக்கும் உத்தியை அவை பொதுவாகக் கைக்கொண்டிருந்தன. ஆனல், பளுவான ஆங்கிலக் கப்பல்களை

அவற்றால் மூழ்கடிக்க இயலாது என்பதை டிரேக் அறிந்திருந்தார். ஸ்பானியக் கப்பல்கள் ஆங்கிலக் கப்பல்களை மோதியபோது டிரேக் அவற்றின்மீது துப்பாக்கிப் படைகொண்டு தாக்கினர். எண்ணற்றவர் இறந்துபட்டனர்; எஞ்சியவர் உயிருக்கு அஞ்சினர்; 1587-ல் நடைபெற்ற இப் போருக்குப பின்னர் மோதித்தாக்கும் முறை கைவிடப்பட்டது.

கேடிஸ் நகரைத் தாக்கியதன் விளைவாக ஆங்கிலேயரிடையே நம்பிக்கை பிறந்தது. டிரேக்கின் நண்பரான ஃபென்னர் (Fenner) என்பார் பன்னிரண்டு ஆங்கிலக் கப்பல்களால் ஃபிலிப்பின் கப்பற் படையையே நாசமாக்க முடியும் என்று நம்பிக்கையைக் கொண்டார். எனினும், அவருடைய நம்பிக்கையை ஆங்கிலேயர் அனைவரும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. நாடு தாக்குதலுக்கு ஆளாகப்போகிறது என்ற அச்சம் பலரை வாட்டியது. அப்போது இங்கிலாந்துக்குத் துணையாக எந்தவொரு நாடும் நிற்கவில்லை. அது ஒரு சிறியநாடு; நிலையான படையும் அதனிடம் இல்லை. ஸ்பானியரது பேரரசு பெரியது; 'சூரியன் அஸ்தமிக்காத பேரரசு என்ற புகழைக் கொண்டது. புத்துலகு நாடுகளின் நாயகனாய் நின்றவர் ஃபிலிப்; பழைய உலகத்தின் பெரும்பகுதியும் அவருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது. 1580ஆம் ஆண்டில் ஸ்பெயின் போர்த்து கல்லைக் கைப்பற்றியதால் அதன் பகுதிகளும் ஸ்பெயினின் ஆதிக்கத் திற்குட்பட்டன. ஸ்பானியரின் காலாட்படையை யாராலும் தோற்கடிக்க முடியாது என்றும் கூறப்பட்டது. இப் படையைத் தலைமைவகித்த பார்மா பிரபுவும் மாபெரும் வீரர். அவருடைய தலைமையில் ஸ்பெயின் இங்கிலாந்தைத் தாக்கத் திட்டமிட்டது.

### ஃபிலிப்பின் திட்டம்

நெதர்லாந்திலிருந்து இங்கிலாந்தை வெற்றி காணவேண்டு மென்பதே ஃபிலிப்பின் திட்டமாகும். பார்மா நெதர்லாந்திலிருந்து 30,000 பேர் கொண்ட படையைத் திரட்டவேண்டும். ஆன்ட்வெர்ப் பில் தம் படைகளை இங்கிலாந்துக்கு ஏற்றிச் செல்லத் தகுதியான படகுகளைப் பார்மா கட்டிமுடித்தார். எனினும் பாதுகாப்புப் படையாகக் கப்பற்படையில்லாமல் இங்கிலாந்து செல்ல முடியாது என்பதையும் பார்மா உணர்ந்திருந்தார். அதன் பயனாகத்தான் ஆர்மடா என்னும் ஸ்பானியக் கப்பற்படை உருவாக்கப்பட்டது. ஸ்பானியரது பெருங் கப்பற்படையால் சிறிய எண்ணிக்கையைக் கொண்ட ஆங்கிலக் கப்பல்களைத் தகர்க்க முடியும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது. அப்போதுதான் பார்மாவின் படையால் இங்கிலாந்தின்மீது தாக்க வழி பிறக்கும்.

மேற்கூறிய திட்டம் தீட்டப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால், அதனைச் செயல்படுத்துவது அவ்வளவு எளிதன்று. ஸ்பானியக் கப்பற்படை எண்ணிக்கையில் மிகுந்திருந்தாலும், தாக்கும் திறனற்றுக் காணப்பட்டது. ஆர்மடாவில் 130 கப்பல்கள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை வாணிகக் கப்பல்கள். அவை போருக்கு ஆயத்தப்படுத்தப்பட்டன. அவற்றில் பொருத்தப்பெற்றிருந்த துப்பாக்கிகள் லேசானவை; எனினும் அவை சரியானபடி பொருத்தப்படவில்லை. துப்பாக்கிகளைப் பயன்படுத்திப் போரிடுவது கோழைத்தனம் என்பது ஸ்பானியரது கருத்தாகும். இவ்வாறு ஆயத்தப்படுத்தப்பட்ட ஸ்பானியக் கப்பல்களைத்தான் டிரேக் முன்னர்த் தகர்த்திருந்தார். இந்த விஷயத்தை ஸ்பானியர் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை; புறக்கணித்துவிட்டனர். பகைவரின் கப்பல்களில் நுழைந்து, நேருக்கு நேர் போரிடப் போவதாக ஸ்பானியர் கனவு கண்டார்கள். அந்த நோக்குடன்தான் கப்பல்களைப் படைவீரர்களே நடாத்தி வந்தார்கள். ஆர்மடாவில் 18,000 படை வீரர்களும் 8,000 மாலுமிகளும் இருந்தனர். மாலுமிகளை அவசியமற்றவர்கள் என்று படை வீரர்கள் கருதினர். ஆர்மடாவின் தானைத் தலைவராக இருந்தவர் மெடீனா சிதோனியா பிரபு (Duke of Medina Sidonio) என்பராவார். அவருக்குப் போர் அனுபவம் குறைவு. கப்பற்படை போர் குறித்து அவருக்கு ஒன்றும் தெரியாது. எனினும் அவர் பல விருதுகளைப் பெற்று மாவீரராகக் கருதப் பட்டவர். உயர்ந்த அதிகாரிக்குத்தான் ஸ்பானியப் படையினர் கட்டுப்படுவர். எனவே உயர்தர அதிகாரியான அவர் ஆர்மடாவின் தலைவராக நியமிக்கப்பட்டது பொருத்தமேயாம்.

### ஆங்கிலப் படை

ஆங்கிலக் கப்பற்படை, ஆர்மடாவினின்றும் பலவகைகளில் மாறுபட்டிருந்தது. முதலாவது, அரசியாருக்குச் சொந்தமாயிருந்த 34 கப்பல்களும் உண்மையிலேயே போர்க் கப்பல்கள். அவற்றில் பளுவான துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. இத் துறையில் அவை ஸ்பானியக் கப்பல்களைவிடத் தகுதி மிக்கவை. அவற்றை எச்சரிக்கையாக ஜான் ஹாக்கின்ஸ் காத்துவந்தார். அக் கப்பல்களில் குறைந்த அளவு துப்பாக்கி மருந்தும், உணவுப் பொருள்களின் பற்றுக்குறையுமே அவற்றின் குறைபாடுகளாகும். இதைத் தவிர மேலும் ஐம்பதிற்கு மேற்பட்ட தனியார்க் கப்பல்களும் போரில் பங்குகொண்டன. இக் கப்பல்களும் ஆர்மடாவைவிட நன்முறையில் போர்த் தளவாடங்களைப் பெற்றிருந்தன.

ஆங்கிலக் கப்பல்களை மாலுமிகளே நடத்தினர்; படைவீரர்களல்லர். அம்மாலுமிகளுக்கு டிரேக்கும் ஹாக்கின்ஸும் நல்ல பயிற்சி கொடுத்திருந்தனர். ஆங்கிலப் படைகளின் தளபதியாக எபிங்ஹாமைச் சார்ந்த ஹோவார்ட் பிரபு நியமிக்கப்பட்டார். ஆனால், ஆங்கிலப் படையில் டிரேக், ஹாக்கின்ஸ், ஃப்ரோபிஷர் போன்றவர்களின் தீரச் செயல்களைக் கண்டிருந்த ஸ்பானியர் அவர் தம் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அஞ்சி நடுங்கினர்.

ஆர்மடா கப்பற்படை 1588ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் சனியன்று ஆங்கிலக் கால்வாய்க்குள் நுழைந்தது. பகைவர்கள் ஸ்பானியரின் கண்களுக்குத் தென்படவில்லை. அடுத்த நாள் காலையில் அவை பிளிமத் துறைமுகத்தை நெருங்கியபோது, அறுபது ஆங்கிலக் கப்பல்கள் ஆர்மடாவை எதிர்த்துத் தாக்கின. ஸ்பானியர் அத்தகைய தாக்குதலை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. ஆங்கிலக் கப்பல்கள் ஆர்மடாவை மோதிப் போரிடாமல் துப்பாக்கியால் சுடத் தொடங்கின. ஸ்பானியரால் சுடமுடியவில்லை. ஏனெனில் அவர்களால் ஆங்கிலக் கப்பல்களின் அருகில் செல்ல இயலவில்லை. போர்தாக்குறைக்கு அவர்களின் கைவசம் இருந்த துப்பாக்கிகளோ மிகக் குறைவு. தாக்கிவிட்ட ஆங்கிலக் கப்பல்கள் தப்பியோடிவிட்டன. அந்த வாரம் முழுதும் ஆர்மடா மெதுவாக ஆங்கிலக் கால்வாயில் ஊர்ந்து நகர்ந்தது. டோர்செட் கடற்கரையிலும், வைட் தீவிலும் இரு மோதல்கள் நிகழ்ந்தன. ஜூலை மாதம் 27ஆம் நாள் கலேக்கருகில் ஸ்பானியர் நங்கூரமிட்டுத் தம் கப்பல்களை நிறுத்தினர். அங்கு மெடீனா சிதோனியா பார்மாவின் வருகைக்காகக் காத்திருந்தார். ஆயினும் என்! டிரேக் அவரைக் காத்திருக்கவிடவில்லை. டிரேக்கிற்கு அடித்தது யோகம். அனுகூலமாக வீசிய காற்றைப் பயன்படுத்திக் கொண்டு ஸ்பானியக் கப்பல்களினூடே தீப்பொறி கொண்ட கப்பல்களை ஏவினார் டிரேக். ஒரு சில ஸ்பானியக் கப்பல்கள் தீக்கிரையாயின. எனினும், ஏனைய கப்பல்கள் நங்கூரத்தை அறுத்தெறிந்துவிட்டு நடுக்கடல் நோக்கி நகர்ந்தன. கலேயிலிருந்து ஸ்பானியர் விரட்டப்பட்டனர்.

### கிரேவ்லைன்ஸ் போர்

1588 ஜூலை 29ஆம் நாள் திங்கட்கிழமை கிரேவ்லைன்ஸ் போர் நடைபெற்றது. ஆங்கிலேயருக்குச் சாதகமாக இம் முறையும் காற்று வீசவே, ப்ளமியக் கடற்கரையிலிருந்து தப்ப ஸ்பானியர் தத்தளித்தனர். தப்பியோடிய ஒவ்வொரு கப்பலையும் ஆங்கிலக் கப்பல்கள் தகர்த்தெறிந்தன. படைவீரர்கள் வெட்டித் தள்ளப்பட்டார்கள். ஸ்பானியரில் எண்ணற்றோர் இறந்துபட்டனர்.

ஆங்கிலத் துப்பாக்கிகளுக்குப் பதில் கூற முடியாமல் திகைத்துப் போயினர் ஸ்பானியர். அதிருஷ்டவசமாக அவர்களுக்குச் சாதக மாக வீசிய காற்றினால் பிளாண்டர்ஸிலிருந்து அவர்களால் தப்ப முடிந்தது. கிரேவ்லைன்ஸ் போரின்போது ஸ்பானியர் இரண்டு மூன்று கப்பல்களையே இழந்திருந்தபோதிலும், கப்பற்படை முழுவதும் படுநாசமுற்றது. தோல்வி உறுதி என்று கண்ட மெடீனா சிதோனியா இங்கிலாந்தினைச் சுற்றிக்கொண்டு அயர் லாந்து செல்வதென உறுதி பூண்டார். அயர்லாந்தும் ஸ்பெயினைப் போன்றதொரு கத்தோலிக்க நாடாகும். எனினும் கிரேவ்லைன்ஸ் போரில் தாக்குதலுக்கு இரையான அவருடைய கப்பற்படையால் நீண்ட தூரப் பயணம் செய்ய இயலவில்லை. சிதைந்திருந்த கப்பல்களில் நீர் நுழைந்து தொல்லை கொடுத்தது போதாதென்று, மூண்ட பெரும் புயலால் தங்க இடமின்றி ஸ்பானிய ஆர்மடா தவித்தது. பெரும்பாலான கப்பல்கள் சூறாவளிக்கு இரையாயின. எஞ்சி நின்றவை ஸ்காட்லாந்து கடற்கரையையோ அன்றி அயர் லாந்து கடற்கரையையோ சென்றடைந்தன. அயர்லாந்தில் நூற்றுக்கணக்கான ஸ்பானியப் படைவீரர்கள் கொல்லப்பட்டார் கள். கொலைக்குக் காரணமானவர்கள் அயர்லாந்தின் நாட்டுக் குடிமக்கள். அவர்கள் காட்டுமிராண்டிகள். 130 கப்பல்களில் ஸ்பெயின் திரும்பியவை ஏறத்தாழ ஐம்பது கப்பல்களேயாகும். ஆர்மடா தோல்வியுற்றது.

### ஆர்மடாவின் விளைவுகள்

ஆர்மடாவின் தோல்வி, இங்கிலாந்தின் திறமையை வெளிக் காட்டியது. இங்கிலாந்து முதன்மையானதொரு நாடாக இனிக் கருதப்படலாயிற்று. இங்கிலாந்தைக் கைப்பற்றக் கனவு கண்ட ஃபிலிப்பின் கதை பகற்கனவாயிற்று.

ஆர்மடாவின் தோல்விக்குப்பின், பகைவரற்ற நிலை ஏற்பட்ட தால் இங்கிலாந்தில் பாராளுமன்றத்தின் அதிகாரம் பெருகி வளர வாய்ப்புக் கிட்டியது.

கத்தோலிக்கச் சமயம் இங்கிலாந்துக்குள் மீண்டும் நிலைபெற முடியாது என்பதை ஆர்மடாவின் தோல்வி உறுதிப்படுத்தியது.

இங்கிலாந்தில் ஆங்கிலிகன் திருச்சபையே நீடிக்கும் என்பதும் உறுதியாயிற்று.

ஆர்மடாவின் தோல்வி டச்சியரின் சுதந்திரத்தைக் காத்தது. ஃபிரான்சில் ஹென்றி நவாரின் ஆட்சியை உறுதிப்படுத்த இத்

தோல்வி வழிகாட்டியது. ஸ்பெயின் அரசர் ஃபிலிப் கைஸ் குடும்பத்தினருக்கு நண்பர். அவர்கள் ஃபிரான்சின் அரசராக முடியாது என்பதும் உறுதியாயிற்று.

ஸ்பெயின் பேரரசு நிலையிலிருந்து படிப்படியாகத் தாழ்ந்து போகத் தொடங்கியதும் ஆர்மடாவின் தோல்விக்குப் பின்னர் தான்.

இங்கிலாந்து தலைநிமிர்ந்து கடல் ஆதிக்கம் செய்து கடலரசி எனப் பெயர் பெற ஆர்மடாவின் தோல்வி வழிவகை செய்தது.

## (ஊ) எலிசபெத் ராணியாரின் இறுதிக்காலம்

இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் இடையே ஏற்பட்ட கடற் போர், எலிசபெத்தின் மரணத்திற்குப்பின் 1604ஆம் ஆண்டுதான் முடிவுற்றது. இப் போரைத் (1588—1604) தொடர்ந்து செயல் படுத்துவது ராணியின் விருப்பத்திற்கு மாறுபட்டதாகும். அவருக்குப் போரினால் பெரிதும் பொருட்சேதம் விளைவிக்கப்படும் என்பது நன்கு தெரியும். ஆனால், ஆர்மடாவை எதிர்த்த போரின் முதல் பிரிவில் இங்கிலாந்து வென்றபின், 1589ஆம் ஆண்டு ஸ்பெயினை எதிர்த்து இங்கிலாந்து தாக்கியது. போர்த்துக் கலிலிருந்து ஸ்பெயின் நாட்டவரை வெளியேற்றுவதற்காக, இங்கிலாந்துப்படை போர்த்துக்கல் சேரத் தீர்மானிக்கப்பட்டது. டிரேக் என்னும் ஆங்கிலத்தளபதியின் தலைமையில் ஸ்பெயின் ஆர்மடாவைவிடப் பெரிய ஆங்கில ஆர்மடா தயாரிக்கப் பட்டது. ஆங்கில ஆர்மடாவில் 15,000 போர்வீரர்கள் இருந்தனர். ஆங்கிலப்படை மிதந்து வந்து கருன்னா என்ற இடத்தை அடைந்து அதை அழித்தது; பின் அது லிஸ்பனை நோக்கிச் சென்றது. ஆனால், லிஸ்பெனிலிருந்து ஆங்கிலப்படை வெளியேற்றப்பட்டது. டாம் அந்தோனியோ என்னும் போர்த்து கீசியருக்கு மீண்டும் ஆட்சியை ஸ்பானியர்களிடமிருந்து மீட்டுக் கொடுக்கப் போர்த்துகீசியருடைய பேராதரவு இல்லை. எனவே, டாம் அந்தோனியோவுக்கு உதவச்சென்ற ஆங்கில ஆர்மடா தோல்வியை அடைந்து இங்கிலாந்து திரும்பியது.

எலிசபெத் மிகவும் கோபம் அடைந்தார். இங்கிலாந்து 10,000 போர் வீரர்களையும், அதிக அளவு பணத்தையும் இழந்தது. டிரேக் 5 ஆண்டுகளாக மதிப்பிழந்தார். 1591ஆம் ஆண்டு கடற்படைத் தளபதி தாமஸ் ஹோவார்ட் என்பவர் சர் ரிச்சர்ட் கிரின்வில் என்பவருடன் அசோர்ஸ் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார். ஸ்பானியர்களின் பலத்தை அறிந்ததும்

ஆங்கிலேயர்கள் அவ்விடத்தைவிட்டு வீடு திரும்பினர். ஆனால், சர் ரிச்சர்ட் கிரின்வில் என்பவர் ஒரே ஒரு ஆங்கிலக் கப்பலோடு ஸ்பானியக் கப்பல்களை எதிர்த்துப் போரிடத் தயாராக இருந்தார். ஒருநாள் முழுவதும் ஆங்கிலேயக் கப்பல் போரிட்டது; பின் அது சரணடைந்தது.

இங்கிலாந்து ராணி எலிசபெத் தம்மைப் போற்றுபவர்களைக் கொண்ட ஓர் அவையை வைத்திருந்தார். எசக்ஸ் கோமகன் ராபர்ட் டெவெரெக்ஸ் இங்கிலாந்து பிரபுக்களில் ஒருவர். இளமையும் அழகும் உடைய அவர் எலிசபெத்தைக் கவர்ந்தார். ஐம்பத்தைந்து வயதினை அடைந்த ராணியார் இவருக்குச் சில சலுகைகள் செய்தார். ஆனால், அரசாங்கக் கொள்கைகளை நிர்ணயிக்கும் பொறுப்பை ராபர்ட்டுக்கு ராணி கொடுக்கவில்லை.

மீண்டும் 1595, 1596, 1597 ஆகிய மூன்று ஆண்டுகளில் எலிசபெத் ஸ்பானியர்களுக்கு எதிராக மீண்டும் போரைப் புதுப்பித்தார். ஹாகின்ஸ் என்பவரும் டிரேக் என்பவரும் ஸ்பானியர்களிடமிருந்த மேற்கு இந்தியத் தீவுகள்மீது 1595ஆம் ஆண்டு போர் தொடுத்தனர். ஆனால், இம் முயற்சி தோல்வி அடைந்தது. பின்பு இந்த இரு ஆங்கிலேயத் தளபதிகளும் இறந்தனர்.

1596ஆம் ஆண்டு வால்டர் ராலே, தாமஸ் ஹோவார்ட், எபிங்காமைச் சேர்ந்த ஹோவார்ட் பிரபு ஆகிய மூவர் தலைமையில் ஆங்கிலேயப்படை இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டது. 8,000 போர்வீரர்களைக் கொண்ட இந்த ஆங்கிலப் படைக்கு எசெக்ஸ் தலைமை தாங்கினர். காடிஸ் துறைமுகத்தை இந்த ஆங்கிலேயக் கப்பற்படைக் கைப்பற்றியது. இந்த இடத்தில் ஆங்கிலேயர்கள் சென்று அதனை எரித்தனர். 1597-ல் அசோர்ஸ் என்ற இடத்திற்கு எசெக்ஸ் என்பவரும் ராலே என்பவரும் சென்றனர். ஆனால், அவர்கள் வெற்றி அடையாமல் இங்கிலாந்து திரும்பினர்.

ஆங்கிலேயக் கடற் கொள்ளைக்காரர்கள் தொடர்ந்து ஸ்பானியர்களைத் தாக்கினர்; மேலும் பல தீங்குகளையும் அவர்கள் செய்தனர். இரண்டாம் ஃபிலிப்பு 1598-ல் இறந்தார்.

அயர்லாந்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஏற்பட்ட போராட்டத்தை ஸ்பானியர்கள் பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்தனர். 1599-ல் எசெக்ஸ், எலிசபெத்தின் அனுமதியைப் பெற்று அயர்லாந்தின்மீது படையெடுத்தார். ஆனால், அவருக்கு அங்கு வெற்றி கிடைக்கவில்லை. ஓர் உடன்படிக்கையைச் செய்து விட்டு அவர் இங்கிலாந்து திரும்பினர். தமக்குக் கொடுக்கப்

பட்ட கடமையிலிருந்து அவர் தவறியதால் அவர் தம்முடைய பதவியை இழந்தார். ஆனால், அவர் லண்டன் மக்களைத் தூண்டுவித்துக் கிளர்ச்சிசெய்தார். அவருடைய கிளர்ச்சி தோல்வி அடைந்தது. தம்மை எதிர்த்த காரணத்தால் எலிசபெத் அவருக்கு மரண தண்டனையை 1601-ல் பிறப்பித்தார்.

எசெக்ஸின் மரணத்திற்குப் பிறகு இங்கிலாந்து அவையின் மகிமை குறைந்தது. சர் ராபர்ட் சிசில் என்பவர் மட்டும் மிக முக்கியமானவராக இருந்தார். ராணிக்குப் பின் முதலாம் ஜேம்ஸ் பட்டத்திற்கு வர அவர் திட்டங்களைத் தீட்டினார்.

1601ஆம் ஆண்டு எலிசபெத் தம்முடைய கடைசிப் பாராளுமன்றத்தைக் கூட்டினார். இப் பாராளுமன்றத்தினர் முற்றுரிமை (Monopoly) பற்றிக் கேள்வி எழுப்பினர். இதுவரை அரசி தமக்குப் பிரியமானவர்களுக்குச் சில பொருள்களின்மீது முற்றுரிமை வழங்கி வந்தார். பாராளுமன்றத்தினர் இதனை விரும்பவில்லை. இக்குறையைத் தாம் நிவர்த்திசெய்வதாக ஒரு செய்தியை எலிசபெத் பாராளுமன்றத்திற்கு அனுப்பினார்; பின் தாமே பாராளுமன்றத்திற்கு வந்து தம்முடைய பேச்சுத் திறமையால் அரசருடைய உரிமைகளை நிலைநிறுத்தினார்.

எலிசபெத்தின் இறுதிக் காலத்தில் பியூரிடன் கருத்துகள் பரவின. ஸ்காட்லாந்தில் ஏற்பட்டதுபோல், புனித சபை அரசாங்கம் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பியூரிடன்கள் விரும்பினர். கடவுள் வழிபாட்டில் தூய்மையை அவர்கள் வலியுறுத்தினர். அவர்களின் கருத்தைப் பாதிரியார்களில் பலர் ஏற்றுக்கொண்டனர். எனவே, அவர்களின் இயக்கம் பரவ ஆரம்பித்தது. கேம்பிரிட்ஜில் பேராசிரியராக இருந்த தாமஸ் கார்ட்ரைட் பியூரிடன்களின் தலைவராக விளங்கினார். ராபர்ட் பிரௌன் என்பவர் பியூரிடன்களின் மற்றொரு தலைவரானார்; அவரைப் பின்பற்றியவர்கள் பிரௌனிஸ்டுகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் 'கன்வென்டிகல்' என்று சொல்லப்படும் மதக் கூட்டங்களைக் கூட்டினர்.

இவ்வாறான பியூரிடன் இயக்கங்களை எலிசபெத் விரும்பவில்லை. எனவே, அவர் கான்டர்பரி ஆர்ச் பிஷப்பான கிரின்டல் என்பவரை அழைத்துப் பியூரிட்டன்களை எதிர்த்து நடவடிக்கை எடுக்கச் சொன்னார். ஆனால், கிரின்டல் பியூரிடன்களை ஆதரித்தார். எனவே, பியூரிடன்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க அவர் விரும்பவில்லை. எனவே எலிசபெத், கிரின்டலை வேலையிலிருந்து நீக்கினார்.

பின், பியூரிடன்களுக்கும் பிஷப்புகளுக்கும் இடையே பூசல் ஏற்பட்டது. பிஷப்புகளை எலிசபெத் ஆதரித்தார். பியூரிடன்கள் கால்வின் என்பவருடைய கருத்துகளைப் பின்பற்றினர். ஜான் வைட்கிளிஃப்ட் கான்டர்பரியின் ஆர்ச் பிஷப்பாக நியமிக்கப் பட்டார். இவர் திருச்சபையின் அரசாங்கத்தை ஆதரித்த பியூரிடன்களை எதிர்த்தார். எனவே, பியூரிடன் கருத்துகளைத் தடை செய்தார். ஆனால், பியூரிடன்கள் 1588ஆம் ஆண்டு தமக் கென்று தனி அச்சு அலுவலகத்தை எவருக்கும் தெரியாவண்ணம் ஏற்படுத்தினர். மேலும், சிறு காகிதங்களில் தங்கள் கருத்துகளை அச்சடித்து அவற்றைப் பலரிடம் கொடுத்தனர்.

1593ஆம் ஆண்டு பியூரிடன்களை எதிர்த்துச் சட்டம் ஒன்றைப் பாராளுமன்றம் ஏற்படுத்தியது. இச் சட்டம் பியூரிடன்களைக் கண்டித்தது. எனவே, பியூரிடன்கள் இச் சட்டத்தின்கீழ்ப் பிடி பட்டனர்; பல பியூரிடன்கள் கொல்லப்பட்டனர்; பல பியூரிடன்கள் ஹாலந்துக்குச் சென்றனர். ஃபிரான்சிஸ் பேகன் பியூரிடன்களின் கருத்துகளை எதிர்த்தார்.

1603ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் எலிசபெத்தின் உடல்நிலை மோசமாகியது. அந்த ஆண்டு மார்ச் மாதம் அவர் இறந்தார். அவர் இறக்கும்போது அவருடைய வயது 72. அவருக்குப் பின் முதலாம் ஜேம்ஸ் ஆங்கிலேய அரசரானர்.

## (எ) எலிசபெத் காலத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி

எலிசபெத் காலத்தில் ஆங்கில இலக்கியத்தில் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டது. இக் காலத்தில் பல புலவர்கள் வாழ்ந் திருந்தார்கள். அவர்களில் மிகப்பழமையானவர்கள் சர் ஃபிலிப் சிட்னி என்பவரும், எட்மண்ட் ஸ்பென்சர் என்பவரும் குறிப்பிடத் தக்கவர்கள். ஸ்பென்சர் மத்தியகால நிகழ்ச்சிகளைத் தம் பாடல்களில் எழுதியுள்ளார். அவர் போரைப்பற்றியும், இடை யர்களைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். 'தி பாரி குயீன்' அவர் எழுதிய பாடல்களில் மிகவும் முக்கியமானதாகும்.

மேலும், இக் காலத்தில் சிறந்த நாடக வளர்ச்சி ஏற்பட்டது. மத்திய காலத்தில் ஆங்கில நாடகங்கள் கில்டுகளில் முக்கிய நகரங்களில் நடிக்கப்பட்டன. ஆனல், எலிசபெத்தின் காலத்தில் பல்கலைக்கழகத்தினர் நாடகங்கள் எழுத ஆரம்பித்தனர். குறிப்பாக லண்டனில் அதிக நாடகங்கள் எழுதப்பட்டன. பீல், கிரீன், நாஷ், மார்லோ ஆகிய நான்கு நாடக ஆசிரியர்களும் ஷேக்ஸ்பியரின் முன்னேடியாக இருந்தனர்.

மார்லோவின் முழுப்பெயர் கிரிஸ்டோபர் மார்லோ என்பதாகும். அவர் 1564 முதல் 1593 வரை வாழ்ந்து வந்தார். அவர் ஷேக்ஸ்பியர் பிறந்த ஆண்டு பிறந்தார். அவருடைய சிறந்த நாடகங்கள் ஷேக்ஸ்பியரின் நாடகங்களுக்கு முன்னோடியாக இருந்தன. மார்லோவின் 'ஜியூ', ஷேக்ஸ்பியரின் 'ஷைலக்' என்ற பாத்திரத்திற்கு முன்னோடியாக அமைந்தது. மார்லோவின் நடை மிகச் சிறந்ததாகும். அவருடைய நாடகங்களில் சில மிக அழகிய வரிகள் காணப்படுகின்றன.

வில்லியம் ஷேக்ஸ்பியர் 1564 முதல் 1616ஆம் ஆண்டு வரை வாழ்ந்து வந்த சிறந்த ஆங்கில நாடக ஆசிரியர் ஆவார். அவர் ஒரு வியாபாரியின் மகன்; அவர் ஓர் இலக்கணப் பள்ளிக் கூடத்தில் கல்விக் கற்றார்; பின் அவர் மணம் செய்துகொண்டார். தம்முடைய முப்பதாவது வயதுக்குள் அவர் லண்டனுக்கு வந்து புகழ் அடைந்தார். முதலில் அவர் தியேட்டரில் நடிகராக இருந்தார். பின்பு அவர் சில நாடகப் பாத்திரங்களுக்கு வசனம் எழுதினார். அவர் லண்டனுக்கு முதலில் வந்தபொழுது சத்திரங் களின் முற்றத்தில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. பிறகு மூடப்பட்ட தியேட்டர்கள் கட்டப்பட்டன. முதல் தியேட்டர்கள் நகர்ப்புறங் களில் கட்டப்பட்டன. நடிகர்கள் குறிப்பிட்ட வேடத்திற்குத் தகுந்த உடை அணிந்தனர்; அக் காலத்தில் பெண் நடிகர்கள் இல்லை.

ஷேக்ஸ்பியரின் முதலாவது நாடகம் 'லவ்ஸ் லேபர் லாஸ்ட்' (Love's Labour Lost). 'ரோமியோ அண்டு ஜூலியட்' (Romeo and Juliet) என்பதும் ஷேக்ஸ்பியரின் முதல் நாடகங்களில் ஒன்றாகும். 'நான்காம் ஹென்றி' (Henry IV), 'இரண்டாம் ரிச்சர்ட்' (Richard II), 'மூன்றாம் ரிச்சர்ட்' (Richard III), 'கிங் ஜான்' (King John) என்னும் நான்கு நாடகங்களும் ஷேக்ஸ பியரால் எழுதப்பட்டவையாகும். ஷேக்ஸ்பியர் எழுதிய முக்கிய மான 'காமெடிகள்' (Comedies) என்று அழைக்கப்படும் இன்ப மான முடிவை உடைய நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை 'தி மெர்ச்சன்ட் ஆப் வெனிஸ்' (The Merchant of Venice), 'எ மிட் சம்மர் நைட்ஸ் டிரீம்' (A Mid Summer Night's Dream), 'டுவல்த் நைட்' (Twelfth Night), 'ஆஸ் யு லைக் இட்' (As You Like It) என்னும் நான்கு நாடகங்களாகும். 1599 முதல் 1609 வரை ஷேக்ஸ்பியர் துயர நாடகங்களை (Tragedies) எழுதினார். அவை 'ஜூலியஸ் சீசர்' (Julius Ceasar), 'ஹாம்லெட்' (Hamlet), 'மாக்பெத்' (Macbeth), 'கிங் லியர்' (King Lear), 'அந்தோனி அண்டு கிலியோபாட்ரா' (Antony and Cleopatra) என்ற

நாடகங்களாகும். தம் வாழ்வின் இறுதிக்காலத்தில் 'சிம்பலின்' (Cymbeline), 'எ வின்டர்ஸ் டேல்' (A Winter's Tale), 'தி டெம்பஸ்ட்' (The Tempest) என்ற நாடகங்களை ஷேக்ஸ்பியர் எழுதினர்.

ஷேக்ஸ்பியரின் முக்கிய நாடகப் பாத்திரங்களான ஹாம்லெட் (Hamlet), லியர் (Lear), லேடி மாக்பெத் (Lady Macbeth), ஷைலக் (Shylock) முதலியவை சிறந்த படைப்புகளாகும். தம்முடைய நாடகப் படைப்புகளுடன், சிறந்த கவித்திறமையையும் ஷேக்ஸ்பியர் வெளிப்படுத்தி உள்ளார். நாடகங்களைப் பார்ப்பவர்கள், பாத்திரங்களோடு தங்களை இணைத்துக்கொண்டு துன்பத்தையும் இன்பத்தையும் அடையச் செய்யும் அளவு ஷேக்ஸ்பியர் தம்முடைய தனி நாடகத் திறமையைக் காட்டியுள்ளார்.

லண்டன் நகரத்து மக்களின் வாழ்க்கையை நாடகங்களில் வெளிப்படுத்திய ஷேக்ஸ்பியர் தம்முடைய சொந்த ஊரான வார்விக் ஷயரையும் மறக்கவில்லை.

டியூடர் (Tudor) மன்னர்களின் வரலாற்றில் ஏற்பட்ட அரசியல், மதப் பிரச்சினைகளை ஷேக்ஸ்பியர் எழுதவில்லை. கத்தோலிக்கர்களுக்கும் பிராடெஸ்டென்ட்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட சண்டைகளைப்பற்றி அவர் தம்முடைய நாடகங்களில் வெளிப்படுத்தவில்லை.

ஷேக்ஸ்பியர் தம்முடைய நாட்டுப்பற்றை நாடகங்களில் காட்டியுள்ளார். அவர் எல்லாக் காலத்திற்கும் ஏற்ப நாடகங்களை எழுதினர். அவருடைய நாடகங்கள் அவர்காலத்துச் சமுதாயத்தைப்பற்றி நமக்கு விளக்குகின்றன. எலிசபெத் காலத்துப் பணக்காரச் சமுதாயத்தின் பிரபுக்களை அவர் தம்முடைய நாடகங்களின் பாத்திரங்களாக அமைத்துள்ளார்; பிரபுக்களின் ஆடம்பர வாழ்க்கையை அவர் தெளிவாக வருணித்துள்ளார்.

எலிசபெத் காலத்தில் இசை நல்ல வளர்ச்சி பெற்றது. மக்கள் இசையைப் பெரிதும் விரும்பினர். ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலும் இசை பயன்படுத்தப்பட்டது. பாடலும் நடனமும் டியூடர்கள் காலத்தில் முக்கியத்துவம் பெற்றன. பாடல் புலவர்கள் (Lyric poets) எலிசபெத் காலத்தில் வாழ்ந்தனர். பென் ஜான்சென் (Ben Johnson) ஒரு சிறந்த பாடல் புலவர். ஷேக்ஸ்பியரும் சிறந்த பாடல்களை எழுதியுள்ளார்.

**சமூக மாற்றங்களும் தொழில் மாற்றங்களும்**

எலிசபெத் காலத்தில் சில சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டன. தேசியத் திருச்சபை ஏற்படுத்தப்பட்டது; சிறந்த நாடகங்கள் இயற்றப்பட்டன; விரோதிகள் தோற்கடிக்கப் பட்டனர்; சமுதாயத்தில் பிரபுக்கள் சிறந்த வளர்ச்சி அடைந்தனர்.

எலிசபெத் காலத்தில் பிரபுக்களும், வியாபாரிகளும் சலுகைகள் பல பெற்றனர். அவர்கள் சிறந்த மாளிகைகள் கட்டி அதில் வசித்து வந்தனர்.

பிரபுக்களுக்குப் பிறகு சிறிய பிரபுக்கள் (Squires) சமுதாயத்தில் முக்கிய நிலையில் இருந்தனர். அவர்கள் 'ஜஸ்டிஸ் ஆஃப் பீஸ்' (Justice of Peace) என்று அழைக்கப்பட்டு நீதி நிர்வாகம் செய்து வந்தனர். உள்நாட்டில் மாஜிஸ்டிரேட்டுகளாகச் சம்பளம் இல்லாமல் பணியாற்றினர். அவர்கள் சத்திரங்களுக்கு லைசென்சு கொடுத்தனர்; சாலைகளைப் பரிபாலித்தனர்.

அக் காலத்தில் வியாபாரம் பெருகியது. லண்டன் நகரம் சிறந்த வியாபார வளர்ச்சி மிக்க நகரமாயிற்று. அதனுடைய ஜனத்தொகை ஐந்து மடங்கு பெருகிற்று. லண்டன் நகர வியாபாரிகளும் பிரிஸ்டலின் வியாபாரிகளும் இங்கிலாந்தின் அயல்நாட்டு வியாபாரத்தில் மிகவும் முக்கியப் பங்கேற்றனர். கிழக்கிந்தியக் கம்பெனி 1600ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், இங்கிலாந்தில் துணித் தொழிற்சாலையைத் தவிர மற்றத் தொழிற்சாலைகள் (நிலக்கரி, உப்பு போன்றவை) அதிக வளர்ச்சியை 1550 முதல் 1625 வரை அடைந்தன.

இங்கிலாந்து மக்களில் ஆறில் ஐந்து பங்கு மக்கள் விவசாயத்தைத் தொழிலாக மேற்கொண்டிருந்தார்கள். சில நிலச்சொந்தக்காரர்கள் தங்கள் நிலங்களைத் தாங்களே உழுதனர். அவர்களில் சிலர் ஆடுகள் வளர்ப்பதற்காகத் தங்கள் நிலங்களைப் பயன்படுத்தினர். ஆனால், நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.

கிராமங்களில் வீடுகளில் நூல் நூற்றல் போன்ற சிறு தொழில்கள் செய்யப்பட்டன. ஒவ்வொரு கிராமத்தின் தேவைகள் அந்தக் கிராமச் சிறுதொழில் வளர்ச்சியால் நிறைவேற்றப் பட்டன. தன்னிறைவு பெற்ற கிராமங்கள் அதிகமாக இருந்தன. உணவு, உடை, வீடு போன்ற முக்கியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

எலிசபெத் காலத்தில் மூன்று முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. கில்டு முறை (Guild System) நீக்கப்பட்டது. என்குலோசர் (Enclosure) முறை பயன்படுத்தப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. என்குலோசர் முறையால் கம்பளி உற்பத்தி அதிகமாயிற்று; நிலங்கள் ஆடு வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன; எனவே, நிலமற்ற விவசாயிகள் வேலை இழந்தனர். மேலும், மடங்கள் அழிக்கப்பட்டதாலும், தனிப்பட்ட போர்முறை (Private Warfare) நீக்கப்பட்டதாலும், மக்கள் தொகை அதிகமான காரணத்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெரிதும் ஏற்பட்டது. எனவே, 'பொருளாதார நெருக்கடி' தோற்றுவிக்கப்பட்டது.

ஆங்கில அரசியின் நேரிடையான மேற்பார்வையில் இருந்த தேசியத் தொழில்முறை தோன்றியது. இம் முறை ஏற்படுத்தப் படப் பெரிதும் துணைபுரிந்தவர் சிசில் எனப்படுபவராவார். தொழிற் சட்டங்கள் 1563ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. இச் சட்டத்தின்மூலமாக எந்தத் தொழில் செய்பவரும் விவசாயத்தில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இச் சட்டம் தொழிலாளர்கள் வேலை செய்யும் நேரத்தை நிர்ணயித்தது. தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு முன் ஏழு ஆண்டுகள் செய்யப்பட்ட தொழிற் பயிற்சியை இச் சட்டம் புதுப்பித்தது.

15[illegible], 1572, 1598 ஆகிய மூன்று ஆண்டுகளில் ஏற்படுத்தப் பட்ட ஏழைகளுக்கு உதவும் சட்டங்கள் 1601 ஆம் ஆண்டு ஏறபட்ட ஏழைச் சட்டத் தொகுப்பாக (Poor Law Code) மாறியது. இந்தச் சட்டத் தொகுப்பின்கீழ், திறமையற்ற ஏழைகளுக்குப் பராமரிப்பும் பாதுகாப்பும் கிடைத்தன; ஏழைக்குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது; திறமை உள்ள வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைத்தது; சோம்பேறிகள் சீர்திருத்தப் பள்ளிகளிலும் தொழில் கற்பிக்கும் சிறைச்சாலைகளிலும் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டனர். பாரிஸ்கள் (Parish) இம் முயற்சிகளில் ஈடுபட வேண்டியதாயிற்று. இப் பணியை மேற்பார்வை செய்ய மேற்பார்வையாளர்கள் (Overseers) வேலையில் அமர்த்தப் பட்டார்கள். உண்மையாக ஏழைகளாக இருப்பவர்களுக்கு இவ் வாறான ஏழை நிவாரணச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. நல்ல உடல் வலிமை உடைய சோம்பேறிகளும், குற்றவாளிகளும் நாட்டில் நடமாடப் பொதுவாகப் அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும், போலீஸ்காரர்கள் இல்லாத சமயங்களில் திருடர்களாலும் நடமாடும் குற்றவாளிகளாலும் மக்களுக்குப் பெருந்தீங்கு விளைவிக்கப்பட்டது.